தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிருவாக அறிக்கை – 2019

NATIONAL LIBRARY
NLSL OF SRI LANKA

பொருளடக்கம

தொலை நோக்கு / பணிக்கூற்று / நோக்கமும் இலட்சியமும்	65
நிறுவனத்தின் நோக்கமும்	66
அலுவலக ஊழியர் விபரம்	68
ஊழியர் பயிற்சி	72
நூலீட்டற் பிரிவு	75
வாசகர் சேவைப் பிரிவு	78
தகவல் தொழில்நுட்பப் பிரிவு	80
நூற்பட்டியற் கட்டுப்பாட்டுச் பிரிவு	82
பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தற் பிரிவு	86
நூலக ஆய்வுப் பிரிவு	90
எண்மய நூலக ஒன்றியம்	92
விரிவாக்கற் சேவைப் பிரிவு	93
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு	100
வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு	104
நூலக கூட்டுறவுப் பிரிவு	114
தந்திரோபாய திட்டமிடற் பிரிவு	117
நிருவாகப் பிரிவு	119
பராமரிப்புப் பிரிவு	121
நிதிப்பிரிவு	122
உள்ளகக் கணக்காய்வு	123
முடிவுரை	125
நிதி அறிக்கை 2019	209
கணக்காய்வு பணிப்பாளர் அறிக்கை 2019	261

தலைவரின் செய்தி

அரச திறைசேரியில் இருந்து வருடாந்தம் கிடைக்கும் நிதி ஒதுக்கீடு மற்றும் வேறு வழிகளில் கிடைக்கும் வருமானங்களைக் கொண்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் நோக்கத்தையும் குறிக்கோளையும் நிறைவேற்றுவதற்கு 2019 ஆம் ஆண்டில் சகல பிரிவுகளினாலும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அச்செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கௌரவ கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கு எனது மனபபூரவமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இச்செயற்பாடுகளை நன்கு நிறைவேற்றியமைக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கும், சிரேஷ்ட அலுவலர்கள் குழாத்தைச் சார்ந்த சகல அலுவலர்களுக்கும், இதை தொகுத்து வழங்கிய மூலோபாயத் திட்டமிட பிரிவின் பிரிவுத் தலைவர் உட்பட சகல ஊழியர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

சேவைகள் சபையின் மூலம் பொது நூலகங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற டிஜிட்டல் நூலக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இலங்கைத் தேசிய நூலகத்தையும் ஒரு தரப்பாக தெரிவு செய்துள்ளதுடன், அதற்குத் தேவையான கணினித் தொகுதி மற்றும் உபகரணங்களை டிஜிட்டல் நூலகத்திற்கு இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் வெளியிடப்படுகின்ற வெளியீடுகளுக்கான சர்வதேச தராதர இலக்கத்தை (ஐளுடீ, ஐளுளுே, ஐளுஆே) வழங்கும் தேசிய மத்திய நிலையமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை திகழ்வதுடன், அதன் சேவைகளை விரிவாக்கும் நோக்கில் இணையத்தளம் ஊடாக தராதர இலக்கத்தை வழங்குவதற்கான வழிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சபையினால் மிக நீண்ட காலமாக இலக்கிய பெறுமதி வாய்ந்த நூல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ்வருடத்தில் புத்சரண என்ற நூலின் தொகுப்பு நடவடிக்கைகள் முடிவுற்று அதனை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக பல செயல்திட்டங்களை இவ்வருடத்தில் முன்னெடுக்கக்கூடியதாக இருந்ததுடன், இவற்றை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய தலைவர், பணிப்பாளர் சபை, ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபையின் சகலருக்கும், இவ் அறிக்கையை தயார் செய்த மூலோபாயத் திட்டமிடல் பிரிவின் தலைவர் உட்பட ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யு. சுனில்

பணிப்பாளர் நாயகம்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிருவாக அறிக்கை – 2019



தொலை நோக்கு:

முழு மக்களுக்கும் நூலக தகவல் சேவைக்கு அனுமதி வழங்கும் தேசிய ஞான (அறிவு) கேந்திர நிலையமாக இருத்தல்

குறிக்கோள் :

அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் மக்களின் அறிவுக்கான ரிமையைப் பாதுகாத்தல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் , நூலக சேவையின் வினைத்திறனுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பாவனையை ஊக்குவித்தல், நூல் பட்டியலாக்க வசதிகளை வழங்குதல் மற்றும் நூல் வெளியீட்டிற்கு அநுசரணை வழங்குதல்

இலக்கும் நோக்கமும் :

- இலங்கையில் நூலகங்கள், தகவல் மற்றும் அதனுடன் இணைந்த சகல சேவைகளின் பொருட்டும் தலைமைத்துவம் வழங்குதல்
- நாட்டின் உள்ளேயோ அல்லது அதற்கு வெளியிலோ எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட, அல்லது வேறுவிதமாக வெளியிடப்பட்ட நூலக சாதனங்கள் தொடர்பாக பரிபூரணமான தேசிய சேகரிப்பை ஏற்படுத்துதல்.
- நூற்பட்டியற் கட்டுப்பாடு, ஆவணவாக்கற் சேவையைத் தாபித்து கொண்டு நடத்துதல்
- நூலகம் மற்றும் தகவல் சேவை தொடர்பான கல்வி, பயிற்சி மற்றும் தொழிற் துறை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் நியமங்களை உருவாக்குதல்.
- உள்நாட்டு நூலக அபிவிருத்தியின் பொருட்டான மனித வள ஒழுங்கமைப்பு மற்றும் பௌதீக வள அபிவிருத்தி
- உள்நாட்டு நூல் வெளியீட்டுக்கு உதவுதலும் மற்றும் வாசிப்பு அபிவிருத்தியும்.
- நூலக தகவல் சேவையின்போது தகவல் தொழில் நுட்பப் பாவனையை ஊக்குவித்தல்.
- நூலக தகவல் துறை தொடர்பாக தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்களுடன் கூட்டுறவை அபிவிருத்தி செய்தல்
- புல்வேறுபட்ட மக்கட் பிரிவின் கலாசாரம் மற்றும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அந்நியோன்யமாக இணைந்து வாழ்வதை உறுதிப்படுத்தும் விதத்தில் நூலக தகவல் சேவைகளை ஒழுங்கமைத்தல்
- சிறப்பிலக்கிய ஆய்வு வேலைகளின்போது தேவைப்படும் வளம்கள், சேவைகளை ஒழுங்குபடுத்துவதும் வழங்குவதும்ட

(1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது)

நிறுவனத்தின் நோக்கம்

நாடொன்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மக்களின் அறிவை அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமாகும். சமூகத்தின் பல்வேறு சமூகப் பிரிவுகளுக்கும் தேவையான அறிவை விஞ்ஞான ரீதியில் ஒழுங்கு முறையில் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே நாடொன்றின் நூலகக் கட்டமைப்பின் அடிப்படை நோக்கமாகும். இலங்கையில் நூலகக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை தாபிக்கப்பட்டதுடன் அதன் சேவைகள் 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக மேலும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் செயற்பாடுகள் இரு முக்கிய பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. அவையாவன,

(அ) தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தை கொண்டு நடத்துதலும்

(ஆ) தேசிய மட்டத்தில் நூலக சேவைகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதலுமாகும்.

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம் இலங்கையின் தேசிய நூலகமாக இருப்பதுடன், அது நாட்டில் உள்ள ஏனைய நூலகங்களின் தாய் நூலகமாகவும் செயற்படுகின்றது. அதே போல தேசிய மட்டத்தில் நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நூலகங்களுக்கான மதியுரைச் சேவையை வழங்குதல், நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மதிப்பாய்வுச் செயற்பாடுகளை நடத்துதல், நூலக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல், நூற் கண்காட்சி களை நடத்துதல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பல்வேறு செயற் திட்டங்களை நடத்துதல், பிரதேச மட்டத்தில் எண்மய நூலகங்களை ஆரம்பிப்பதற்கு ஒத்தாசைகளை வழங்குதல், நூல்களைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு நூலகங்களில் பேணல் மத்திய நிலையங்களை உருவாக்குதல், நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தல், நூலகத்துறைசார் விசேட தினங்களைக் கொண்டாடுதல், மாகாணசபை மட்டத்தில் நூலகங்களைத் தரமுயர்த்துவதற்கு மாகாண நூலக சேவைகள் சபைகளுடன் இணைந்து செயற்படுதல், பல்வேறு அனர்த்தங்களினால் பாதிப்படைந்த நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகர்களைப் பயிற்றுவித்தல், நூலகக் கூட்டுறவுச் செயற்திட்டங்களை ஒழுங்கு படுத்துதல், நூல் வெளியீட்டிற்கான உதவிகளை வழங்குதல், தேசிய நூலகத்தில் தகவல்களைக் கணனி மயப்படுத்துதல் மற்றும் அந்த தகவல்களின் மூலம் எண்மய நூலகத்தை நடைமுறைப்படுத்திச் செல்தல் போன்ற பல செயற்திட்டங்கள் நடமுறைப்படுத்தப்படுகின்றன.

1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 3 (ஆ) பிரிவின் பிரகாரம் கௌரவ கல்வி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையானது 2019.12.31 ஆம் திகதி கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு இருந்தது.

(01 திரு. பீ.எம். தீபால் சந்திரரத்ன - தலைவர்) (2019 நொவம்பர் மாதம் வரை.)

திரு. ஏச். ஹேவகே - (மேலதிகச் செயலாளர், கல்வி அமைச்சு) வேலை மேற்பார்க்கும் தலைவர் தே.நூ.சே.சபை 2019 டிசம்பர் 09ம் திகதியில் இருந்து 2019 டிசம்பர் வரை 31ம் திகதிவரை

பதவி நிலை அங்கத்தவர்கள்

(02) செயலாளர் கல்வி அமைச்சின் பொருட்டு, திரு. ஆர். எச். என். நந்தசிரி (2019 ஜனவரி 14 வரை) , திரு. ஏம்.கே. ஜே.ஏ. அல்விஸ் (2019 ஜனவரி 28 இலிருந்து யூலை மாதம் வரை) செயலாளர், கல்வி அமைச்சு (2019 ஓகஸ்ற் மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(03) திருமதி. பீ.எம்.எம்.எம். பஸ்நாயக்க- மேலதிகச் செயலாளர் (பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு) (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் மாதம் வரை)

(04) திருமதி. எஸ். அருளானந்தம் - தலைவர் (இலங்கை நூலக சங்கம்) (2019 ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை) கலாநிதி (திருமதி) என். டீ. விஜயசுந்தர- தலைவர் (இலங்கை நூலக சங்கம்) (2019 ஜூலை இருந்து நொவம்பர் மாதம் வரை)

(05) பேராசிரியர் திருமதி. சிறிமலி பிரநாந்து - தலைவர் (தேசிய விஞ்ஞான மன்றம்) (2019 ஜனவரி மாதம் 28 வரை) (கலாநிதி (திரு) ஏ.எம். முபாரக் - தலைவர் (தேசிய விஞ்ஞான மன்றம்) (2019 பெப்ரவரி இருந்து நொவம்பர் வரை)

(06) திருமதி. அனோஜா பீ குருகே- மேலதிக செயலாளர் (உள்ளகச் செயற்பாடு வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(07) திரு. ஆர்.ஏ.ரீ.ஏ. ரணவீர – கணக்காளர் (நிதி அமைச்சு) (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(08) திரு. சிறியானந்த ரத்நாயக்க –செயற்திட்டப் பகுப்பாய்வாளர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம்) 2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

ஏனைய அங்கத்தவர்கள்

(09) பேராசிரியர் திரு. கே. என். ஓ. தர்மதாச (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(10) பேராசிரியர் ஜயதேவ உயன்கொட (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(11) சட்டத்தரணி திரு. டீ.ஆர்.கே.டீ. சமரகோன் (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(12) திரு. ஏம்.கே.ஜே. ஏ. அல்விஸ் (2019 ஜூலை மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

(13) திரு. டப். பீ. ஜீ. கருணாரத்ன (2019 ஜனவரி மாதம் தொடக்கம் நொவம்பர் வரை)

2019 ஆம் ஆண்டில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதேநேரம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் காரணமாக புதிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை மீண்டும் நியமனம் செய்யும் வரை டிசம்பர் மாதத்தில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படவில்லை.

மதியுரைக் குழுக்கள்

நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மதியுரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுக்கள் இவ்வருடத்தில் கீழ்க் குறிபிடப்பட்டுள்ளவாறு கூடின.

மதியுரைக்குழு	பிரிவு	கூட்டம் நடத்தப்பட்டதிகதி
தேசிய நூலக மதியுரைக் குழு	வாசகர்சேவை மற்றும் நூலீட்டற் பிரிவு	11.03.2019, 21.03.2019, 24.06.2019, 08.07.2019, 20.07.2019, 16.08.2019, 20.08.2019, 27.12.2019
நூற்பட்டியலாக்கக் கட்டுப்பாட்டு மதியுரைக் குழு	நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவு	15.05.2019
பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தல மதியுரைக் குழு	பேணல் பாதுகாத்தல் பிரிவு	06.05.2019
நூலகத் தரநிர்ணயம் செய்வதற்கான உப குழு	விரிவாக்கற் சேவை	26.02.2019, 16.05.2019, 07.11.2019, 13.12.2019
வெளியீட்டு உதவி மதியுரைக் குழு	வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு	23.07.2019, 29.08.2019
அச்சீட்டு மதியுரைக்குழு		28.08.2019
புதிய வெளியீடுகள் ஆலோசனைக் குழு		24.04.2019
நூல் மொழிபெயர்ப்பு ஆலோசனைக் குழு		09.05.2019, 18.06.2019, 29.08.2019
சிறுவர் மற்றும் பதின்ம வயதினர்		28.08.2019
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு	உள்ளகக் கணக்காய்வு	19.03.2019, 12.06.2019, 23.09.2019, 15.10.2019

அலுவலக ஊழியர் விபரம்

விலகுதல் :		
பெயர்	**பதவி**	**திகதி**
திருமதி.எல்.ஜீ.சீ.என். வாதசிங்ஹ	பிரதிப் பணிப்பாளர்	01.03.2019
திருமதி. டப்ளியு..ஆர்.ஏ.எஸ்.எல். ரணசிங்ஹ	தகவல் உதவியாளர் தரம் III	10.01.2019

செல்வி.என்.சீ. களுபஹன	தகவல் உதவியாளர் தரம் III	10.01.2019
செல்வி. டீ.எல்.ஏ. நதீகா		10.01.2019
திருமதி. பீ. மோகனாந்தி		08.05.2019
திருமதி.ஏ.எல்.பீ. மதுஷானி		18.09.2019
திருமதி.சிந்துஷா கணேசலிங்கம்		30.10.2019
செல்வி. கே.எம்.எம்.யு. செனவிரத்ன	முகாமைத்துவ உதவியாளர் தரம் III	17.09.2019
செல்வி. ஏச்.ஏ.எஸ். ஹப்புஆராச்சி		18. 09.2019
திரு. கே. வீ.ஐ. குணதிலக		05. 12.2019
ஓய்வு பெறல்		
திரு. டீ. ஆழகப்பெரும	நூலக உதவியாளர் தரம் II	11.01.2019
திரு. எஸ்.ரீ. சமரசேன		06.09.2019
திரு. ஏன்.எஸ்.ஜே. எதிரிசிங்ஹ	நூலக ஆவணவாக்கல் அதிகாரி தரம் II	01.02.2019
புதிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல		
செல்வி. ஏ.பீ.டப்.ஏ.ஐ. உதேஷிகா	அலுவலக உதவியாளர் தரம் iii	16.09.2019
திருமதி. டப்.பீ.டீ.எஸ்.ஜீ. திலகசிறி		16.09.2019
திரு. ஏ.பீ.எம்.எஸ். அத்தநாயக்க		16.09.2019
திரு. ஏச்.எம்.ஆர். ஹேரத்		16.09.2019
திரு. ஏல்.பீ.எச். விஜேவர்த்தன		16.09.2019
திரு.எச்.பீ.டீ.பீ.எஸ்.திலகரத்ன		16.09.2019
செல்வி.ஆர்.எம்.யு. பத்மசிரி	தகவல் உதவியாளர் தரம் iii	01.10.2019
செல்வி. ஜீ.டீ.எஸ்.வாசனா விஜேவர்த்தன		01.10.2019
திருமதி.என்.டீ.ஏ. திலுசிகா		02.10.2019
திருமதி. கே.எஸ்.எஸ்.குணசிங்ஹ		07.10.2019
செல்வி. டப்.என்.பீ.எம்.எஸ்.எச் ரணசிங்ஹ		01.10.2019

செல்வி. ஐ.டீ.யு. இலுக்பிட்டிய	முகாமைத்துவ உதவியாளர் தரம் iii	01.10.2019
செல்வி. எம்.எல்.எஸ். லக்ஷிகா குமாரி.		01.10.2019
திரு. ஏம்.ஏ.சீ. தர்மவர்தன	உதவிப் பணிப்பாளர் தரம் ii	02.10.2019
திருமதி. டீ.எம்.பீ. பண்டாரநாயக்க	பணிப்பாளர்	07.10.2019
பதவி உயர்வு		
திரு.டீ.பீ.எஸ்.பீ. அபேகுணவர்த்தன	நிருவாக அதிகாரி தரம் ii	01.03.2019
திருமதி. ஏ.கே. குசுமாவதி	நூலக உதவியாளர் தரம் ii	01.03.2019
திரு. ஏல்.டீ.என். நிரோஷின்		01.03.2019
திருமதி.டீ.எம்.கே. தசநாயக்க	உதவிப் பணிப்பாளர் தரம் ii	01.10.2019
திருமதி. ஐ.எம். கெட்டிபேஆராச்சி		16.10.2019
திருமதி.யு..எச்.ஆர்.எஸ். தேசபிரிய	தகவல் உதவியாளர் தரம் iii	01.10.2019
திரு. வீ.ஜீ.யு.டீ. பிரியலால்		01.10.2019
செல்வி. டீ.ஜீ.பீ.எம்.சீ. முத்துமாலி		01.10.2019
பதவி உயர்வு		
திரு. ஈ.பீ. சுமதிபால	தகவல் உதவியாளர் தரம் i	2017.01.01
திருமதி. ஏச். கே.என்.எஸ். குமாரி	முகாமைத்துவ உதவியாளர் தரம் ii	2016.07.03

2019.12.31 ஆம் திகதிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை சபையின் ஊழியர் சபை கீழ் வருமாறாகும்.

பதவி	சேவையில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை	வெற்றிடம் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	01	-
பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)	01	-
பணிப்பாளர்	02	-
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)	01	-
பிரதிப் பணிப்பாளர் (தொழில்)	-	03
உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	-
உதவிப் பணிப்பாளர்	09	-
உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில் நுட்பம்)	01	-
உதவிப் பணிப்பாளர் (பேணல்)	01	-
உள்ளகக் கணக்காய்வாளர்	01	-
வெளியீட்டு அலுவலர்	01	- -
நிருவாகச் செயலாளர்	-	01
நிருவாக அலுவலர்	01	-
பேணல் அலுவலர்	-	01
ஆய்வு அலுவலர்	01	-
விரிவாக்கல் அலுவலர்	-	01
விற்பனை அபிவிருத்தி அலுவலர்	01	-
பயிற்சி அளிக்கும் அலுவலர்	01	-
முறைமைப் பகுப்பாய்வாளர்		01
நூலக ஆவணவாக்கல் அலுவலர்	03	06
பராமரிப்பு அலுவலர்	01	-
கணக்கிடல் அலுவலர்	-	01
நூலக அபிவிருத்தி உதவியாளர்	03	09
தகவல் தொழில் நுட்ப உதவியாளர்	01	-
தகவல் உதவியாளர்	45	05
ஆவண மறுசீரமைப்பாளர்	01	01
முகாமைத்துவ உதவியாளர்	29	07
சாரதிகள்	05	01
மின் தொழிலாளி	01	-
நூல் மட்டை கட்டுபவர்கள்	04	02
நூலக சேவகர்கள்	13	03
அலுவலக சேவகர்கள்	20	06
மொத்தம்	**149**	**48**

ஊழியர் பயிற்சி

உள்நாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகள்/ பயிற்சிப்பட்டறைகள் /பாடத்திட்டங்கள் (குறுங்காலம்)

பயிற்சி/ மாநாடு பயிற்சிப் பட்டறை	அலுவலர் பெயர்	இடம்	காலம்/ திகதி	மாநாட்டுக் கட்டணம் ரூபா.
மாதிரி மற்றும் அமைப்புப் பற்றிய இரு நாள் பயிற்சிப்பட்டறை	திரு. உதித்த குணசேகர (ஆய்வு அலுவலர்) ஆராய்ச்சிப் பிரிவு	கொழும்புப் பல்கலைக்கழகம்	2019.01.20 மற்றும் 27	5000,00
அரசின் முன் வழங்கல் யெற்பாடுகள் தொடர்பான சான்றிதழ் வழங்கும் பாடநெறி	திரு. நுவன் விஜேரத்ன (உதவிப் பணிப்பாளர்) நிதிப் பிரிவு	திறன் அபிவிருத்தி நிதியம்	2019.01.25 இருந்து 10 வெள்ளிக் கிழமைகள்	45,000.00
முன்வழங்கல் கணக்காய்வு தொடர்பான பயிற்சி	திருமதி. வாசனா எல்லாவல (உள்ளகக் கணக்காய்வாளர்) மற்றும் திருமதி.எச். தில்றுக்சி ஷாமலீ (தகவல் உதவியாளர்) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	"Distance Learning Centre Ltd." நிறுவனம்	2019.02.25 மற்றும் 28	18,400.00
"Microsoft Office" பாடநெறி	திருமதி. கே. மேனகா குமாரி பெரேரா (ஆவணம் பேணுபவர்)	இலங்கை அச்சீட்டு நிறுவனம்	2019 மார்ச் தொடக்கம் ஒகஸ்ற் மாதம் வரை	13,000.00
வுழங்கல் முகாமைத்துவம் தொடர்பான உயர் சான்றிதழ்ப் பாடநெறி	திரு. பீ. ஏ. என். அயேஷான்(முகாமைத் துவ உதவியாளர் தரம் ii) நிதிப்பிரிவு.	வுழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவனம்.	2019.05.05 இலிருந்து ஒரு வருடம்	75,000.00
தொடர்பாடல் மற்றும் பொதுசனத் தொடர்பு உயர் டிப்ளோமாப் பாட நெறி	திரு.பீ.எல்.சீ. சந்தறுவன் (தகவல் உதவிளர் I) விரிவாக்கற் சேவைப் பிரிவு.	களனிப் பல்கலைக்கழகம்	2019.09.15 இருந்து ஒரு வருடம்	32,125.00

Workshop on Effective Research Proposal Writing	திரு. உதித்த குணசேகர (நூலக அபிவிருத்தி உதவியாளர்) அராய்ச்சிப் பிரிவு.	தேசிய விஞ்ஞான மன்றம்	2019.07.27	3,000.00
ULA-ICULA-2019 சர்வதேச ஆராய்ச்சி மாநாடு	திரு. ஜீ.எச். மங்கள (நூலக அபிவிருத்தி உதவியாளர்) ஆராய்சிப் பிரிவு	பல்கலைக்கழக நூலகர்களின் சங்கம்	2019.08.09	6,000.00
KDUIR- 2019 சர்வதேச ஆய்வாளர்கள் மாநாடு	திரு. உதித்த குணசேகர (ஆய்வு அலுவலர்) ஆராய்ச்சிப் பிரிவு	கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்	2019.09.11 - 12	3,000.00
வினைத்திறனுடனான அரச சேவைகளின் பொருட்டு கணக்கியல் முறைமையை பயிற்று விக்கும் பயிற்சிப் பட்டறை	திருமதி. ஷமிலா குணசேகர (முகாமைத் துவ உதவியாளர் iii) நிதிப் பிரிவு	திறன் அபிவிருத்தஜி நிதிய நிறுவனம்	2019.08.15 - 16	8,500.00
பகுப்பாக்கம் தொடர்பான பயிற்சிப் பாடநெறி	நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஊழியர்கள்	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	2019.08.06	5,625.00
நிறுவனச் செயற்பாடுகள் தொடர்பான அறிவூட்டும் பயிற்சிப் பாடநெறி	நிறுவனத்தின் அலுவலக உதவியாளர்கள் (புதிய ஆட்சேர்ப்பு)	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	2019.10.08	3,990.00
Outbound Training Programme	சபையின் 49 ஊழியர் களின் பொருட்டு	சீகிரிய வில்லேஜ் ஹோட்டல்	2019.12.06 -07	456,505.00
பொது அலுலவலக முறைமைகள் தொடர்பான பயிற்சிப் பாட நெறி	புதிய நியமனம் பெற்ற தகவல் உதவியாளர் / முகாமைத்துவ உதவி யாளர் மற்றும் பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள்	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	2019.12.30	3,630.00

உள்நாட்டு நீண்ட நாட் பாட நெறிகள

பயிற்சி/ மாநாடு / பயிற்சிப் பட்டறை	அலுவலர்/அலுவலர்கள் பெயர்	இடம்	காலம் /திகதி	மாநாட்டுக் கட்டணம்(ரூ.)
மனிதவள முகாமைத்துவ தொழிற் தகைமையைப் பெற்றுக் கொள்வ தற்கான மாநாடு.	திரு. பிரியந்த அபேகுணவர்த்தன (முகாமைத்துவ உதவியாளர் தரம் ii)	இலங்கை மனித வள முகாமைத் துவ நிறுவனம்	2019.01.16 இருந்து 08 மாத காலத்திற்கு	28,000.00

வெளிநாட்டுப் பயிற்சிகள் / மாநாடுகள்

பயிற்சி/ மாநாடு / பயிற்சிப் பட்டறை	**அலுவலர்/அலுவலர்கள்** பெயர்	**நாடு**	**காலம் /திகதி**	**சுபையினால் செலவுசெய்யப்பட்ட பணம் ரூ.**
எண்மய வெளியீடுகள் மற்றும் எண்மய நூலக மாநாடு	திரு. டப்ளிவ். சுனில் (பணிப்பாளர் நாயகம்)	சீனா	2019.08.07 தொடக்கம் 2019.08.12 வரை	49,920.00
ISSN தேசிய மத்திய நிலையங்களின் பணிப்பாளர்களின் 44வது மாநாடு	திருமதி. சேனானி பண்டார (பணிப்பாளர்)	இந்தியா	2019.11.12 இருந்து 2019.11.16 வரை	182,192.49
UNESCO International Symposium on Knowledge Engineering for Digital Library Design - 2019	திரு. உதய கப்ரால் (உதவிப் பணிப்பாளர் ii)	இந்தியா	2019.12.09 இருந்து 2019.12.12 வரை	38,108.00

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பல்வேறு பிரிவுகளின் பொறுப்புக்களும் அவற்றின் அபிவிருத்தியும் - 2019

நூலீட்டற் பிரிவு

தேசிய நூலகத்திற்குப் பொருத்தமான நூல்களையும், இலத்திரனில் ஊடகங்கள், மற்றும் ஏனைய பிரிவுகளைச் சார்ந்த தகவல் மூலங்களைப் பெற்றுக் கொள்வதே நூலீட்டற் பிரிவின் பொறுப்பும் கடமையுமாகும். தேசிய நூலகத்தின் நூலீட்டற் கொள்கைக்கு ஏற்ப (i) இலங்கையில் வெளியிடப்படும் வெளியீடுகள் (ii) இலங்கை பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iii) இலங்கையரால் வெளிநாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iv) முக்கிய உசாத்துணை நூல்கள் (v) பிற நூலகங் களினால் பெற்றுக் கொள்ள முடியாததும் ஆனால் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு அவசியமானவை யுமான உசாத்துணை நூல்கள் (vi) நூலக தகவல் விஞ்ஞானத் தகவற் துறை தொடர்பான வெளியீடுகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இதற்கும் மேலால் ISBN, ISSN மற்றும் ISMN இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வெளியீட்டாளர் வைப்பிலிடும் பிரதிகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. மேற் குறிப்பிடப்பட்டுள்ள (i), (ii), (iii) மற்றும் (vi) பிரிவிற்குரிய வெளியீடுகளில் இரு (02) பிரதிகள் வீதமும், உசாத்துணை நூல்களில் ஒரு பிரதி வீதமும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொள்ளும் போது காலத்திற்கு ஏற்றவிதத்தில் அவற்றின் புதிய பதிப்புக்கள் கொள்வனவு செய்யப்படுகிறன. இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வெளியீடுகளை ஈட்டல் செய்யும்போது முக்கியமான 04 முறைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) கட்டாய வைப்புச் சட்டத்தின்கீழ் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தில் இருந்து பிரதிகளைப் பெறுதல்
(ii) கொள்வனவு செய்தல்
(iii) அன்பளிப்பு
(iv) பரிமாற்ற (Exchange services) தின் கீழ் வெளியீடுகளைப் பெற்றுக் கொள்தல்

சட்டவைப்பு பிரதி முறையின் கீழ் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தில் இருந்து பிரதிகளைப் பெற்றுக் கொள்தல்.

1885 ஆம் ஆண்டின் அச்சீட்டாளர் வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தில் 1976 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அமைவாக, இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளினதும் பிரதி ஒன்று தேசிய நூலகச் சேகரிப்புக்கு சட்டரீதியில் உரித்துடையதாகின்றது. இலங்கையில் இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களமாகும். அச்சீட்டாளர்களினால் அந் நிறுவனத்தில் வைப்பிலிடப்படும் பிரதிகளுள் ஒரு பிரதி தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. இவ் வருடத்தில் கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் நூல்கள், பருவ வெளியீடுகள், அரசாங்க வெளியீடுகள், சிறிய செய்தித் தாள்கள் (Tabloid Sheet) துண்டுப் பிரசுரங்கள் போன்றனவும் அரசாங்க வெளியீடுகளின் கீழ் வர்த்தமானி, சட்டம், சட்டமூலம், உட்பட 15,712 வெளியீடுகளையும், 7,278 புதினத்தாள்களையும் தேசிய நூலகத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்தல்

தேசிய நூலகத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழிகளில் ஒன்று கொள்வனவாகும். உள்நாட்டு வெளியீடுகளில் சட்டவைப்பு முறையின் கீழ் தேசிய நூலகத்திற்குக் கிடைக்கப்பெறாத வெளியீடுகளும், கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் வெளியீடுகளிலும் மேலதிகப் பிரதிகளும் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதே போல வெளிநாட்டு வெளியீடுகளையும், முக்கிய உசாத்துணை நூல்களையும் கொள்வனவு செய்யும் போது உள் நாட்டு, வெளி நாட்டு நூல் விபரப்பட்டியல்கள், நூற் பட்டியல்கள், புதினத்தாள்கள், பருவ வெளியீடுகள், இணையம் போன்ற பல்வேறு மூல வளங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் தேசிய நூலகத்திற்காக நூல் மற்றும் ஏனைய நூலக தகவல் சாதனங்களின் கொள்வனவின் பொருட்டு ரூபா 3,278,669.35 செலுத்தப்பட்டது.

இவ்வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வெளியீடுகள்

வெளியீடுகளின் வகை	**பெற்றுக்கொண்ட தொகை**
நூல்கள்	2195
பட்டப்பின்படிப்பு ஆய்வுக் கட்டுரைகள்	03
உள்நாட்டு வெளிநாட்டு பருவவெளியீடுகள்	06
இறுவட்டுக்கள் DVD	18
வெளியீடுகளின் மொத்தத் தொகை	**2222**

அன்பளிப்புக்கள்

இலங்கைத் தேசிய நூலகத்தின் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு தனி நபர்களிடம் இருந்தும், பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் அன்பளிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. 2019

ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நூலாசிரியர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து

பெற்றுக் கொள்ளப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை 481 ஆகும். இதன்கீழ் 273 நூல்களும், ISBN

செயற்திட்டத்தின் கீழ் 08 சிறு பத்திரிகைகளும், kiyawamu,lk செயற் திட்டத்தின் பொருட்டு 36 நூல்களும்

115 செய்தித் தாள்களும், எண்மயப்படுத்தப்பட்ட 11 வர்த்தமானிகளும், 33 சிறியளவிலான புதினத்தாள்களும், 169 பருவ வெளியீடுகளும் கிடைக்கப் பெற்றன.

நூல் பரிமாற்றச் சேவை

இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வழிகளில் ஒன்றாகப் பரிமாற்றச் சேவை (Exchange Services) உள்ளது. இதன் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு

நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு சபையினால் வெளியிடப்படும் வெளியீடுகள் அந்நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதுடன் அந் நிறுவனங்களின் வெளியீடுகளும் தேசிய நூலகத்தினால் பெற்றுக் கொள்ளப் படுகிறது. இதன்கீழ் வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து 117 பருவவெளியீடுகளும், 05 வெளிநாட்டு நூல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

தேசிய நூலகம் பெற்றுக்கொள்ளும் வெளியீடுகளுள் விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு தேவையான பொது விலைக் கொள்கை ஒன்றை தயாரித்தல்

இலங்கைத் தேசிய நூலகத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளுக்கான விலையைத் தீர்மானித்துக் கொள்வதற்காக பொது கொள்கை விளக்கமொன்றின் பூர்வாங்கத் திட்டவரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் இக் கொள்கை விளக்கத்தை தேசிய கொள்கை விளக்கமாக இந்நாட்டில் உள்ள சகல நூலகங்களுக்கும் பொருந்தும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் இச் செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு இவ்வருடத்தில் 04 குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

Koha நூலக மென்பாண்டத்தின் மூலம் நூலீட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் கணனிமயப்படுத்தப்பட்ட பட்டியலாக்கத்தின் பொருட்டு Koha நூலக மென்பாண்டம் உபயோகிக்கப்படுகிறது. இவ்வருடம் Koha கணனி மென்பாண்டத்தை உபயோகப்படுத்தி கணனி மயப்படுத்தப்பட்ட பட்டியலில் 14312 வெளியீடுகள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

கணனிச் செயற்பாடுகளின் பொருட்டு RFID-Tag முறைமையை பயன்படுத்துதல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் நூலக சாதனங்களை பாதுகாப்பதற்கான உபாயமாகவும் புள்ளிவிபரச் செயற்பாடுகளை இலகுபடுத்துமுகமாகவும் RFID-Tag முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தைப் பூரணப்படுத்துவதற்கு தேசிய நூலகத்தின் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் கதவுகளில் இலத்திரனியல் கதவுகளை (e-gates) பொருத்தவேண்டியுள்ளது. இலங்கையைப் போல உலகின் முன்னணி நூலகங்களிலும் இம்முறைமை பாவனையில் உள்ளது. நூலீட்டற் செயற்பாடுகளின் பொருட்டு RFID- Tag முறைமை 2019.05.27 திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் சுமார் 4000 வெளியீடுகள் RFID- Tag யில் உட்புகுத்தப்பட்டுள்ளன.

நூலீட்டல் செயற்பாடுகள் தொடர்பாக ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குதல்

தேசிய நூலகத்தின் நூலீட்டற் செயற்பாடுகள் தொடர்பாக நூலீட்டற் பிரிவின் ஊழியர்களுக்கு அறிவூட்டும் நோக்கத்துடன் 2019 ஒக்ரோபர் 18 ஆம் திகதி பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

தேசிய நூலகச் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கை விளக்கமொன்றை தயாரித்தல்
தேசிய நூலகத்தின் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கை விளக்க மாதிரி ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் செம்மையாக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வாசகர் சேவைப் பிரிவு

தேசிய நூலகத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள நூல்கள் மற்றும் ஏனைய நூலக சாதனங்களை வாசகர்கள் பரிசீலிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது இப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். கட்டிடத்தைப் புதுப்பித்தமைத்தற் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் கடந்த வருடங்களுக்குடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இவ் வருடத்திலும் தேசிய நூலகத்தின் வாசகர் சேவைப் பிரிவினால் அதிகளவிலான வாசகர்களுக்குச் சேவை வழங்கப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் சேகரிப்பைப் பரிசீலனை செய்தவர்களுள் முக்கியமானவர்களாக உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட பிற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள், பட்டப் பின் படிப்பு மற்றும் பட்டப் படிப்புப் பாட நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு துறைசார் வாசகர்களும் வருகை தந்திருந்தனர். அவர்களின் தேவைகளின் பொருட்டு மூன்று மாடிகளிலும் மூன்று பிரதான வாசிப்புக் கூடங்களும், கீழ்த்தளத்தில் விசேட தகவல் மேசை ஒன்றும் (Information Counter) வாசகர் சேவைப் பிரிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கட்டிடத்தைப் புதுப்பித்தமைக்கும் சேவை ஆரம்பித்ததுடன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாடிகளில் புதுப்பித்தமைக்கும் செயற்பாடுகளுக்காக தேவையான இட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கட்டிடப் புதுப்பித்தமைத்தல் செயற்பாடுகளின் காரணத்தால் இம் மாடிகளில் உள்ள நூற்சேகரிப்புக்களை நடைமுறைப்படுத்திச் செல்வதும் வாசகர் சேவையை நடைமுறைப் படுத்திச் செல்வதும் கடினமாக உள்ளது.

தேசிய நூலகத்தைப் பார்வையிடல்
கட்டிடம் புதுப்பித்தமைக்கப்படும் காரணத்தினால் நூலகத்தைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தபோதும், இவ்வருடத்தில் 2019.08.22 ஆம் திகதி இலங்கை நூலக சங்கத்தின் காலிக் கிளையின் 14 மாணவர்களும் 02 ஆசிரியர்களும், 2019.08.29 திகதி கண்டிக் கிளையின் 14 மாணவர்களும் இரு ஆசிரியர்களும், 2019.08.26 ஆம் திகதி அநுராதபுரம் பௌத்த பிக்ஷு பல்கலைக்கழகத்தின் 26 மாணவப் பிக்குக்களுக்கும் 01 பிக்ஷு விரிவுரையாளருக்கும் , 2019.09.26 ஆம் திகதி நாரஹேன்பிட்டி தொழிற் பயிற்சி நிறுவனத்தின் 50 மாணவர்களுக்கும் தேசிய நூலகத்தைப் பார்வையிடுவதற்கும் தேசிய நூலக வளங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான அறிவூட்டும் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பங்கு பற்றியவர்களின் பொருட்டு தகவல் தேடும் முறை பற்றிய செயல்முறையிலான பயிற்சியும் வழங்கப்பட்டது.

உசாத்துணை சேவை மற்றும் தகவல் வழங்கும் சேவை

இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் பல்வேறு தகவல் வளங்களினூடாக வாசகர்களுக்கு உசாத்துணை சேவைகள் (Reference Services) மற்றும் தகவல் சேவைகள் (Information Services) வழங்கப்பட்டுள்ளன. அதிகளவில் வாசகர்களினால் உபயோகப்படுத்தப்படும் தகவல் வளங்களாக புதினத்தாள்கள், பருவ வெளியீடுகள், அரசாங்க வெளியீடுகள் போன்றனவற்றை

இனங்காண முடியும். தேசிய நூலகச் சேகரிப்பில் இருந்து வாசகரிகளின் பாவனைக்கு 2019 ஆம் ஆண்டு 151959 தகவல் வளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாசகர் பதிவு

இந்த வருடத்தில் கீழ்க்காணப்படும் விதமாக இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வாசகர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

அங்கத்தவர் வகை	**அங்கத்தவர் எண்ணிக்கை**
வாழ்நாள் அங்கத்துவம்	26
வருடாந்த அங்கத்துவம்	101
மூன்றுமாத அங்கத்துவம்	274
நாளாந்த அங்கத்துவம்	3794

நிழற்படப் பிரதிச் சேவை

தேசிய நூலகத்தின் பல்வேறு சேகரிப்புக்களில் உள்ள தகவல்களை நிழற்படப் பிரதிகள் மூலம் வாசகர்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் இவ்விதம் பிரதிகளை வழங்கியதன் மூலம் ரூபா 1,174,887.00 வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

விசாரணைச் சேவை

பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்களைக் கேட்டு தனிநபர்களிடம் இருந்து வரும் விசாரணைகளுக்கு பதில் வழங்குவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் இன்னுமொரு செயற்பாடாகும். இதன் கீழ் கடித மூலமும், இலத்திரனியற் தபால் மூலமும், தொலைபேசியூடாகவும், நேரடியாகவும் வந்த விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் விசாரணைச் சேவையின் கீழ் 9,378 வாசகர்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

புதினத்தாட் வெட்டுத் துண்டுச் சேகரிப்பு

பல்வேறுபட்ட தலைப்புக்களின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளிவந்த 3466 புதினத்தாட் கட்டுரைகளைக் கொண்ட 348 கோப்புக்கள் சேகரிப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

தகவல் மீள் பொதிசெய்யும் சேவை

இதன் கீழ் திரிபிடகம் தொடர்பான தகவல்கள் அடங்கிய மீளப் பொதி செய்யப்பட்ட தொகுதி ஒன்று வாசகர்களின் பரிசீலனைக்காக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

எண்மய நூலக சேவை வசதிகளை விரிவாக்கம் செய்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் ஊடாக வாசகர்களுக்கு வழங்கும் சேவையை விரிவாக்கம் செய்யும் நோக்கத்துடன் எண்மய நூலக வசதியையும் விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எண்மய நூலக ஒன்றியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் சேவைகளுக்கு மேலால் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரதிநிதியின் உதவியின் கீழ் தேவையான கணனி வசதிகள், நிழற்பட பிரதிகள் சேவை ஆகியனவற்றை விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலால் இலங்கைத் தேசிய நூலகத்திற்கு

தேவையாக உள்ள சிறுவர் பிரிவிற்குத் தேவையான மேசைகள், கதிரைகள் போன்ற உபகரணங்களைப் போல ரப் கணனி வசதிகளையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூலகங்களுக்கு இடையிலான நூல் இரவல் சேவை

நூலகங்களுக்கிடையே நூல்களை, இரவல் வழங்கும் சேவையின் கீழ் இவ்வருடத்தில் பல முக்கிய நூலகங்களுடன் இச் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் சுவடிகள் கூடத் திணைக்களத்திற்கு 06 வெளியீடுகள் நூலகங்களுக்கிடையேயான நூல் இரவல் சேவையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலால் விசேட அன்பளிப்பாக இலங்கைச் சுதந்திர தினத்தைக் கொண்டாட்டத்துடன் இணைந்து லெபனான் தேசிய நூலகத்தில் (Beirut) நடத்தப்பட்ட கண்காட்சியின் பொருட்டு லெபனானில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் வேண்டுகோளின்படி இலங்கையின் இலக்கியம், சரித்திரம், கலாசாரம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சிற்பங்கள் மற்றும் சுவரொட்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வாசகர் கல்விச் செயற்திட்டங்களை ஒழுங்குசெய்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தை உபயோகப்படுத்தும் வாசகர்களுக்கு தகவல் தேடும் முறை தொடர்பாக விளக்கத்தையும், மற்றும் தேவையான பயிற்சிகளையும் வழங்குதல் பரந்தளவில் நடைபெற்று வருகிறது. அதன் பிரகாரம் இவ்வருடத்தினுள் 259 வாசகர்களை இலக்குவைத்து வாசகர் கல்வி செயற்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

தேசிய நூலக நண்பர்கள் ஒழுங்கமைப்பு

இலங்கைத் தேசிய நூலகம் மற்றும் அதன் சேவைகள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் நோக்கத்துடன் "தேசிய நூலகத்தின் நண்பர்கள்" ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவ் அமைப்பின் பங்களிப்புடன் இலங்கைத் தேசிய நூலகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

இலங்கைத் தேசிய நூலகத்தில் கணனிச் சேவை மற்றும் நூலகத் துறையுடன் தொடர்புடைய தகவற் தொழில் நுட்பத்தை ஈடுபடுத்துவற்குத் தேவையான செயற்பாடுகள் மற்றும் இத்துறை தொடர்பாக தேசிய மட்டத்தில் மதியுரை சேவைகளை வழங்குவதும் இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதற்கும் மேலால் தேசிய எண்மய நூலகத்தின் செயற்பாடுகளுக்குக் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், அறிவு அபிவிருத்திக்காக எண்மய நூலக அபிவிருத்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திச் செல்வதன் பொருட்டு தேவையான உதவிகளை வழங்குவதுடன் துறையுடன் தொடர்புபட்ட கணனி மென்பாண்டங்களை அபிவிருத்தி செய்தல் இப்பிரிவின் கீழ் நடைபெறும்.

தேசிய நூலகத்தின் வெப் சேவர் (web server) மற்றும் மெயில் சேவரை (mail server) நடைமுறைப்படுத்திச் செல்தல்

நிறுவனத்தின் Web மற்றும் mail server நடைமுறைப்படுத்திச் செல்தல், மற்றும் கணனி தரவுத் தளங்களை நடைமுறைப் படுத்திச் செல்தல், நடைமுறையில் உள்ள தரவுத் தளங்களை

தற்காலப்படுத்துதல் அதேபோல சிக்கல்களை நிவர்த்தி செய்தல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன.

சபையின் Face book பக்கத்தை தற்காலப் படுத்துதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக ஒழுங்கமைக்கப்படும் பல்வேறு செயற் பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்களை பரந்தளவு வாசகர்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் சபையின் Face book பக்கத்தை நடைமுறைப்படுத்திச் செல்வதுடன், இவ்வருடத்தில் Face book பக்கத்தை பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை 6380 ஆகும்.

சபையின் வீட்டுப் பக்கத்தை தற்காலப்படுத்துதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு செயற் திட்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக சபையின் வீட்டுப் பக்கத்தில் (www.natlib,lk) ஊடாக தேவையான பிரச்சார வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் தொலைதூரத்திலிருந்து (Distance) தேசிய நூலகத்தின் சேவைகளிற்கு பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நூலக பட்டியலுக்கு (OPAC) மேலால் பல்வேறு தரவுத் தளங்கள், சபையின் வெளியீடுகள், புகைப்படங்கள், அறிவித்தல்கள் நூலகத் துறையில் புதிய செயற்பாடுகளுக்குரிய தகவல்கள் போன்றன இதில் உட்புகுத்தப்பட்டுள்ளது.

Koha தரவுத் தளத்தை தற்காலப்படுத்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் பட்டியலை Koha நூலக முகாமைத்துவ மென்பாண்டம் (Koha Library Management Software) கீழ் செயற்படுத்தப்படுவதுடன் காலத்திற்குக் காலம் தற்காலப் படுத்துதலுக்கு மேலதிகமாக பருவ வெளியீடுகளில் நூற்பட்டியற் தகவல்களை உட்புகுத்துவதற்குத் தேவைான வசதிகள் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேசிய நூலகத்தின் பொருட்டு YouTube வசதியை நடைமுறைப்படுத்திச் செல்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு செயற் திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள குறும் பிரச்சார வீடியோக்களை இணையத்தினூடாக ஒளிபரப்புவதற்காக சபையினால் YouTube சனல் ஒன்று நடைமுறைப்படுத்திச் செல்லப்படுகிறது. சபையின் விற்பனை அபிவிருத்தி அலுவலரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட இந்த வீடியோவை இணையத்தின் மூலம் ஒளிபரப்புவதன் மூலம் நிறுவனம் மற்றும் இதன் சேவைகள் தொடர்பாக பரந்தளவில் பிரச்சாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வருடத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட அதுபோன்ற ஐந்து வீடியோ நிகழ்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ள சேவைகளின் பொருட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

*. சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் "தெவுந்தற முனையில் இருந்து பருத்தித்துறை முனைவரை இலக்கியப் பாலம்" என்னும் தலைப்பின் கீழ் நடைமுறையில் உள்ள நூல் மொழிபெயர்ப்பு செயற்திட்டத்திற்குரிய வீடியோ நாடாவைத் தயாரித்தல்.
* ஆய்வு முறைமை தொடர்பான பயிற்சிப் பட்டறையுடன் தொடர்புடைய SPSS மென் பாண்டத்தை உபயோகப் படுத்துதல் தொடர்பான செயற்திட்டம்.
* கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் நடத்தப்பட்ட வாசிப்பு முகாம்கள் (Reading Camps) தொடர்புடைய வீடியோ செயற்திட்டம்.
* சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களின் பொருட்டு நடத்தப்பட்ட பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற் திட்டம்.
* குளியாப்பிட்டி மத்திய வித்தியாலயத்தில் நடைபெற்ற 19 + கண்காட்சியுடன் தொடர்புடைய பிரச்சார வீடியோ நாடவைத் தயாரித்தல்

கணனிக் கல்வி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள்

நிறுவனத்தினால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளின்போது தகவல் தொழில் நுட்பம் தொடர்பான உதவிகளை வழங்குவது தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள நூலகர்களை அறிவூட்டுவதன் பொருட்டு 2019.09.25 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை அம்பாறை கணனி வளமத்திய நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைக்கு வளவாளர்களாக உதவி வளங்கப்பட்டுள்ளது.

நூலகங்களின் பாவனையின் பொருட்டு புதிய கணனி மென்பாண்டங்களை அறிமுகப்படுத்துதல்

பொலன்நறுவை புதிய நகரில் நவீனமாக கட்டப்பட்ட புராணகால தொழில்நுட்ப அரும்பொருட் காட்சியக நூலகத்திற்குத் தேவையான சேவர் வசதிகளை இலங்கை ரெலிகொம் நிறுவனத்திடம் இருந்து சேவையாக பெற்றுக் கொள்வதற்கும் அதே சேவரிலேயே Koha நூலக முகாமைத்துவ மென்பாண்டத்தை நிறுவுவதற்கும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு தேவையான விலைமனு கோரப்பட்டு அதை அந்த நிறுவனத்திற்கு வழங்கியதுடன் இவ்வருடம் சபையினால் தாபிக்கப்பட்ட சோமா ஜயகொடி மாதிரி நூலகத்தில் Koha நூலக முகாமைத்துவ மென்பாண்டத்தை தாபித்து சேவர் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் சகல பிரிவுகளினதும் கணனிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

சபையின் சகல கணனி வன் பாண்டங்கள் மற்றும் மென் பாண்டங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. சபையின் ஆராய்ச்சிப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான ஆய்வு தொடர்பான விபரமான நூற்பட்டியல் - 2018 க்கு உரிய கணனிச் செயற்திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பப் பிரிவில் நிறுவப்பட்டுள்ள சேவர் கணனியை புதிதாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேவர் அறையில் ஸ்தாபிப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை தயார் செய்தல் மற்றும் கட்டிடப் புதுப்பித்தமைத்தல் செயற்பாட்டிற்குத் தேவையான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவு

நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவின் முக்கிய பொறுப்பு தேசிய ரீதியில் நூற்பட்டியற் கட்டுப்பாட்டை மேற்கொள்தலாகும். இலங்கைத் தேசிய நூற்பட்டியலைத் தொகுத்தல், கடந்த கால தேசிய நூற் பட்டியலைத் தொகுத்தல், பருவ வெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி தொகுத்தல், அதிகார பூர்வ கோவைகளைத் தொகுத்தல், விசேட நூற்பட்டியல்கள் மற்றும் தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தின் ஆவணவாக்கற் செயற்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்து தொடர்ந்து நடைமுறைப் படுத்திச் செல்வதுமாகும்.

இலங்கைத் தேசிய நூற் பட்டியல்

இலங்கைத் தேசிய நூற்பட்டியலை வெளியிடுவது தேசிய நூலகத்தின் முக்கிய பொறுப்புக்களுள் ஒன்றாகும். தேசிய நூற்பட்டியல் என்பது நாட்டினுள் வெளியிடப்படும் சகல வெளியீடுகளினதும் தகவல்களை உள்ளடக்கிய ஒரு அதிகார பூர்வமான வெளியீடாகும். இச் செயற்பாட்டை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை 1974 ஆம் ஆண்டில் இருந்து செய்து வருகின்றது. இச் செயற்பாடானது 1962 ஆம் ஆண்டில் இருந்து 1973 ஆம் ஆண்டு வரை தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 2018 ஆம் ஆண்டின் யூலை மாதத் தொகுதியில் இருந்து 2019 பெப்ரவரி மாதத் தொகுதி வரையிலான 08 தொகுதிகளின் தொகுத்தல் வேலை நிறைவடைந்துள்ளது. இதற்கும் மேலால் தொடர்புடைய வெளியீடுகளின் பொருட்டு கிடைக்கப்பெற்ற சகல சிங்கள, தமிழ், ஆங்கில நூல்களும் பகுப்பாக்கம் செய்யப்பட்டு வாசகர்களின் உபயோகத்தின் பொருட்டு இலங்கைத் தேசிய நூலகத்தின் வாசகர் சேவைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட சகல தேசிய நூற்பட்டியல்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை தேசிய எண்மய நூலகத்தில் (National Digital Library) பார்வையிடமுடியும். (www.digilib.natlib.lk)

இலங்கையில் அமைச்சுக்களின் நூற்பட்டியல் தொடர்பான கல்விமான்களின் மாநாடு

இலங்கையில் அமைச்சுக்களின் பெயர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தத்திற்கு உட்படுவது சுலபமாக நடக்கும் ஒன்றாகவுள்ளது. அந்தந்தக் காலப் பகுதியில் பாவனையில் இருந்த அமைச்சின் பெயர்களை இனங்கண்டு கொள்வது செம்மையானதொரு தகவல் தேடலுக்கு பெரிதும் உதவியளிக்கும். இத் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் இலங்கை அமைச்சுக்களின் பெயர்கள் மாறிய விதம் தொடர்பான தகவல்களுடன் 537 பக்கங்களுடன் கூடிய இலங்கை அமைச்சுக்களின் வழிகாட்டி நூல் (Directory of Ministries in Sri Lanka) சபையினால் தொகுக்கப் பட்டுள்ளது. இலங்கையில் அமைச்சு முறைமை ஆரம்பித்த ஆண்டான 1931 இலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அமைச்சுக்களின் பெயர் மாற்ற விபரங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலை வெளியிடுவதன் பொருட்டு இலங்கை அரசாங்க ஆட்சியின் வியூகம் மற்றும் வினைத்திறன் மற்றும் அமைச்சுக்களின் பெயரிடல் என்னும் தலைப்பில் விசேட மாநாடு ஒன்று 2019 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இம் மகாநாட்டின் போது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமான்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

திரு. உதித்த அழககோன் உதவி நூலகர், தேசிய நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான நிலையம்	இலங்கையில் அமைச்சுக்களின் நூற்பட்டியற் செயற் திட்டம் தொடர்பான அறிமுகம்
கலாநிதி (திரு) நிர்மால் ரஞ்சித் தேவசிரி .	அரசின் சங்கல்பத்தைக் கட்டியெழுப்புதலின் பொருட்டு அமைச்சுக்களைப் பிரிக்கும் அரசியல் தோற்றம்
திரு. காமினி விஜேசிங்ஹ முன்னைநாள் கணக்காளர் நாயகம்	அரச நிருவாகத்தின் கட்டமைப்பு விளை திறனின் பொருட்டு அரச சேவகர்களின் பொறுப்பும் கடமையும்.

திரு.பீ. ஹெட்டியாராச்சி முன்னைநாள் மேலதிக செயலாளர் பொது நிருவாக அமைச்சு	அரச நிருவாகத்தை வினைத்திறனுடன் முன்கொண்டு செல்ல அமைச்சுக்கள் பிரிக்கப்பட்டுள்ள விதம்

இம் மாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள் உட்பட பல கல்விமான்கள் கலந்துகொண்டனர்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07.	இலங்கையில் அமைச்சுக்களின் வழிகாட்டி நூல்.	இலங்கை அமைச்சுக்களின் வழிகாட்டி நூல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கல்வி அமைச்சு

இலங்கை பருவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி

இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் இலகுவாக தேடிக் கண்டு பிடிப்பதற்கு வசதியாக பருவவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி தொகுக்கப்படுகின்றது. இது காலாண்டு வெளியீடாவதுடன் 2018-01 மற்றும் 2018-02 தொகுதிகளின் தொகுக்கும் வேலை நிறைவேற்றப் பட்டுள்ளது. இத்தகவல்கள் சபையின் வெப் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (www.natlib.lk)

தேசிய நூலகத்தின் தகவல் சாதனங்களைப் பட்டியலாக்கம் செய்தல்

தேசிய நூலகத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் சகல நூலக சாதனங்கள் தொடர்பாக விஞ்ஞான பூர்வமான நூற்பட்டியற் தகவல்களையும் Koha நூலக கணனி மென்பாண்டத்தை உபயோகித்து கணனி பட்டியல்களைத் தாரித்தலும், தேசிய நூலக நூற்பட்டியலை நடைமுறைப்படுத்திச் செல்தலும் இப் பிரிவின் மேலதிக செயற்பாடுகளாகும். தேசிய நூலகத்தின் சேகரிப்புக்கள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி தேசிய நூலகப் பட்டியலாகும். ஆதலால் தேசிய நூலகத்தின் பட்டியலானது விஞ்ஞான பூர்வமானதாகவும், இலகுவாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலும் ஒழுங்கு படுத்தப்படுகிறது. தேசிய நூலகத்திற்காகப் பெறப்பட்ட சகல நூலக சாதனங்களையும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பட்டியாலாக்கம் செய்து பகுப்பாக்கம் செய்து காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புக்கள் இடப்பட்டு கணனிமயப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 2019 ஆம் ஆண்டில் நூலக தகவல் வளங்கள் 15,833 Koha தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளன. அதற்கும் மேலால் 2011 – 2018 காலப் பகுதியில் இலங்கையின் கல்விமான்களால் தமது பட்டப் பின்படிப்பிற்காக பல்கலைக்கழகங்களுக்குச் சமர்பிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு நிபந்தனைகள் 461 இன் விபரமும் இத் தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஒருங்கிணைந்த பட்டியலைத் தொகுத்தல்

தேசிய ஒருங்கிணைந்த பட்டியலைத் (National Union Catalogue) தொகுத்தல் மற்றும் அதை நடைமுறைப்படுத்திச் செல்தல் என்பன தேசிய நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய

பொறுப்பாகும். இப்பட்டியல் தொடரறாப் பட்டியலாக நடைமுறைப்படுத்திச் செல்லப்படுவதுடன், இலங்கையில் உள்ள பல உயர் மட்ட நூலகங்களில் உள்ள நூலக சாதனங்கள் தொடர்பான தகவல்களை இந்த ஒருங்கிணைந்த பட்டியலின் மூலம் தேடிப் பெற்றுக் கொள்ள முடியும். தேசிய ஒருங்கிணைந்த பட்டியலுக்கு நாட்டில் உள்ள பல முன்னிலை நூலகங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

இலங்கை புதினத்தாட் கட்டுரைச் சுட்டியைத் தொகுத்தல்

இலங்கைப் புதினத்தாட் கட்டுரைச் சுட்டியானது தரவுத் தளத்தின் மூலம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படுவதுடன் இந்த ஆண்டு இலக்கியப் பெறுமதி வாய்ந்த சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல புதினத்தாள்களில் வெளிவந்த 344 கட்டுரைகளின் தரவுகள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

வெளியீடுகளுடன் வெளிவரும் பட்டியற் தரவுகள் (Cataloguing in Publication Data (CIP)

நாட்டில் உள்ள நூலகங்களில் பட்டிலாக்கம் மற்றும் பகுப்பாக்கத்தில் ஒத்த தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வெளியீடு ஒன்றில் அதற்கான நூல்விபரத் தகல்களை உள்ளடக்கிய பட்டியலை அந் நூலிலேயே அச்சிடுவது இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் நூலாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளரினால் வெளியிடப்பட்ட 254 (சிங்களம் 188, தமிழ் 18 மற்றும் ஆங்கிலம் 48) வெளியீடுகளுக்கு வெளியீடுகளுடன் வெளிவரும் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணனிப் பட்டியலாக்கத்தின் பொருட்டு MARC 21 படிவங்களின் மூலம் பட்டியலாக்கத் தரவுகள் பற்றிய பொதுவான கொள்ளை விளக்கம் ஒன்றைத் தயாரித்தல்

கணனிப் பட்டியலாக்கத்தின் பொருட்டு MARC 21 படிவத்தின் மூலம் இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் பொதுவானதொரு படிவத்தைத் தயாரிப்பதற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பொருட்டு நூலகத் துறைசார் விற்பன்னர்களுடன் கூடிய குழுவொன்றை நியமித்துள்ளதுடன் இக்குழுவானது மூன்று சந்தர்ப்பங்களில் கூடி அதன் அடிப்படை தொகுப்பு வேலைகள் நடைபெற்றுள்ளது. இந்த விண்ணப்பத்தை விரைவான பட்டியலாக்க படிவமாக (Fast Add Framework) அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

தேசிய நூற்பட்டியல் தொடர்பாக அச்சீட்டளர்களை அறிவூட்டும் மாநாடு

தேசிய நூற்பட்டியல் தொடர்பாக நூல் வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், அதேபோல நூலாசிரியர்களை அறிவூட்டும் மாநாடு ஒன்று 2019 ஜூலை 11 ஆம் திகதி கண்டி, குண்டசாலையில் அமைந்துள்ள மத்திய மாகாணத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இம் மாநாட்டின் கருப்பொருள் " இலங்கையில் இலக்கியத் துறையை செழிப்படையச் செய்வதற்கு வினைத்திறன் மிக்க வெளியீடுகளை வெளியிடுவதற்கு எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் மற்றும் அச்சீட்டாளர்களின் பங்களிப்பு" ஆகும். இம் மாநாட்டில் விசேட விருந்தினர் விரிவுரையை பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

சிங்களக் கற்கைகள் பிரிவின் மதிப்பிற்குரிய பேராசிரியர் திருமதி பியசீலி விஜேமான வினால் நடத்தப்பட்டதுடன், டபிளிவ். சுனில், சேனானி பண்டார, உதித, மத்திய மாகாண எழுத்தாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள், அச்சீட்டாளர்கள் ஆகிய 83 பேர் பங்குபற்றினர்.

பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தற் பிரிவு

தேசிய நூலகத்தின் நூற் சேகரிப்பில் உள்ள நூலக சாதனங்களைப் பேணிப் பாதுகாத்தலுடன் நாட்டில் ஏனைய நூலகங்களில் உள்ள நூலகச் சேகரிப்புக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதும் இப் பிரிவின் பொறுப்பாகும். இதன் கீழ் தேசிய நூலகத்தின் சேகரிப்பை பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு நிதமும் அவற்றை சுத்தம் செய்தல், புகையூட்டுதல், நூல் மட்டை கட்டுதல், திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நூல் மட்டை கட்டும் கூடம்

தேசிய நூலகத்தின் நூல்களை பாதுகாத்து, மட்டைகட்டுதல் நூல் மட்டை கட்டும் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதன் பிரகாரம் நூல் மட்டை கட்டும் பிரிவினால் 2019 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 95,200 பட்டியல் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- பண்டாரகம சோமா ஜயகொடி நூலகத்தின் 146 நூல்கள் மட்டைகட்டப்பட்டன
- 82 திறந்த துண்டுப் பிரசுரப் பெட்டிகளும் 162 மூடிய பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பிரிவுகளின் தேவைக்கு ஏற்ப ஏடுகள் மற்றும் நூல்கள் மட்டை கட்டப்பட்டன.
- தேசிய சேகரிப்பைச் சேர்ந்த 313 புத்தகங்கள் மட்டை கட்டப்பட்டுள்ளன.

தேசிய நூலக சேகரிப்பைப் பேணி நன்கு நடைமுறைப்படுத்திச் செல்தல்

தேசிய நூலகச் சேகரிப்பின் பாதுகாப்பின் பொருட்டு நிதமும் அவற்றைச் சுத்தம் செய்தல், திருத்தி யமைத்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய நூலகத்தில் பேணல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் மூலங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான மதியுரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் மதியுரைக் குழு கூட்டப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புகையூட்டல்

தேசிய நூலகத்தின் நூல்களைப் பேணும் பிரதான வழிகளில் ஒன்றாக அவற்றிக்குப் புகையூட்டுதல் நடைபெற்று வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 797 நூல்களுக்குப் பொஸ்பீன் புகையூட்டப்பட்டதுடன் 62 நூல்களுக்குத் தைமோல் புகையூட்டப்பட்டு பேணப்பட்டுள்ளது.

ஆவணங்களைப் புதுப்பித்தமைக்கும் செயற்பாடு

இதன் கீழ் தேசிய நூலகச் சேகரிப்பைச் சேர்ந்த 24 நூல்களின் 2697 பக்கங்களுக்கு அமில நீக்கம் செய்யப்பட்டதுடன் 3066 பக்கங்களுக்கு ரிசு இடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோல கறுப்பு மை பூசி மெருகூட்டலின் மூலம் 26 ஓலைச்சுவடிகளின் 2048 பத்திரங்களுக்கு கறுப்புமை பூசப்பட்டுள்ளது.

உலகின் ஞாபகம் தொடர்பான செயற்திட்டம் (MOW)
திரிபிடகம் நூலை உலகின் உரிமை ஆக்கும் செயற்திட்டம்.

- திரிபிடகம் நூலை உலகின் உரிமை ஆக்கும் செயற்பாட்டின் பொருட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவின் ஒரு அங்கத்தவராக பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தல் பிரிவின் பிரிவுத் தலைவர் திரு. உதய கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார். திரிபிடக நூல் தொடர்பான விபரங்களை ஒன்று திரட்டுவதற்காக 2019.06.01 ஆம் மற்றும் 02 ஆம் திகதிகளில் குருனாகல் பிரதேசத்தில் உள்ள விகாரைகளுக்கு தல யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

மகாவம்சம் ஓலைச் சுவடியை உலகின் ஞாபகமாக உள்வாங்குவதற்கான செயற்திட்டம்

- உலகின் ஞாபகம் தொடர்பான ஏட்டில் மஹாவம்ச ஓலைச்சுவடிகளை உள்வாங்குவது தொடர்பாக பெயர் குறிப்பிடுவதற்கு, தயாராவதற்காக அதற்குத் தேவையான மூலவளங்களைப் பரீட்சிப்பதற்கு 2019 ஜூன் 21 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கும், தலதா மாளிகையில் உள்ள நூலகத்திற்கும் தல யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அதற்கும் மேலால் ஹங்குரன்கெத்த பொத்குல் விகாரையில் உள்ள மஹாவம்ச ஓலைச் சுவடியை பரிசீலிப்பதற்காக 2019.10.17 ஆம் திகதி தல யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. இவ்விதம் பரிசீலனை செய்வதற்கு உலக ஞாபகத்தைப் பேணும் செயற்திட்டத்தின் தேசிய குழு அங்கத்தவர்களில் சிலரும் பங்குபற்றினர்.

தொட்டுணரமுடியாத கலாசார மரபுகளை பாதுகாப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை (ICH)

இலங்கையில் உள்ள தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளைப் பாதுகாக்கும் செயன்முறைப் படுத்தும் மத்திய நிலையமாக (National Focal Point) தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை செயற்படுகிறது. இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேசிய மட்டக் குழுவின் அங்கத்தவர்களாக சபையின் பணிப்பாளர் நாயகமும் பேணற் பிரிவின் பிரிவுத் தலைவரும் பங்கேற்பர்.

நூல் பொம்மலாட்ட கலையை உலக உரிமைகள் ஏட்டில் சேர்த்தல்

இலங்கைக்கு உரிமையான தொட்டுணரமுடியாத கலாசார உரிமையைப் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் இந்நாட்டிற்கு உரிமையான "சாம்ப கிரதாயிகலாங்கய" ஆன நூல் பொம்மலாட்டம் (String Puppets) தொடர்பாக பெயர் முன்மொழிவுடன் கூடிய அறிக்கை 2017ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்பிரகாரம் நூல் பொம்மலாட்டக் கலை இந்நாட்டுக்கே உரித்தானதும் பாதுகாக்கப்பட வேண்டிய கலையம்சம் என யுனெஸ்கோ அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதை தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகள் தொடர்பான மானிடவர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஏட்டில் (UNESCO Representative List of the Intangible Cultural Heritage of Humanity) உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக துறைசார் விடய நிபுணர்களின் உதவியைப் பெற்று இந்த ஏட்டைத் தயார் செய்வதற்கு சபை முன்னின்று செயற்பட்டு வருகிறது.

தேசிய நாட்டார் கதைக் கோவையைத் தொகுத்தல்

தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தின் கீழ் இந்நாட்டிற்கே உரித்தான நாட்டார் கதைகளை ஒன்று திரட்டி தேசிய நாட்டார் கதைகளின் தொகுப்பு என்னும் பெயரில் நூல் ஒன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு விசேட பதிப்பாசிரியர் சபை ஒன்று நியமிக்கப்பட்டு நாட்டார் கதைகளை ஒன்றுதிரட்டும் செயற்பாடு நடைபெற்ற துடன் அதை அச்சிட்ட நூலாக வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நூலக பேணல் மத்திய நிலையங்களை மேலும் அபிவிருத்திசெய்யும் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்தின் கீழ் பொதுசன நூலகங்களில் இருந்து அனுப்பப்படும் பேணல் பின்னூட்டல் மதிப்பாய்வுப் பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கு குழுக் கூட்டம் கூட்டப்பட்டு இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறந்த பேணல் மத்திய நிலையமாக தெரிவு செய்யப்பட்ட 23 பொது நூலகங்களின் பொருட்டு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

IFLA PAC மத்திய நிலையத்தின் செயற்பாடுகள்

யுனெஸ்கோ அமைப்பினால் இந்தியாவின் தேசிய எண்மய நூலகம் மற்றும் புதுடெல்கியில் உள்ள தொழில் நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்த NDLI – UNESCO International Sysmposium on Knowledge Engineering for Digital Library Design 2019 என்னும் பெயரில் 2019 டிசம்பர் 09-11 கால இடைவெளியில் இந்தியாவின் புதுடெல்கி நகரத்தில் நடத்தப்பட்ட மாநாட்டின் பொருட்டு ஆசிய பிராந்தியத்தில் பேணல் மற்றும் புணரமைத்தல் மத்திய நிலையங்கள் (IFLA-PAC) பிரதிநிதித்துவப் படுத்தி பேணல் பாதுத்தல் பிரிவின் பிரிவுத் தலைவர் உதவிப் பணிப்பாளர் திரு. உதய கப்ரால் கலந்துகொண்டார்.

பயிற்சிப் பாட நெறி

பேணற் பிரிவினால் நூலக சாதனங்களைப் பேணல் மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பாக நூலகங்கள் மற்றும் வேறு நிறுவனங்களில் சேவையாற்றும் அலுவலர்களின் பொருட்டு பயிற்சிப் பட்டறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

பயிற்சிப் பாட நெறியின் பெயர்	இடம்	யாருக்காக	பங்களிப்புச் செய்தோர் தொகை	கால அளவு
ஆவண பராமரிப்பு மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பாட நெறி- மட்டம் 1	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள் ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்	11 12	2019.01.30 மற்றும் 31 2019.02.27 மற்றும் 28
ஆவண பராமரிப்பு மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பாட நெறி-	காலி வக்வல்ல முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம்	ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள் ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்	40	2019.05.21மற்றும் 22 2019.08.15மற்றும் 16
பேணல் மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பாட நெறி மட்டம் 1	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	பொது நூலக அலுவலர்கள்	11	2019.07.02, 03மற்றும் 04
பேணல் மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர் பான பயிற்சிப் பாட நெறி-	பியகம பிரதேச சபை	பொது நூலக அலுவலர்களின் பொருட்டு	19	2019.08.02
நூல் மட்டை கட்டுதல் தொடர் பான பயிற்சிப் பாட நெறி-	வடமத்திய மாகாண நூலக சேவைகள் சபை	பொது நூலக அலுவலர்களின் பொருட்டு	42	2019.09.26 மற்றும் 27
பேணல் பராமரிப்பு மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பான பயிற்சிப் பாட நெறி	நாகானந்த சர்வதேச பௌத்த கற்கை நிறுவனம்	பட்டப்படிப்பினை மேற்கொள்பவர்களுக்கு	08	2019.11.21

பேணல் பராமரிப்பு மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பான பயிற்சிப் பாட நெறி	பொலந்நறுவை பெந்திவெவ பொதுசன நூலக கேட்போர் கூடம்	பொது நூலக அலுவலர்களின் பொருட்டு	22	2019.12.03 மற்றும் 04

ஓலைச் சுவடிகளைப் பேணுவதற்காக "தும்மல" எண்ணையய் தயாரித்தல்

ஓலைச் சுவடிகளுக்கு கறுப்பு மை பூசுதல் மற்றும் அவற்றின் பேணற் செயற்பாடுகளின் பொருட்டு "தும்மல தெல்" உபயோகிக்கப்படுவதுடன் சபையினால் தும்மலதெல் தயாரிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் இவ்வருடத்தில் தேவைக்கேற்ப 23 போத்தல் 'தும்மல" எண்ணை தயாரிக்கப்பட்டது.

நூலகத்தில் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள்.

தேசிய நூலகத்தின் இடர் முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரம் ஏற்படக்கூடிய இடர் தொடர்பாக தொடர்ந்து கவனம் செலுத்தப்படுவதுடன் பொருத்தமான சந்தர்ப்பங்களில் இடர் முகாமைத்துவக் குழுவைக் கூட்டி தேவைவயான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஏற்பட்ட பாஸ்து ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதத் தாக்குதலுடன் இலங்கை தேசிய நூலகத்தின் பாதுகாப்பின் பொருட்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதற்கும் மேலால் தேசிய நூலக பேணல் மதியுரைக் குழுவின் ஆலோசனையின் கீழ் நூற் சேகரிப்பின் பாதுகாப்பின் பொருட்டு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மதியுரை சேவை வழங்குதல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் நூற்சேகரிப்பின் பாதுகாப்பின் பொருட்டு தேவையான பாதுகாப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கும் மேலால் இலங்கையில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூலகங்களில் தோன்றும் பாதுகாப்புச் சிக்கல்கள் தொடர்பாக தேவைக்கேற்ற விதத்தில் அலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்த மதியுரைச் சேவையின் கீழ் Link Natural Products (Pvt) நிறுவனத்திற்குச் சொந்தமான நூலக நூல்களின் பாதுகாப்பின் பொருட்டு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஜனவரி மாதத்தில் இலங்கையில் வட மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள நிலை காரணமாக பாதிப்புக்குள்ளான கிளிநொச்சி மாவட்ட கரச்சிப் பிரதேச சபைக்குரிய வட்டக்கச்சி பொது நூலகத்தின் நூல்களைப் பாதுகாப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்குவதற்கு சபையின் அலுவலர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நூலக ஆய்வுப் பிரிவு

மாகாண மட்டத்தில் நூலக மதிப்பாய்வுகளை மேற்கொள்ளுதல், நூலகத் துறைசார் செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்களை ஒன்று திரட்டுதல், நூலக தகவல் விஞ்ஞானத் துறையில் தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களின் கீழ் ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அத் தகவல்களை பிரசுரித்தல்., நூலகச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் ஆய்வுப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல் மற்றும் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துதல் என்பன இப்பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

தேசிய மட்டத்திலான மதிப்பாய்வுகள்

i. ***இலங்கையில் பார்வைக் குறைபாடுடைய வாசகர்களின் தகவல் தேவைகளை நிறைவு செய்வதில் முகம்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பான கற்கை.***

இலங்கையில் பார்வைக் குறைபாடு உடைய வாசகர்களின் தகவல் தேவையை நிறைவு செய்யும் போது முகம்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்வதற்கு 2019.06.29 ஆம் திகதி 50 பார்வைக் குறைபாடுடைய சிறுவர்களை இலங்கை விழிப்புணர்வற்றோர் மக்கள் சேவைகள் சபைக்கு வரவழைத்து கேள்விக் கொத்தின் உதவியுடன் நேர்முகக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்தத் தரவுகளை உட்புகுத்துவதற்காக SPSS மென்பாண்டத்தினூடாக தரவுத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டு அந்தத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ii. ***வாசிப்புப் பழக்கம் தொடர்பான தேசிய மட்ட மதிப்பாய்வு***

வாசிப்புப் பழக்கம் தொடர்பாக தேசிய மட்ட மாதிப்பாய்வு பற்றிச் சேகரிக்கப்பட்ட தரவுகள் தொடர்புடைய தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளதுடன் அந்த தரவுகளை மதிப்பாய்வு செய்து அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் பொருட்டு கொழும்புப் பல்கலைக் கழகத்தின் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இருந்து நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. ***ஆசிரிய கலாசாலை, மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி நூலகங்கள் தொடர்பான மதிப்பாய்வு***

ஆசிரிய கலாசாலைகள் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி நூலகங்கள் தொடர்பான மதிப்பாய்வு அறிக்கையைத் தயாரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் 06 கல்வியியல்க் கல்லூரிகள் மற்றும் 04 ஆசிரிய கலாசாலைகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

iv. ***இலங்கையில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத் துறையிலான ஆய்வு தொடர்பான விபரமான நூற்பட்டியல் ஒன்றைத் (Annotated Bibliography) தொகுப்பதற்கு தேவையான தகவல்களைச் சேகரித்தல்***

இதன் கிழ் தற்போது ஒன்று திரட்டப்பட்டுள்ள பட்டப்படிப்பு ஆய்வறிக்கைகளின் (ஆங்கில மொழி மூலம்) நூற்பட்டியற் தகவல்களை தரவுத் தளத்தில் உட்புகுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

v. ***இலங்கை நூலகங்கள் தொடர்பான தகவற் கொத்து (Directory of Libraries in Sri Lanka) தற்காலப் படுத்துதல்.***

இலங்கை நூலகங்கள் தொடர்பான தகவற் கொத்தை தற்காலப்படுத்தி வருவதுடன் கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் 1033 நூலகங்கள் தொடர்பான தரவுகள் தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளன.

vi. ***வருடாந்த ஆய்வு மாநாடுகள் (Annual Research Symposium)***

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை வருடம் தோறும் ஒழுங்குபடுத்தும் ஆய்வு மாநாடு NATLIB SYMPO – 2019 தலைப்பில் 2019 ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இவ்வருடம் மாநாட்டின் கருப் பொருள் " Library Information and Documentation in the context of Transformation" அகும். இந்த ஆய்வு மாநாட்டின் முக்கிய விரிவுரையான "Transformation of Library Services" என்னும் தலைப்பின் கீழ் இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பிரதிநிதித்துவ நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் திரு. ரோஹான் சமரஜீவ வினால் நடத்தப்பட்டது. மாநாட்டின் பொருட்டு 21 ஆய்வு அறிக்கைகள் (08 சிங்களம், 02 தமிழ், மற்றும் 11 ஆங்கிலம்) சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் அறிக்கைகளை உள்ளடக்கிய ஆய்வுத் தொகுதி (Coference Proceedings) ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த ஆய்வு மாநாட்டின் பொருட்டு சர்வதச நூலக சங்கங்களின் அமைப்பில் (IFLA) இருந்து உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

ஆய்வு வழிமுறைகள் தொடர்பாக பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.

பட்டப் பின்படிப்பு பாடநெறிகளை பின்பற்றும் மாணவர்களின் பிரயோசனத்திற்காக ஆய்வு வழிமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்துவது சபையின் ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப் படுகிறது. ஆய்வுகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக SPSS மென்பாண்டத்தை உபயோகப்படுத்துவது தொடர்பாக இருநாட் (02) பயிற்சிப் பட்டறைகள் இரண்டு இவ்வருடம் நடத்தப்பட்டது. அதன் முதலாம் இரண்டாம் பயிற்சிப் பட்டறைகள் முறையே 2019 ஆகஸ்ற் 08-09ஆம் திகதிகளிலும் 2019 செப்ரெம்பர் 18-19 ஆம் திகதிகளிலும் சபையின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இப் பயிற்சிப் பட்டறைகளின் பொருட்டு வளவாளராக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியர் திரு. கே.ஏ.பீ. சித்திசேன பங்குபற்றினார்.

ஏனைய சேவைகள்

ஆய்வுப் பிரிவினால் தொகுக்கப்படும் நூலகங்கள் தொடர்பான புள்ளிவிபர கையேடு நவீனப் படுத்தப்பட்டு சபையின் வெப் பக்கத்தில் இனைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் புள்ளிவிபரக் கோவையை மத்திய வங்கியினால் அதன் அறிக்கையில் இணைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கும் மேலால் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் இலங்கைப் பொருளியல் தரவுகள் -2019 வெளியீட்டிலும் இத் தகவலை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எண்மய நூலக ஒன்றியம்

தேசிய நூலகத்தில் எண்மய நூலகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் எண்மய நூலக ஒன்றியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த எண்மய நூலக ஒன்றியத்தினால் எண்மயமாக்கலின் பொருட்டு தகவல் வளங்களை இனங்காணல், தேசிய நூலகச் சேகரிப்பில் இனங்காணப்பட்டுள்ள நூல்களை எண்மயப்படுத்துதல், தேசிய எண்மய நூலகத்தின் பொருட்டு தற்பொழுது சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களை Dspace தரவுத் தளத்தில் உட்புகுத்துதல், kiyawamu.lk செயற்திட்டத்திற்குரிய தொழில் நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், வாசகர்களுக்கு எண்மயத் தகவல் சேவைகளை வழங்குதல், போன்றன செயற்பாடுகள் இவ் ஒன்றியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தேசிய எண்மய நூலகத்திற்கான திறந்த பிரவேசத்திற்கான கொள்கை விளக்கமொன்றைத் தயாரித்தல்

இலங்கைத் தேசிய எண்மய நூலகத்தின் செயற்பாடுகள் குறித்த கொள்கை விளக்கத்திற்கு உட்பட்டு நடைமுறைப்படுத்திச் செல்லும் நோக்கத்துடன் எண்மய நூலக கொள்கை விளக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது. இக் கொள்கைகளுக்கு அப்பால் தேசிய எண்மய நூலகத்தின் தகவல்களை வாசகர்களுக்கு வழங்கும்போது அந்தத் தகவல்களை அணுகும் முறை தொடர்பாகவும் பொது கொள்கை விளக்கம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இக் கொள்கை விளக்கமானது திறந்த பிரவேச கொள்கை விளக்கம் (Open Access Policy) எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன் அந்த கொள்கை விளக்கத்தைத் தயாரிக்கும் செயற்பாடுகள் நிறைவடைந்து எண்மய நூலக வெப் பக்கத்திலும் இணைக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலகச் சேகரிப்பை எண்மயப்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் தேசிய நூலகத்தின் பழைய வர்த்தமானிச் சேகரிப்பில் 1956 ஒக்ரோபர் தொடக்கம் 1975 ஏப்ரல் மாதம் வரையிலான வர்த்தமானிகளின் 235,000 பக்கங்கள் எண்மயப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கும் மேலால் 2016 ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானிகள், சட்டங்கள், சட்டமூலங்கள் என்பன எண்மயப்படுத்தப்பட்டு எண்மயச் சேகரிப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

Kiyawamu.lk செயற்திட்டம்

இச் செயற்திட்டத்தின் பொருட்டு சபையின் வெளியீட்டுப் பிரிவினால் இலத்திரனியல் நூல்களாக (e-pub) மாற்றப்பட்ட 99 நூல்களை தரவுத் தளத்தினுள் புகுத்துவது மற்றும் அவற்றைத் தயாரித்து Kiyawamu.lk வெப் பக்கத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வெப் பக்கத்தில் பிரவேசிப்பதன் மூலம் வாசகர்களுக்கு இந்த நூல்களை உபயோகப்படுத்துவதற்கு இயலுமாக இருக்கும்.

விரிவாக்கற் சேவைப் பிரிவு

நாட்டினுள் பரவி உள்ள பல்வேறுபட்ட நூலகங்களின் அபிவிருத்தியின் பொருட்டு உதவிகளை வழங்குதல், மதியுரைச் சேவைகளை வழங்குதல், வாசிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நூலகர்களைத் தைரியப்படுத்தல், " தேசிய வாசிப்பு மாத" செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்துதல், நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தல், கஸ்டப் பிரதேசம் மற்றும் கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த நூலகங்களின் பொருட்டு நூல் அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நூலகங்களுக்கு பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல், நூலகத்துறை தொடர்பான விசேட தினங்களைக் கொண்டாடுதல், நூலகங்களுக்குப் பொருத்தமான நூல்களை சிபார்சு செய்தல், எண்மய நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கும் மேலால் நூலகங்களின் பொருட்டு தேவையான நூலக எழுதுகருவிகள் மற்றும் உபகரணங்கள் அதேபோல நூலக சாதனங்களை சகாய விலையில் விற்பனை செய்யும் நோக்கத்துடன் தேசிய நூலக நூல் விற்பனைக் கூடம் நடைமுறைப் படுத்திச் செல்லப்படுதலும் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தேசிய வாசிப்பு மாதச் செயற்திட்டம்

வாசகர் சமூகத்தினிடையே நூல் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2004 ஆம் ஆண்டில் இருந்து சகல வருடங்களிலும் வரும் ஒக்ரோபர் மாதம் " தேசிய வாசிப்பு மாதம்" எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வருடம் தேசிய வாசிப்பு மாதத்துடன் தொடர்புடைய சுற்றுநிருபம் ஒன்று அச்சிடப்பட்டு 385 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் தேசிய வாசிப்பு மாதம் 2019 கீழ் : எக்சத் செய்திப் பத்திர சமாகம் மற்றும் மிஹிர புதினத்தாளினூடாக " மதக்கத பொத்த" (நூல் ஞாபகமா) என்னும் கருப்பொருளின் கீழ் சிறார்களின் பொருட்டு இவ்வளவு காலமும் அவர்கள் வாசித்த நூலொன்றின் தகவலைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இந்த வருடம் தேசிய வாசிப்பு மாதத்தின் 16 ஆவது வருட நிறைவை முன்னிட்டு புதினத்தாள்களில் மேலதிக விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழா 2019.12.19 ஆம் திகதி கௌரவ கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் தலைமையில் விளையாட்டு அமைச்சின் டங்கன்வைற் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டதுடன் அம்முறை பரிசில்கள் வழங்கும் விழாவின் பிரதான உரை பிரசித்திபெற்ற எழுத்தாளர் கலாநிதி டபிள்யு. ஏ. அபேசிங்ஹ வினால் " குழந்தைகளுடன் வாசிப்போம் " என்னும் தலைப்பின்கீழ் உரையாற்றப்பட்டது. தேசிய வாசிப்பு மாதத்தின் நிகழ்ச்சி நிரலின் கீழ் 2018 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்த நூலகங்களை மதிப்பாய்வு செய்தல் இந்நிகழ்வுக்கு இணையாக நடத்தப்பட்டதுடன் அதில் முதலாம் இடத்தை மினுவன்கொடை பிரதேச சபைக்குரிய சிறிவர்த்தன பொது நூலகத்திற்கும், இரண்டாவது இடம் யாழ்ப்பாணம் பிரதேச சபைக்குரிய கொக்குவில் பொது நூலகத்திற்கும், மூன்றாவது இடம் வெள்ளவாய பிரதேச சபைக்குரிய வெல்லவாய பொது நூலகத்திற்குக் கிடைத்தது. இதற்கும் மேலால் பாராட்டுக்குரிய மட்டத்தில் வாசிப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்த நாடு முழுவதும் பரவியுள்ள 78 நூலகங்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவ்வருடம் தேசிய வாசிப்பு மாதத்துடன் இணைந்து நாடு முழுவதும் பிரதேச வாசிப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் 2019.07.06 ஆம் திகதி மாரவில பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாசிப்பு முகாம் செயற்திட்டத்திற்கு வளவாளர்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2019.08.20 – 21 ஆம் திகதிகளில் கேகாலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் நூலக அலுவலர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அலுவலர்களின் பொருட்டு வாசிப்பு முகாம்களை நடத்துவது தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் 02 செயற்திட்டங்கள் மற்றும் 04 விநோத நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஹோமாகம பிரதேச சபைக்கு உரிய ஹோமகம பண்டாரநாயக்க நூலகம் மற்றும் வேதற கனிஷ்ட வித்தியாலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வாசிப்பு அபிவிருத்தி 03 செயற்திட்டங்கள் 2019.11.22 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அயகம பிரதேச சபை ஒழுங்கு செய்திருந்த வாசிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சியின் பொருட்டு வளவாளரைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் பாதுக்கை சுநீத சிறைச்சாலைகள் பாடசாலை மணவர்களின் பொருட்டு வினோத நிகழ்சிகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிராமிய நூலக அபிவிருத்திச் செயற்திட்டம்

இலங்கையில் கஷ்ட மற்றும் கிராமப் புறங்களில் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் நூலகங்களை அபிவிருத்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் நூலகக் கட்டிடங்களை திருத்தியமைத்தல், நூல்கள் மற்றும் மரத்தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல், அலுவலர்களைப் பயிற்றுவித்தல் போன்றன சபையின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் கிராமிய நூலக அபிவிருத்தியின் கீழ் குருநாகல் மற்றும் நுவரெலியா மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் 02 நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டன. அதற்கேற்ப குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச சபைக்கு சொந்தமான எகட்டுவெவ பொது நூலகம் மற்றும் நுவரெலிய மாவட்டத்தில் மஸ்கெலிய பிரதேச சபைக்கு சொந்தமான மஸ்கெலிய பொது நூலகம் அபிவிருத்தி செயவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூலகங்களின் பொருட்டும் நூலக உபகரணங்கள் மற்றும் நூற் கொள்வனவு தொடர்புடைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பொலந்நறுவை புராணகால தொழில்நுட்ப அரும்பொருட் காட்சியக நூலகத்தின் அபிவிருத்திச் செயற்திட்டம்

எழுச்சிபெறும் பொலந்நறுவை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்துடன் இணைந்து பொலந்நறுவை புதிய நகரத்தில் கட்டப்பட்டுள்ள புராண தொழில்நுட்ப அரும்பொருட் காட்சியகம் மற்றும் அதனுடன் இணைந்த நூலக தகவல் மத்திய நிலையம் 2019 ஜூலை மாதம் 03 ஆம் திகதி மேன்மைதகு ஜனாதிபதி திரு. மைத்திரிபால சிரிசேன அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் தாபிக்கப்பட்டுள்ள இந்த நூலகம் மற்றும் தகவல் மத்திய நிலையம் ரஜரட்ட பிரதேசம் பற்றி எழுதப்பட்ட நூல்கள், இலங்கையின் பழைய தொழில் நுட்பங்கள் மற்றும் உள்நாட்டு அறிவு பற்றிய தகவல்களால் நிறைந்த நூல்கள், பருவ வெளியீடுகள் போன்ற நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பரிபூரணமானதொரு நூலகமாகும். இந்த நூலகத்தை உருவாக்கும்போது அது தொடர்பான சகல உள்ளக வடிவமைப்பு, நூல்களைத் தெரிவுசெய்தல் , நூலக மற்றும் தகவல் மத்திய நிலையத்திற்கு அவசியமான சகல தொழில் நுட்ப வசதிகளின் பொருட்டு தேவையான ஆலோசனைகள் சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூலக தகவல் மத்திய நிலையம் தேசிய அரும்பொருட்காட்சித் திணைக்களத்தின் நிருவாகத்தின் கீழ் உள்ளது.

இணைபிரியாத நண்பர்கள் நூல்கள் செயற்திட்டம்

பாடசாலை மாணர்கள் இடையே நூல்களை வாசிப்பதற்கு ஊக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கல்வி அமைச்சின் தலமையில் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2019.05.23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இணைபிரியா நண்பன் நூல் நண்பன் என்னும் திருத்தியமைக்கப்பட்ட சுற்றுநிருபத்தை தயாரிக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்துவதற்குத் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பொருட்டு கல்வி அமைச்சின் அலுவலர்கள் உட்பட சபையின் சிரேட்ட அலுவலர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

நூலகங்களுக்கு மதியுரை சேவை வழங்குதல்

நாட்டில் உள்ள பல்வேறுவகையான நூலகங்களுக்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தேவைப்படும் மதியுரைகளை வழங்குவது சபையின் முக்கிய செயற்பாடுகளுள் ஒன்றாகும்.

இதன்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு இவ்வருடம் மதியுரை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகத்தின் / நிறுவனத்தின் பெயர்	**வழங்கப்பட்ட சேவையின் விபரம்**
நாவின்ன சுதேச வைத்திய முறை தொடர்பான தேசிய நிறுவனம்	இந்த நிறுவனத்தில் புதிய நூலகக் கட்டிடத்தை திட்ட மிடுவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது
திவுலபிட்டிய பிரதேச சபைக்கு சொந்தமான தூனகஹ பொது நூலகம்	புதிய நூலகக் கட்டிடத்தைக் கட்டுவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது
கொடக்கவெல பிரதேச சபைக்குச் சொந்தமான கொடக்கவெல பொது நூலகம்.	நூலகத்தை தன்னியக்கமாக்குவதன் பொருட்டு அடிப்படை ஆலோசனைகளுடன் கூடிய அறிக்கை வழங்கப்பட்டதுடன் முதல் விடயமாக நூல்களுக்கு "பார்கோட்" வழங்குவதற்குத் தேவையான செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.
மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற நூலகம்	நூலகத்தில் இருந்த பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.
மாகாண சபைகள் தொடர்பான இலங்கை நிறுவகம்	ஒழுங்கற்ற நூலகத்தை ஒழுங்கு முறையில் மாற்றி அமைப்பதற்கான தொழில் சார் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
குளியாபிட்டிய மாதிரி மத்திய நூலகத்தைக் கட்டுதல்	நூலகத்தைக் கட்டுதல் தொடர்பாக கல்வி அமைச்சுடன் ஆரம்ப திட்டத்தை தயாரித்தல்
ஜே ஆர் ஜயவர்த்தன மத்திய நிலைய நூலகம்	மதியுரைக் குழுவை பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
மேல் மாகாணத்தில் மாகாண சபைத் திணைக்களம்	நூலகங்களை மதிப்பாய்வு செய்வதற்கான தீர்மானங்களை திருத்தியமைப்பதற்கு ஆலோசனைகளை வழங்குதல்

நூல் உதவி வழங்கும் செயற்திட்டம்

நாட்டின் நூலகங்களில் உள்ள சேகரிப்பை அபிவிருத்தி செய்யும் வழிகளில் ஒன்றாக நூலகங்களுக்கு நூல் அன்பளிப்புச் செய்யும் செயற்திட்டத்தை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதன் பிரகாரம் இந்த வருடத்திலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நூலகங்களுக்கு நூல் உதவி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இவ்வருடத்தில் 64 பாடசாலை நூலகங்களுக்கும், 13 பொது நூலகங்களுக்கும், 22 தஹம் பாடசாலை நூலகங்களுக்கும் 03 அமைச்சு நூலகங்களுக்கும், 13 பாதுகாப்புப் பிரிவு நூலகங்களுக்கும் 10 பிற நிறுவன நூலகங்களுக்குமாக 125 நூலகங்களுக்கு ரூபா.1,381,374.25 பெறுமதியான 6947 நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

நூற் கண்காட்சிகளை நடத்துதல்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் பல்வேறு செயற்திட்டங்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நூல்களினதும் அதற்கும் மேலால் சபையினால்

வெளியிடப்படும் நூல்கள் மற்றும் நூலக எழுதுகருவிகளின் கண்காட்சி மற்றும் விற்பனையை நோக்கமாகக் கொண்டு வருடந்தோறும் பல்வேறு நூற் கண்காட்சிகளில் பங்கேற்கிறது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் பங்குபற்றிய கண்காட்சிகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

கண்காட்சி	**நடத்தப்பட்ட இடம்**	**திகதி**
கண்டி நூற் காட்சி - 2019	(Kandy City Centre) - கண்டி சிற்றி சென்ரர்	2019.06.26 -- 30
கொழும்பு பொது நூலக நூற் கண்காட்சி- 2019	கொழும்பு பொது நூலகம்	2019.07.23 – 29
வடமத்திய மாகாண நூற் கண்காட்சி	சல்காது விளையாட்டு மைதானம், அநுராதபுரம்.	2019.07.25 - 28
கொழும்பு சர்வதேச நூற் கண்காட்சி	பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் (BMICH) கொழும்பு	2019.09.20 - 29

நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட நூலக நியமங்களுக்கு ஏற்ப நூலகங்களை தரநிர்ணயம் செய்தல் சபையினால் மேற்கொள்ளப்படும் முக்கிய செயற்பாடாகும். அதன் பிரகாரம் இவ் வருடத்தில் 03 பொது நூலகம் தரம் 01 ற்கும் , 08 பொது நூலகங்கள் தரம் 02 ற்கும், 13 பொது நூலகங்கள் தரம் மூன்றிற்கு தரநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நூலகத்தின் பெயர்	**பொறுப்பான நிறுவனம்**	**வழங்கப்பட்ட தரம்**	**தரப்படுத்தப்பட்ட திகதி**
வவுனியா பொது நூலகம்	வவுனியா நகரசபை	தரம் i	2019.02.26
புத்தள பொது நூலகம்	புத்தள பிரதேச சபை	தரம் i	2019.02.26
சென்றத் பரணவிதான பொது நூலகம்	பதுளை மாநகர சபை	தரம் i	2019.02.26
கின்னியா பொது நூலகம்	கின்னியா நகர சபை	தரம் ii	2019.02.26
தம்பகல்ல பொது நூலகம்	மடுள்ள பிரதேச சபை	தரம் ii	2019.02.26
கொடக்கவெல பொது நூலகம்	கொடக்கவெல பிரதேச சபை	தரம் ii	2019.02.26
பள்ளேபொல பொது நூலகம்	பள்ளேபொல பிரதேச சபை	தரம் ii	2019.02.26
அலவத்துக்கொட பொது நூலகம்	அக்குறணை பிரதேச சபை	தரம் ii	2019.02.26
நாறங்வல பொது நூலகம்	மஹற பிரதேச சபை	தரம் ii	2019.02.26

மாறவில பொது நூலகம்	நாத்தாண்டியா பிரதேச சபை	தரம் ii	2019.02.26
ஹங்வெல்ல பொது நூலகம்	சீதாவக்க பிரதேச சபை	தரம் ii	2019.02.26
மஹறூவ் நகர் பொது நூலகம்	கின்னியா நகர சபை	தரம் iii	2019.01.08
கல்லாவ பொது நூலகம்	கல்லாவ பிரதேச சபை	தரம் iii	2019.01.30
அத்திலிவெவ பொது நூலகம்	வெல்லவாய பிரதேச சபை	தரம் iii	2019.02.26
பண்டாரவளை பொது நூலகம்	பண்டாரவளை பிரதேச சபை	தரம் iii	2019.05.16
புன்சிசிகம பொது நூலகம்	படல்கும்புர பிரதேச சபை	தரம் iii	2019.05.16
தொட்டில்லாவகஹவத்த பொது நூலகம்	திவுலபிட்டிய பிரதேச சபை	தரம் iii	2019.05.16
பியகம பொது நூலகம்	பியகம பிரதேச சபை	தரம் ii	2019.11.07
வென்னப்புவ பொது நூலகம்	வென்னப்புவ பிரதேச சபை	தரம் ii	2019.11.07

நூலக நியமங்களை திருத்தியமைத்தல்

இலங்கையில் உள்ள சகல பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், பிரிவேன நூலகங்கள் மற்றும் திணைக்கள நூலகங்களையும் நிறுவன நூலகங்களையும் அவற்றிற்கான நியமங் களுக்கு ஏற்ப தரப்படுத்துதல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் நோக்கம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அந்தந்த நூலகங்களின் ஊடாக அவை தத்தமது வாசகர் குழாத்திற்கு உயர்மட்டத்திலான நூலக சேவையை வழங்குவதன் பொருட்டு நூலகங்களை ஊக்குவிப்பதாகும். நூலகத் துறை போலவே தகவல் தொழில் நுட்பத் துறையிலும் காலத்திற்கு காலம் ஏற்ப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நூலகங்களுக்குத் தேவையான நியமங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டி உள்ளது. அதன் பிரகாரம் பொது நூலகங்களின் நியமத்தின் பொருட்டு பூர்வாங்கத் திட்டவரைபு ஒன்று தயாரிக்கப்பட்டு மதியுரைத் துணைக் குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதற்கிடையில் பாடசாலை நூலக நியமத்தைத் திருத்தியமைப்பதற்குத் தேவைான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடம்

தேசிய நூலகக் கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் தேசிய நூலக நூல் விற்பனைக் கூடம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படுவதுடன் அதை நடத்திச் செல்வதற்கான முக்கிய காரணம் கழிவு விலையில் நூல்கள் உள்ளடங்கலாக நூலக எழுதுகருவிகள் மற்றும் நூலகத்திற்கு தேவையான

ஏனைய உபகரணங்களை விற்பனை செய்வதாகும். இவ்வருடத்தில் நூல் மற்றும் ஏனைய எழுதுகருவிகளின் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூ. 3,749,509.80 ஆகும்.

நூலகங்களுக்கு நூல்களை விதந்துரைக்கும் செயற்திட்டம்.

நூலகங்களுக்கு வாசகர்களின் பாவனையின் பொருட்டு பொருத்தமான நூல்களை விதந்துரைக்கும் செயற்திட்டத்தின் மூலம் வாசகர்கள் வசிப்பதற்குப் பொருத்தமான நூல்கள் தொடர்பான வழிகாட்டுதல் கிடைக்கப் பெறுவதுடன் இவ்வருடத்தில் 65 நூல்களுக்கு விதந்துரை வழங்கப்பட்டுள்ளது.

வீட்டு நூலகங்களைப் பதிவு செய்தல்

வீடுகள் போல அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடத்திச் செல்லப்படும் நூலகங்களை சரியான வழிமுறையின் கீழ் பதிவு செய்வது சபையினால் மேற்கொள்ளப்படுகிறது. இதன் கீழ் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நூலகங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

நூலகத்தின் பெயர்	முகவரி
Light of the World Library	இல. A/04, மாடி வீடு, 80ம் வத்தை, லுணாவை, மொரட்டுவை
சனச மஹர நுகேகொடை பொது நூலகம்	சணச மஹர மாதிரி நூலகம், மஹர, நுகேகொடை, கடவத்தை
டீ.என் ராஜபக்ஸ தகம் நூலகம்	மிஹிந்து தகம் பாடசாலை, இஹலகம, கம்பஹா
ஊவ அம்பேவெல நலன்புரிச்சங்க நூலகம்	ஊவ அம்பேவெல நலன்புரிச் சங்கம், ஊவ அம்பேவெல, ஹெவனகும்புற.
லாவுளுபிட்டிய கிராம அபிவிருத்திச் சங்க பொது நூலகம்	லாவுளுபிட்டிய கிராம அபிவிருத்திச் சங்கம், லாவுளுப்பிட்டிய, வத்துறுகம.

சபையின் வெளியீடுகளுக்கு சந்தா பெறுதல்

வருடந்தோறும் சபையினால் வெளியிடப்படும் வெளியீடுகளை விற்பனை செய்வதற்கான ஒரு உப மார்க்கமாக நிறுவனங்களுக்கு வருடாந்த சந்தாவை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வெளியீடுகளுக்கு வருடாந்த சந்தா வழங்கப்பட்டுள்ளது.

வெளியீட்டின் பெயர்	**நிறுவனங்களின் எண்ணிக்கை**
01. தேசிய நூற்பட்டியல்	75
02. பிரலேகா சஞ்சிகை	61
03. இலங்கை பருவ வெளியீட்டுக் கட்டுலைரச் சுட்டி	31

விசேட தினங்களைக் கொண்டாடுதல்

உலக சிறுவர் நூல்த் தினத்தைக் கொண்டாடுமுகமாக 2019.04.02 ஆம் திகதி கொழும்புப் பொது நூலகத்தில் பாடசாலை மற்றும் பொது நூலகர்களுக்கான நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டதுடன் 2019.10.29 ஆம் திகதி சர்வதேச பாடசாலை நூலக தினத்தைக் கொண்டாடும் நிகழ்ச்சி ஒன்றை

பொரளை, சீ.டப்.டப். கன்னங்கர மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Library News குறுஞ்செய்திச் சேவையை (SMS) ஆரம்பித்தல்

நிறுவனத்தின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாக பல்வேறு மக்களுக்கு விளக்கத்தைக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த குறுஞ் செய்திச் சேவை (SMS) ஆரம்பிக்கப்பட்டள்ளது. இக் குறுஞ் செய்திச் சேவையின்கீழ் இலங்கைத் தேசிய நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு சேவைகள் தொடர்பாக பிரச்சாரத்தை ஏற்படுத்த முடிகிறது.

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் முக்கிய பொறுப்பு ஏற்கனவே சேவையில் உள்ள நூலகர்களுக்கு குறுங்கால பயிற்சிப் பாட நெறிகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு பரந்தளவிலான தொழிற் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தலாகும். இதன் கீழ் பொது, பாடசாலை, பிரிவேன, போன்ற பல்வேறு வகைசார் நூலகங்களைச் சேர்ந்த நூலகர்களின் பொருட்டு குறுங்கால பயிற்சிப் பாடநெறிகள் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. இதற்கும் மேலால் நூலகத் துறையில் இக்கால போக்குப் பற்றி நூலகர்களுக்கும் பல்வேறு தொழில் சார்ந்தோருக்கும் அறியத்தருவதாகும்.

பொது நூலக ஊழியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள் / மாநாடுகள்

பொது நூலகங்களின் சேவைத் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களைப் பயிற்றுவித்தல், மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச சபை மட்டத்தில் நடத்தப்படும் இதன் பொருட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி பெறப்பட்டு தொடர்புடைய பயிற்சிப் பட்டறைகள் நடத்தப் படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் பொது நூலகங்களுக் கான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

- வெள்ளவாய பிரதேச சபையின் பொது நூலகத்தில் Koha நூலக முகாமைத்துவ மென்பாண்டத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் நூலகத்தில் பிரிவுகளை பிரித்தல், ஏனைய சேவை செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப அதிகார சபை (ICTA) இணைந்து நடத்தும் எண்மய நூலக அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய வெலிகேபொல பிரதேச சபை பொது நூலகத்தின் நவீனப்படுத்தல் செயற்பாடுகளின் பொருட்டு ஆலோசனை வழங்குதல் மற்றும் மட்டக்களப்பு பொது நூலகத்தின் கணனித் தரவுத் தளத்தை தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல், விரிவாக்கற் சேவை மற்றும் சிறுவர் பிரிவை மீள ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டது.

- 2020 திடமான நூலக அபிவிருத்தி செயற் திட்டத்தின் முதலாவது நிகழ்ச்சி நுவரெலிய மாவட்டத்தை மையமாகக் கொண்டு 2019.06.25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நுவரெலிய பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இதில் நுவரெலிய மாவட்ட பொது நூலகங்களின் ஊழியர்களின் 75 அங்கத்தவர்கள் பங்குபற்றினர். இதன் இரண்டாவது செயற்திட்டம் 2019.09.10, 11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது நூலகங்களின் ஊழியர்களின் பொருட்டு யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நூலக முகாமைத்துவத்திற்கு மேலால் பேணல் மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

பாடசாலை நூலகர்களுக்கான பயிற்சிப் பாடநெறி / மாநாடு

நாட்டில் பாடசாலை நூலகங்களின் பொருட்டு நிரந்தரமான தொழில்சார் நூலகர்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதனால் இப்பிரச்சினையை தீர்வுகாணுமுகமாக பாடசாலை நூலகங்களுக்குப் பொறுப்பாக சேவையாற்றுவதற்கு அந்தந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆசிரியர்களுக்கு துறைசார் அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்காக தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையினால் பயிற்சிப் பாட நெறிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை நூலகங்களில் சேவை ஆற்றுபவர்களை பயிற்றுவிக்கும் செயற்திட்டத்தின் பொருட்டு பயிற்சி பாட அலகுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சி அலகுகளை உபயோகித்து கீழ்க் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் பயிற்சி பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கல்வி வலயம்	**இடம்**	**புங்குபற்றியோர் எண்ணிக்கை**	**கால அளவு**
காலி கல்வி வலயம்	காலி கலேகான பியதிஸ்ஸ வித்தியாலயம்	45	2019.05.24
கின்னியா கல்வி வலயம்	கின்னியா வலய கல்வி அலுவலகக் கேட்போர்கூடம்	64	2019.08.06-07
மேல்மாகாண கல்வித் திணைக்களம்	பத்தரமுல்லை, ரன்மங்கபாய கேட்போர் கூடம்	56	2019.07.04-05 மற்றும் 2019.11.21
காலி மற்றும் உடுகம கல்வி வலயம்	முறைசாரா கல்வி பயிற்சி மத்திய நிலையம். கலேகான, காலி	86	2019.08.19-21
தெனியாய கல்வி வலயம்	தெனியாய மத்திய மகா வித்தியாலயம்	54	2019.09.17-19

நுவரெலியா கல்வி வலயம்	நுவரெலிய பேன்டர் ஞாபகார்த்த வித்தியாலயம்	70	2019.11.06
வலபனே கல்வி வலயம்	வலபனே வலயக் கல்வி செயலகம்	46	2019.11.07

பிரிவேன நூலகம் மற்றும் சமய நூலக ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறை / மாநாடு

- கொழும்பு மாவட்டத்தில் இஸ்லாமிய பாடசாலை நூலகங்களின் ஊழியர்களின் பொருட்டு பயிற்சிப் பட்டறைகள் 2019.06.18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தபோதும் நாட்டில் இருந்த நிலைமை காரணமாக (பாஸ்கு ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாத தாக்குதல் காரணமாக) இந்நிகழ்சியை நடத்துவது பிற்போடப்பட்டுள்ளது.
- காலி மாவட்ட பிரிவேன நூலகர்களின் பொருட்டு பயிற்சிப் பட்டறை ஒன்று 2019.10.10 மற்றும் 11ஆம் திகதிகளில் காலி கரண்தெனிய மடகும்புர மஹா பிரிவேனா சூழலில் நடத்தப்பட்டதுடன் அதில் 58 பொறுப்பான பிக்குமார் பங்கு பற்றினர்.

நூலக மென்பாண்டங்கள் தொடர்பான தொழில்நுட்பச் சேவைப் பயிற்சிப் பட்டறை

- 2019.09.25,26 மற்றும் 27 ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்ட பொது நூலகர்களின் பொருட்டு கொஹா (Koha) மென்பாண்டம் தொடர்பாக பயிற்சிப் பட்டறை ஒன்று அம்பாறை கணனி வளமத்திய நிலையத்தில் நடத்தப்பட்டதுடன் அதில் 28 பயிலுநர்கள் பங்குபற்றினர்.

சேவைக்காலப் பயிற்சிப் பாடநெறி

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கைத் தேசிய நூலகத்தில் பயிற்சியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் மக்களின் பொருட்டு குறுகிய கால சேவையில் ஈடுபடுத்தி விரிவுரைகள் மற்றும் செயல்முறைப் பயிற்சிகளின் மூலம் பயிற்சி வழங்கப் படுகிறது. ஒரு சேவைக்காலப் பயிற்சி நெறியின் கால அளவு ஐந்து நாட்களாகும். சேவைக்காலப் பயிற்சிப் பட்டறை தொடர்பாக விதிமுறையிலான பயிற்சி நெறிகள் சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

பயிற்சிக்கான துறை	**யாருக்காக**	**கால எல்லை**
நூலக முகாமைத்துவம்	தனிநபர் விண்ணப்பதாரிகள்	2019.03.11 - 15
ஓலி நாடாக்கள் பேணல்	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நூலக ஊழியர்கள்	
நூலக முகாமைத்துவம்	தேசிய பரவா நோய்கள் ஆய்வு கூடம் மற்றும் தேசிய	2019.06.17 - 21

	கைவினை சபையின் நூலக ஊழியர்கள்	
நூலக முகாமைத்துவம்	பனாகொடை படை முகாம் நூலகத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர்கள் மற்றும் இலங்கை பொது நிருவாகம் தொடர்பான நூலகத்திற்குப் பொறுப்பான ஊழியர்கள்	2019.10.28 - 2019.11.01
நூலக முகாமைத்துவம் மற்றும் நூல் மட்டைகட்டுதல் தொடர்பான பயிற்சி	மருதானை தொழில் நுட்பக் கல்லூரி நூலக ஊழியர்களின் பொருட்டு	2019.12.02 -06
Koha மென்பாண்டத்தில் தரவுகளை உட்புகுத்தல்	தேசிய அரும்பொருட்காட்சி திணைக்கள நூலக ஊழியர்களின் பொருட்டு	2019.12.23 -24

வாசிப்பு இரசனையை அபிவிருத்தி செய்யும் பயிற்சிப் பட்டறை

- 2020 வலுவான நூலக அபிவிருத்தி செயற் திட்டத்துடன் இணைந்து 2019.06.27 ஆம் திகதி நுவரெலிய காமினி தேசிய பாடசாலையின் 150 மாணவர்களுக்கு இலக்கிய இரசனை, சிறுவர் எழுத்தாளர்களை உருவாக்குதல், மற்றும் பாடசாலை மாணவர்களின் வாசிப்பு இரசனையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக அறிவூட்டும் செயற்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஏனையவை

- இலங்கை பொதுமக்கள் பாவனையாளர் அதிகார சபைக்குச் சொந்தமான ஆவணங்கள் மற்றும் தகவல் முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான ஆலோசனையை வழங்குமாறு கிடைத்த வேண்டுதலுக்கு இணங்க தேவையான மதிப்பாய்வின் பின்னர் ஆவண முகாமைத்துவம் தொடர்பான செயற் திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- களனிப் பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான கல்விப் பிரிவின் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் பொருட்டு மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியை வழங்குவது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு 2019 ஆகஸ்ற் 30ம் திகதி நேரிட்டது.

வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு உதவிச் செயற் திட்டத்தை ஆரம்பித்து அதைக் கொண்டு நடத்துதல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சகல வெளியீடு களையும் வெளியிடுதல், சிறப்பு இலக்கிய நூல்களைத் தொகுத்தல், மொழி பெயர்த்தலும் வெளியிடுதலும், வெளியீட்டுப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும். இதற்கும் மேலால் சர்வதேச நியம இலக்கத் திட்டத்தின் கீழ் ISBN/ISSN/ISMN இலக்கங்களை வழங்குவதும் பல்வேறு மட்டங்களில் எழுத்தாளர் சமூகத்திற்கு வெளியீட்டுச் செயற்பாடு தொடர்பாக மதியுரைகளும் உதவிகளும் வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

வெளியீட்டு உதவிச் செயற்திட்டம்

இலங்கை எழுத்தாளர்களுக்கு நூலாக்கத்திற்கு உதவி செய்யும் நோக்குடன் 1984 ஆம் ஆண்டில் இருந்து இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச் செயற் திட்டத்தின் பொருட்டு கையெழுத்துப் பிரதிகளைச் சமர்பிப்பதற்கு எழுத்தாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் சமர்பிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகளுக்கு உதவி வழங்கப்படுகிறது. இச் செயற்திட்டத்தின் கீழ் கையெழுத்துப் பிரதிகளை வழங்குவதற்கு கடந்த பல வருடங்களாக வருடம் முழுவதும் சந்தர்ப்பம் வழங்கியிருந்த போதும் செயற்திட்டத்தை முகாமைத்துவம் செய்யும்போது அம் முறையில் பாதிப்புக்கள் ஏற்பட்டதால் இந்த வருடத்தில் இருந்து வருடத்தின் இறுதிக் காலாண்டில் மட்டும் கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு சபை தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் கையெழுத்துப் பிரதிகளை பெற்றுக் கொள்வது 2019 செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டது. கையெழுத்துப் பிரதிகள் பற்றிய விரம் கீழே தரப்பட்டுள்ளது.

பாடத் துறை	சிங்களம்	தமிழ்	ஆங்கிலம்	மொத்தம்
சிறப்பிலக்கியம் மற்றும் ஆய்வு நூல்கள்	32	01	02	35
ஆக்க இலக்கியம் (சுய ஆக்கம் மற்றும் மொழிபெயர்ப்பு)	47	02	02	51
புதின்ம வயதினர் இலக்கியம்	14	-	01	15
சிறுவர் பிரபந்தம்	18	-	04	22
மொத்தம்				122

இச் செயற்திட்டம் பரந்தளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் கடந்த பல வருடங்களுள் (2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில்) தீர்வு வழங்கமுடியாமல் எஞ்சியிருந்த கையெழுத்துப் பிரதிகளை வெளியீட்டு மதியுரைக் குழுவிடம் சமர்பித்து பொருத்தமான தீர்வு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் சிறப்பிலக்கியம் மற்றும் ஆக்க இலக்கிய 47 நூல்களுக்கும், சிறுவர் மற்றும் பதின்ம வயதினரின் 11 நூல்களுக்கும் உதவி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உதவி வழங்கப்பட்ட நூல்கள் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர்.இலக்கம்	நூலின் பெயர்	விடயம்	ஆசிரியர்
2015/95	Marmageethangal	புனை கதை	A.C. Jereena
2016/J/14	ஏகஸ் பெரே கத்தான்தர	சிறுவர் கதை	இரங்கா சமிந்தனீ வீரக்கொடி
2016/J/15	அப்பி மெஹமய் பேரன்னே	சிறுவர் கதை	துசித்த ரணசிங்ஹ
2016/J/16	Poems of young minds	கவிதை	லலிதா சோமதிலக
2016/J/27	அப்புறு மினிசெக்	புதின்ம வயதினர் இலக்கியம்	கே.ஏ. குசும் காரியப்பெரும
2016/J/65	சுது பஞ்சா	சிறுவர் கதை	குமாரி நெரஞ்சனா
2016/02	ரிகிரிபண்டா பான பொக்கே	வாழ்க்கை வரலாறு	யசபால வணசிங்ஹ
2016/43	Etnirvisaranal	சிறு கதை	T. Malarchelvan
2016/111	சமகியே பாலம	புனை கதை	பிரேமரத்ன செனரத்பத்திரன
2016/123	நீதி ரக்கவரணய ஒபாய் அம்மே	சிறு கதை	நீதா குமுதுனீ மஹவத்த
2016/139	கருவல கெதற பிலிபந்த விமர்ஷனாத்மக்க கற்கை	ஆய்வு சிறப்பிலக்கியம்	எஸ்.ஐ. சீ. ரணசிங்ஹ
2016/158	மெதியம அக	புனை கதை	எம். எம். சுயித் பிரசங்க
2016/166	பவுள் சங்ஸ்தாவே பிந்த வட்டீம	சமூக விஞ்ஞானம்	சுரேஸ் மிஹிர பண்டார
2016/172	Buddhist Nikayas in Sri Lanka	Buddhism	Prof. T.G. Kulathunga
2016/173	தசதிக செரிய	புனை கதை	ஏல். ஜீ. எஸ்.எம். தர்மரத்ன
2016/174	ஹசிகோ ஹமுவீம	சிறு கதை	பத்ரா இந்ராணி அமரகோன்
2016/178	பஞ்சதந்திரிய லபித பிரநாம	ஆய்வு சிறப்பிலக்கியம்	பூஜ்ஜ கணுமல் தெனியே சந்தசோம ஹிமி
2016/181	நைஜீரியானு ஜன கத்தா	நாட்டார் கதை	அத்துல ஆர் பெரேரா
2016/182	Ennpparuweli	சிறப்பிலக்கியம்	Rameez Abdullah
2017/Y/008	ஆக்பார் மிஜபல் கதா	சிறுவர் கதை	அத்துல ஆர். பெரேரா
2017/J/07	மே அவுறுது காலே	சிறுவர் கதை	ஜயதிஸ்ஸ பொரளுகொட
2017/J/23	லோகெட்ட லொக்கா மங் தமாய்	சிறுவர் கதை	கே.த.எஸ். சுதசிங்ஹ

2017/J/27	කජ මිතුරා	සිරුවර් කතෙ	පියසිරි මාතරකෙ
2017/J/34	රණ්පියුම	සිරුවර් කතෙ	ආරියපාල රත්නායක්ක
2017/J/35	රිති පඤ්චි	සිරුවර් කතෙ	කුමාරි අපේකුණවර්ත්තන
2017/07	ඉයකිරාණි පාසල් නාට්ටිය සමක සරල නාට්ටිය වික්කිරහය	නාටකම්	එල්.පී.වීරසිංහ
2017/15	කරලිය මත්ත පූමිකා	නාටකම්	උතේනි සන්තිරසිරි
2017/18	තහඅට්ට මසක් අන්හහරු මීතු	විඥාන නාවල්	රඤ්චිත් ඉලුප්පිට්ටිය
2017/19	සුත්තිකේ මළකම	පුනෙකතෙ	එම්.එන්. පෙරේරා
2017/24	ජාතක කත්තා- අත්පූතය හා යතාර්තය	සිංකළ සිරප්පිලක්කියම්	කිහාන් මතුසංක
2017/26	හතරිස් මුහුණ රවුම	පුනෙකතෙ	තර්මසේන රණසිංහ ආරාච්චි
2017/27	Kothumalikknai	Novel	U. Nesar
2017/35	අළු කුමාරයාකේ කතාව	පුනෙකතෙ	ඩී.රන්හ සමන් විජේසිංහ
2017/42	Wonder of our Forest	Environment	Douglas B.Ranasinghe
2017/47	Realities in life	Poetry	Lalitha Somathilaka
2017/47	19th Century Polical Work and Social Institutions	Research and Sientific Literature	Rev. Dr. Olaganwatte
2017/50	මීකමු තුව ආසිරිත්ත ඉනමාත්තිය	පොතුසනත් තොටර්පු	පී.එම්.එස්.ආර්.කේ.පී. රත්නායක්ක
2017/52	අන්තිම ඉල්ලීම	සිරු කතෙ	කුණරත්න ඒකනායක්ක
2017/62	සංකිරාන්තිය	පුනෙ කතෙ	හේමලතා රාජකුරු
2017/68	සිංහළ ඉනවහර	මොළි	කේ.පී. මානෙව
2017/72	වහරමු හෝන්තින් විමසා	මොළි	යසවර්ත්තන රුත්තිරිකු
2017/79	එලීසා	පුනෙකතෙ	නන්තතාස වික්කිරමාරාච්චි
2017/83	මහමානව	ආය්වු මර්රුම් සිරප්පු ඉලක්කියම්	ඩී.පී.ඒ. සමරනායක්ක
2017/84	ජීවාංකුර	සෙය්යුළ්	ජී.හසාන් වීරංක
2017/86	හත්කෝරාළය ආසිරිත්ත ඉනකත්තා	නාට්ටාර් කතෙ	එච්.එම්. සෝමරත්න
2017/89	Journalism in Sri Lanka	Journalism	Thevathas
2017/91	Kanavulsgam	සෙය්යුළ්	R.M.M. Sheriff

2017/Y/03	போசத் கதத்தான்தறே	உரைநடை	அனுரசிறி ஹெட்டிகே
2017/Y/10	Delhi Tiger	Poetry	M.M.B.G. Karunarathna
2017/Y/16	ஏதண்டென் எகொடட்ட	புதின்மவயதினர் இலக்கியம்	சீ. கொடித்துவக்கு
2017/Y/22	20 Jataka Stories	Poetry	K.Samaranayake
2017/94	மினிஸ்சு கிம்புலு ஹா நில்வளா கங்க	ஆய்வு மற்றும் சிறப்பு இலக்கியம்	ஜயதிஸ்ஸ தென்னகோன்
2017/102	யக்கலே வாஹெலா	புனைகதை	ஞானசேன பத்திரண
2017/111	அனகிதறுவோ	புனைகதை	சுசீலா நந்தனீ மாயாகொட
2017/115	சகோதற முஹுணுவற	செய்யுள்	ரஞசித் மல்லியாவடு
2017/124	பஸ் பங்குவே பங்குகாரயோ	ஆயுள்வேதம்	பேராசிரியர் பியசிரி அமிலசித் யாபா
2018/J/03	மே நில் அஹச ஹா அபி	சிறுவர் நாவல்	பீ. தர்மசேன
2018/J/09	காகேத பெற ஹண்ட	சிறுவர் நாவல்	வனிதா ரத்நாயக்க

(J சிறுவர் நூல்) (Y பதின்ம வயதினர் நூல்)

புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டம்

நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபடும் எழுத்தாளர்களுக்கு உதவி அளிக்கும் நோக்கத்துடன் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்கீழ் கொள்வனவு செய்யும் வருடத்துடன் தொடர்புடைய அந்த வருடத்தில் அல்லது அதற்கு அண்மித்த இரு வருடங்களுக்கு முன்னர் அச்சிடப்பட்ட நூல்களை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் தெரிவு செய்யப்பட்ட நூல்களில் ஒரு தொகை பிரதிகளைக் கொள்வனவு செய்து எழுத்தாளர்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் 134 நூற் தலைப்புக்களின் கீழ் ரூ. 502,593.00 பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மொழி அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட நூல் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

மொழி	**நூற் தொகை**
சிங்களம்	81
தமிழ்	14
ஆங்கிலம்	09

சிறப்பு இலக்கிய நூல்களை பதிப்பித்து வெளியிடல்

பன்சீயப் பனஸ் ஜாதக நூல் :

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறப்பிலக்கியங்களை பதிப்பித்து வெளியிடும் செயற் திட்டத்தின்கீழ் **பன்சீயப் பனஸ் ஜாதக** நூலின் திருத்தியமைக்கப்பட்ட இரண்டாம் பதிப்பு பதிப்பிடப்பட்டு வருகிறது. ஐந்து (05) தொகுதிகளைக் கொண்ட இந் நூலின் நூன் முகத்துடன் I ம் மற்றும் II, III, மற்றும் IV ஆம் தொகுதி என

தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுதிகளுள் நூன் முகம் மற்றும் I ம் , II, ஆம் தொகுதிகளின் அச்சிடும் வேலை கடந்த வருடம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் III ம் தொகுதியின் அச்சிடல் வேலைகள் 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் IV ம் தொகுதியின் அச்சு செவ்வை பார்க்கப்பட்டு வருகிறது. இங்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் பிரதிகள் வீதம் அச்சிடப்படுகிறது.

புத்சரண:

புத்சரண நூலைப் பதிப்பித்து வெளியிடும் செயற் திட்டத்தின் கீழ் **புத்சரண** நூல் பதிப்பித்து வெளியிடுதற்கு இவ் வருடம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பதிப்பிக்கும் செயற்பாட்டின் அடிப்படைச் செயற்பாடுகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் பதிப்பித்தற் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிங்கள கல்விப் பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. புதிப்பிக்கும் செயற் பாடுகளின் போது அக்கல்விப் பிரிவின் பேராசிரியர் ரோஹினி பரணவிதான, பேராசிரியர் ஆனந்த திஸ்ஸ குமார மற்றும் கலாநிதி பிரேமசிறி நாகசிங்ஹ போன்றவர்களின் பங்களிப்பு கிடைத்தது. இந்த வெளியீட்டை மக்களுக்குக் கிடைக்கவைக்கும் வைபவம் 2019 ஜூலை 30 அம் திகதி கல்வி அமைச்சரின் தலைமையில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த விழாவின்போது கௌரவ பேராசிரியர் திரு. கே. ஏன்.ஓ. தர்மதாச, பேராசிரியர் திருமதி ரோஹினி பரணவிதான அவர்களினால் புத்சரண நூல் பற்றி மதிப்பாய்வு செய்யப்பட்டது.

நூலக விஞ்ஞான வெளியீடுகளை வெளியிடுதல்

நூலக துறைசார் அறிவை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இவ் விடயத் துறை தொடர்பான பதிய நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் அல்லது வேறு மொழிகளில் அச்சடப்பட்ட நூல்களை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் கீழ் சர்வதேச நூலக சங்க சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட Guidelines for Library Services to Prisoners – 3rd edition ஆலோசனைக் கொத்து சிறைக் கைதிகளின் பொருட்டு **நூலக சேவைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள் 3 ஆம் பதிப்பு (“சிறகருவன் சந்தஹா புஸ்தகால சோவ பிலிபந்த மார்கோபதேச3 வன சங்ஸ்கரணய)** என்னும் தலைப்பில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம் மொழிபெயர்ப்பு கலாநிதி பிரமிலா கமகே மற்றும் சுனில் வலிமுனி யினால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதுடன் அதன் சகல பதிப்புச் செயற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டு அச்சிடுவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது.

சபையின் ஏனைய வெளியீடுகள்

பிரலேகா சஞ்சிகை

சபையினால் வெளியிடப்படும் பிரலேகா காலாண்டுச் சஞ்சிகை 2019 ஜனவரி – மார்ச் மற்றும் ஏப்ரல்- ஜூன் தொகுதி “அரசியல் இலக்கியம் “ கருப்பொருளாகக் கொண்டும், ஜூலை - செப்ரெம்பர் தொகுதி “மொழிபெயர்ப்பு இலக்கியம்” கருப்பொருளின் கீழும் 2019 ஒக்ரோபர் - டிசம்பர் தொகுதி “ கவிதை” கருப்பொருளாகக் கொண்டும் வெளியிடப் பட்டுள்ளன.

தேசிய நூலகத்தின் உசாத்துணைச் சஞ்சிகை

அரையாண்டு சஞ்சிகையாக வெளியிடப்படும் இந்தச் சஞ்சிகையின் 2019 ஜனவாரி – ஜுன் தொகுதி பதிப்பு வேலை நிறைவடைந்து வெளியிடுவதற்குத் தயாராக உள்ளது.

NATNET LANKA செய்தி மடல்

நூலகத் துறைசார் பல்வேறு செய்தி மற்றும் தற்போதைய நடவடிக்கைகளை ஒன்று திரட்டி இந்தந் செய்திப் பிரசுரம் **NATNET LANKA** என்னும் பெயரில் வெளியிடப்படுகிறது. இந்த வருடம் முதலாவது தொகுதி வெளியிடப்பட்டுள்ளதுடன் 2019 ஜுலை -டிசம்பர் தொகுதிக்கு உரிய செய்திகளின் தொகுப்பு வேலை நடைபெற்று வருகிறது.

சபையின் வெளியீடுகளை அச்சடுதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் காலத்திற்கேற்ப வெளியிடப்படும் பல்வேறு வெளியீடுகள் சபையின் றிசோகிராப் இயந்திரத்தின் மூலம் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. இதன்கீழ் அச்சிடப்பட்ட வெளியீடுகளில் சில

- **இலங்கைத் தேசிய நூற்பட்டியல் மற்றும் பருவ வெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி**
  இலங்கையில் வெளியிடப்படும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் அடங்கிய இலங்கைத் தேசிய நூற்பட்டியல் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. 2019. ஆம் ஆண்டில் 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரயிலான 09 தொகுதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

- இலங்கை பருவ வெளியீட்டுக் கட்டரைச் சுட்டி ஆண்டொன்றுக்கு 04 வெளியீடுகள் வெளியிடப்படும். 2019 ஆம் அண்டில் 2018 இரண்டாம் தொகுயில் இருந்து நாலாவது தொகுதி வரை 03 தொகுதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

ிறுவர் நூல்களைத் தொகுத்தல் தொடர்பாக அடிப்படை நியங்களைத் தயாரித்தல்

சிறுவர் நூல்களை தயாரிப்பது தொடர்பான நியமங்களை உள்ளடக்கி சிங்கள மொழிமூலம் தொகுக்கப்பட்டுள்ள ஆலோசனைக் கொத்தானது தழிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் சிறுவர் நூல்களில் ஈடுபடும் எழுத்தாளர்களுக்கு இது மிகப் பிரயோசனமாகும்.

சர்வதேச நியம நூல் இலக்கச் செயற் திட்டம் - (ISBN/ ISSN/ ISMN)

இலங்கையில் அச்சிட்டு வெளியிடப்படும் நூல்கள் உட்பட சகல வெளியீடுகளின் பொருட்டும் சர்வதேச நூல் இலக்கங்களை வழங்கும் தேசிய மத்திய நிலையமாக தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையே செயற்படுகிறது. அதன் பிரகாரம் சகல நூல்களின் பொருட்டும் சர்வதேச நியம நூல் இலக்கமும் (ISBN), சகல பருவ வெளியீடுகளுக்கும் சர்வதேச சஞ்சிகைகள் நியம இலக்கமும் (ISSN), சகல குறியீடுகளுடன் வெளியிடப்படும் சங்கீத வெளியீடுகளின் பொருட்டு சர்வதேச நியம சங்கீத இலக்கமும் (ISMN) வழங்கப்படுகின்றன.

சர்வதேச நியம நூல் இலக்கத் திட்டம் (ISBN)

ISBN · செயற்திட்டத்தின் கீழ் நூல்களுக்கு இலக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் வெளியீட்டாளர்கள் தொடர்பான தகவல்கள் சர்வதேச ரீதியில் வெளியிடப்படுகிறது . 1986 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை இலங்கைக்கு உரித்தான பிராந்திய அடையாள இலக்கம் 955 ஆகும் இதற்குப் பதிலாக 2019 ஆம் ஆண்டில் இருந்து பிராந்திய அடையாள இலக்கம் 624 என ISBN சர்வதேச மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 11627 ISBN இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. ISBN இன் பொருட்டு புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ள வெளியீட்டாளர்கள் 516 பேரின் விபாரங்கள் சர்வதேச மத்திய நிலையத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலக்கங்களைப் பெற்றுக்கொண்ட வெளியீட்டாளர்களினால் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்ட அச்சிடப்பட்ட 1503 நூல்கள் இலங்கைத் தேசிய நூலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளியீட்டாளர்களுக்கு ISBN இலக்கங்களை வழங்கியதன் மூலம் கிடைத்த வருடத்திற்கான வருமானம் ரூ. 1,162,700.00 ஆகும்.

சர்வதேச நியம பருவ வெளியீடுகள் இலக்கத் திட்டம் (ISSN)

இச் செயற்திட்டமானது 1993 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வெளியிடப்படும் சகல பருவ வெளியீடுகளுக்கும் நியம இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச நியம நூல் இலக்கச் செயற்திட்டத்தின் கீழ் நூல்களுக்கு வழங்கப்படும் சகல வரப்பிரசாதங்களும் வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் இலங்கையில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகளுக்கும் வழங்கப்படும். 2019 ஆம் ஆண்டில் 201 பருவ வெளியீடுகளுக்கு ISSN இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் கிடைத்த ஆண்டுக்கான வருமானம் ரூ. 20,100.00 ஆகும். ISSN இலக்கங்களை வழங்குவதன் கீழ் வெளியீட்டாளர்களினால் வழங்கப்பட்ட பருவ வெளியீடுகள் 135 ஐ தேசிய நூலகத்திடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 நொவம்பர் மாதம் 12 திகதியில் இருந்து 16 வரையான காலப் பகுதியில் இந்தியாவின் புதி டெல்கி நகரத்தில் நடைபெற்ற ISSN பணிப்பாளர்களின் 44 ஆவது கூட்டத்திற்கு பணிப்பாளர் திருமதி சேனானி பண்டார பங்குபற்றினார்.

சர்வதேச நியம சங்கீத இலக்கத் திட்டம் (ISMN)

சர்வதேச நியம சங்கீத இலக்கச் செயற்திட்டத்தின் கீழ் இசைக் குறியீடுகளுடன் கூடிய சங்கீதத்திற்கு இவ்விலக்கம் வழங்கப்படுகிறது. இவ் வருடத்தில் வழங்கப்பட்ட ISMN இலக்கங்களின் எண்ணிக்கை 83 ஆகும். வெளியீட்டாளர்களுக்கு இவ் இலக்கங்களை வழங்கியதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 8,300.00 ஆகும். இலக்கங்களைப் பெற்றுக்கொண்ட வெளியீட்டாளர்களினால் சுயவிருப்பின் பேரில் 09 அச்சிட்ட நூல்கள் இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

வெளியீட்டாளர் பிரிவு	நூற் தலைப்புக்களின் எண்ணிக்கை		
	ISBN	**ISSN**	**ISMN**
வியாபார மட்டத்திலான வெளியீட்டாளர்கள்	5366	53	33
அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன வெளியீட்டாளர்	3838	140	10
ஆசிரிய / தனிநபர் வெளியீட்டாளர்	2423	08	40
மொத்தம்	11627	201	83

ISBN/ ISSN/ ISMN வழங்குவதற்கு இணையத்தினூடாக கொடுப்பனவு செய்வதற்கான வழிமுறை ஒன்றைத் தயார் செய்தல்

நாட்டில் எந்தவொரு பிரதேசத்தில் இருந்தும் இணையத்தினூடாக பணம் செலுத்தி நியம இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கும் முகமாக இத்திட்டம் ஆலோசிக்கப் பட்டுள்ளது. இதனூடாக நூல் வெளியீட்டாளர்கள் அல்லது எழுத்தாளர்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்கு வருகை தராது இலகுவாக இலக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யும் நிகழ்நிலை அமைப்பின் ஊடாக சர்வதேச நியம இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள அமைப்பை உருவாக்குவதற்காக கேள்விகள் வரவழைகக்கப்பட்டு Nekfa Australia என்னும் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் அந்த நிறுவனத்துடன் சபை அலுவலர்கள் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடி ISBN , ISSN, மற்றும் ISMN இலக்கங்களை வழங்குவதற்கு பொருத்தமான தரவுத் தளமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. இத் தரவுத்தளத்திற்கான அடிப்படைத் தயாரிப்புக்கள் இந்த வருடத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது

தெவுந்தர துறையில் இருந்து பருத்தித்துறை வரையிலான இலக்கியப் பாலம் - நூல் மொழிபெயர்க்கும் செயற்திட்டம்

இனங்களுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் அந்தந்த மொழிகளில் எழுதப்பட்ட நூல்கள் தொடர்பாக இனங்களுக்கிடையே தெளிவை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் 2000 ஆம் ஆண்டின் பின்னர் வெளியிடப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட 14 சிறுகதைகள் இச் செயற் திட்டத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்ட 14 சிறுகதைகளுள் 07 சிங்கள மொழிமூலம் எழுதப்பட்டனவும் 07 தமிழ் மொழிமூலம் எழுதப்பட்ட சிறுவதைகளாகும். இச் சிறுகதைகளின் சொந்தக்கார்களுக்கு உரிய ஆசிரியருக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டு அவர்களின் அனுமதியைப் பெறுவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இச் செயற்திட்டத்தின் உத்தியோகபூர்வ ஆரம்ப விழா கௌரவ கல்வி அமைச்சர் மற்றும் கல்வி ராஜாங்க அமைச்சரின் தலைமையின் கீழ் 2019 மார்ச் மாதம் 28 ஆம் திகதி கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பு செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் பொருட்டு

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட சிறு கதைகளினாலான நூல் ஒன்றைத் தொகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Kiyawamu.lk செயற்திட்டம் - அச்சிட்ட நூல்களை இலத்தரனியல் நூல்களாக மாற்றுதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலங்கை ரெலிபொம் நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப் படுத்தும் Kiyawamu.lk வெப் பக்கத்தில் இணைப்பதன் பொருட்டு 63 புதிய நூல்கள் இலத்திரனியல் நூல்களாக (e.pub) மாற்றப்பட்டுள்ளன.

நூலின் பெயர்	**ஆசிரியர்**
01. ரத்திரன் புத்தெக்	சுமனசிரி பன்னிலஹெட்டி
02. அசபெந்தி சபென்தி	ஹங்சனீ பிரமுதிதா
03. மடுவன்வலட்ட பியமன்	சாந்த துணுகார
04. த்ரிஸ்ய வித்தியாத்மக்க மானவ வித்தியா	சுமின்த கித்சிரி குணரத்ன
05. மாதனா	போதி வித்யாரத்ன
06. தெலொவத் அதற தெதெனெக்	சந்தறுவன் பனாகடுவ
07. Rose Gutter	Mr. W.A.N.A Wijesuriya
08. காந்தர்வயா அஸ்வயா சக மஹள்ளா	தனுஷா என் அயகம
09. ஜைவகத்திக குருஷிகர்மய	விமலா தேவநாராயன
10. நாக மாணிக்கய	சோமரத்ன ஹரஸ்கம
11. சௌற பிரபாத்த	எம்.டபிளிவ் ஜனதாச
12. மே நிவாடு காலெய்	சோமலதா வைத்யரத்ன
13. அஹஸ் வியன	சோமலதா வைத்யரத்ன
14. நவும் சுளங்க	அயிரின் நாணயக்கார
15. ஜோர்ஜ் கீத்	எச்.பீ. குணரத்ன
16. ரத்னபுர திஸ்திரிக்கயே அபிலேஹன சக பரணி ஸ்மாரக	எச்.எம் ஜயந்த விஜேரத்ன
17. ஆவேதித்த தர்ஸன ஹா யைன விஞ்ஞான விபாகய	பேராசிரியர் தயா எதிரிசிங்ஹ
18. வசந்த சிரித்த	துசித்த ஜயசுந்தர
19. நேலா	இந்திராணி ரத்னசேகர
20. எலிசா	நந்ததாச விக்கிரமஆராச்சி
21. பியவறு சக புத்து	நந்ததாச விக்கிரமஆராச்சி
22. பாவ புஷ்ப	திக்அல்லே விஜயதிலக்க
23. மஹா மானவ	பிரேமரத்ன சமரநாயக்க
24. ஜன சங்கீத விமர்ஸன	இரங்கா சமின்தனீ வீரக்கொடி
25. அஸ்தங்கத்த	ஜயந்த வீரக்கொடி
26. தண்டுலேனா	கீர்த்தி வெலிசறகே
27. மாயா தீர்த்த	கீர்த்தி வெலிசறகே
28. கால சர்ப்ப	கீர்த்தி வெலிசறகே
29. அத் மிதும	கீர்த்தி வெலிசறகே
30. டெபறு	ராஜா கருணாதாச
31. சோரகர்ம சக தவத் கதா	விஜய மிஹிந்துகுல சூரிய
32. ஹத்கோரளய ஆசிரித்த ஹேன் கொவிதன	சோமரத்ன போகஸ்வெவ

33. பஸ் பங்குவே பங்குகாரயோ யாபா	பேராசிரியர் பியசிரி அம்லயித்
34. பய்ஸ்கோப் உன்மாதள	பியசேன விக்கிரமகே
35. குடும்ப ஷக்ர	வனிதா ரத்நாயக்க
36. ஸ்ரீ லாங்கேய மஹநுவர சம்பிரதாயே விஹார பித்திசித்துவம் கலாவ சக எஹி நவ பிரவணதா	டபிளிவ்.எம்.பீ.சுதர்ஸன பண்டார
37. பிந்தன்னே வெதி பச	சந்தறுவன் லொகுஹேவா
38. ரோபட் பேடன் பவல்	உதித்த அழஹகோன்
39. மஹாத்மா காந்தி	உதித்த அழஹகோன்
40. சிங்ஹபாகு எனக்கங்	அநுரசிரி ஹெட்டிகே
41. திமியா	அநுரசிறி ஹெட்டிகே
42. ஹித்துவத்காரி	எச்.பீ.குணரத்ன
43. மதுலோலீத்வய சுவ கிரிரே பஹசு மக	தனுஷ்க நிரங்க திசாநாயக்க
44. அகால யாத்ரா	கதலீன் ஜயவர்த்தன
45 தாது கெட்டய	கதலீன் ஜயவர்த்தன
46. தாரா	கதலீன் ஜயவர்த்தன
47. சத்யகாம	கதலீன் ஜயவர்த்தன
48. பலன்கடுதுறா ஹெர தாசே	கதலீன் ஜயவர்த்தன
49. வெத்தா	சந்திர ஸ்ரீ ரணசிங்ஹ
50. ரத்து லொவ வசந்தய	பீ எம் ப்ரீத்தி ஸ்ரீகாந்த
51. சுபிரி மதகய	அசோக மஹேந்திர பளிகவட்டன
52. சித்தார்த்த	கலாநிதி டபிள்யு ஏ அபேசிங்ஹ
53. சமாஜய நிருவத் கள கெகனிய	கலாநிதி டபிள்யு ஏ அபேசிங்ஹ
54. கான்தி ஆதர்சய	கலாநிதி டபிள்யு ஏ அபேசிங்ஹ
55. ஸெஸ் புஹுனுவ	பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல
56. சங்ஜானனய ஹா சன்னிவேதனய	பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல
57. ஈஸவர விங்சத்திய	அருண லொகுலியன
58. சாந்திகர்ம ஹா சன்னிவேதனய	அருண லொகுலியன
59. சிந்துகெதற லமய்	நிலந்தி பிரநாந்து
60. மஹ சமயம ஹா எபிக் நாட்டியவேதய	பேராசிரியர் ஆரியரத்ன எதுகல
61. ஏதண்டென் எகொட	சந்திரசேன கொடித்துவக்கு
62. சன்னிவேதனய	பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச
63. புஸ்தகால ஹா விஞ்ஞாபன வித்தியா சுங்கல்ப ஹந்துன்வா தீம சாமான்ய அவபோதய	ஜுட் முத்துகொட மஹதா சக மைத்தி ஜயசுந்தர மஹதா

மாநாடுகளும் பயிற்சிப் பட்டறைகளும்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவினால் நூலாக்கத்தின் போது பின்பற்றவேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும், சர்வதேச நியம நூல் இலக்கம் (ISBN, ISSN, ISMN)தொடர்பாக எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் போல இத்துறையில் கவனம் செலுத்தும் மக்களுக்கு விளக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு

பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தப் படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் அவ்விதம் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

- **நூல் தொகுப்பின் போதும், வெளியிடும் போதும் பின்பற்றவேண்டிய அடிப்படை விதிமுறைகள் தொடர்பான மாநாடு**
  நூல் தொகுப்பின் போதும், வெளியிடும் போதும் பின்பற்றவேண்டிய அடிப்படை விதிமுறைகள் தொடர்பாக இருநாட் பயிற்சிப் பட்டறை ஒன்று 2019 டிசம்பர் மாதம் 17 - 18 ஆம் திகதிகளில் தேசிய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இந்த இரு தின மாநாட்டின்போது வெளியீடு மற்றும் அச்சிடல் நுட்பங்கள் தொடர்பாக பேராசிரியர் ஜே. பீ. திசாநாயக்க, பேராசிரியர் ஜயதேவ உயன்கொட, பேராசிரியர் ரத்னசிரி அறங்கல, கமகே சுமணசேகர, டப்ளிவ் சுனில் மற்றும் சேனாணி பண்டார போன்றோர் கலந்துகொண்டனர்.
- நூல் தயாரிக்கும் படிமுறைகள் தொடர்பாக மத்திய மாகாண எழுத்தாளர்களை அறிவூட்டும் செயற்திட்டம் 2019.ஜூலை 11 ஆம் திகதி கண்டி பள்ளேகெலவில் அமைந்துள்ள மத்திய மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இதில் கண்டி, மாத்தளை, மற்றும் நுவரெலிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்திப் பல எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர்.
- எழுத்தாளர் திறன் மற்றும் வெளியீட்டு நியமங்கள் தொடர்பாக ரத்மலானைப் பிரதேச பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் ஒரு நாள் செயற்திட்டம் ஒன்று 2019 ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி இரத்மலானை பிரதேச செயலாளர் காரியாலயக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

நூலகக் கூட்டுறவுப் பிரிவு

உள்நாட்டு வெளிநாட்டு நூலகங்களுடன் சர்வதேச கூட்டுறவைக் கொண்டு நடத்துவது இப்பிரிவின் முக்கிய செயற்பாடாகும். இதன் கீழ் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தேசிய நூலகங்கள் மற்றும் வேறு துறைகளுடன் தொடர்புடைய நூலகங்களைப் போல சர்வதேச நூலக சங்க சம்மேளனம், யுனெஸ்கோ அமைப்பு போன்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டிருத்தல் மற்றும் தேசிய ரீதியில் பல்வேறு நூலகங்கள், நூலக அமைப்புக்கள், மற்றும் சங்கங்களுடன் தொடர்பைப் பேணிவருவதும் நூலகக் கூட்டுறவுப் பிரிவின் கடமையாகும்.

பரிமாற்றச்சேவை

வெளியீடுகளை பரிமாறும் செயற்திட்டத்தின் கீழ் இலங்கைத் தேசிய நூலகத்தினால் தொகுக்கப்படும் இலங்கைத் தேசிய நூற்பட்டியல் மற்றும் NATNET Lanka செய்திப் பிரசுரப் பிரதிகள் சாக் பிராந்திய நாடுகள் உள்ளடங்கலாக 27 நாடுகளின் தேசிய நூலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கும் மேலால் சீனா, ஜப்பான், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தேசிய நூலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க இந்நாட்டில் வெளியிடப்பட்டதும் தெரிவு செய்யப்பட்ட வெளியீடுகளை அந்நாடுகளின் தேசிய நூலகங்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதற்கும் மேலால் இலங்கைத் தேசிய நூலகத்தினால் வெளியிடப்படும் நூற்பட்டியல்கள், சுட்டிகள், மற்றும் ஏனைய புதிய வெளியீடுகள் இந்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட நூலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பரிமாற்றச் சேவையின் கீழ் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பரிமாற்றச் சேவையின் கீழ் இந்நாட்டில் உள்ள பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக வெளியிடப்படும் நூல்களும் இலங்கைத் தேசிய நூலகத்திற்குப் பெற்றுக் கொள்ளப்படும். இதன் கீழ் இவ்வருடத்தினுள் தேசிய திட்டமிடற் திணைக்களம், மத்திய சூழல் அதிகார சபை, நீர்பாசனத் திணைக்களம், இலங்கை மஹாவலி அதிகாரசபை, போன்ற நிறுவனங்களில் இருந்தும் வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிறுவன அங்கத்துவத்தை புதுப்பித்தமைத்தல்

- 2019 ஆம் வருடத்தில் சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளன (IFLA) வருடாந்த அங்கத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன்பொருட்டு ரூ. 102,116.00 செலுத்தப்பட்டது. IFLA அமைப்பினால் வெளியிடப்பட்ட IFLA ஜேணல் (IFLA Journal) 2019 டிசம்பர் தொகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூலகத் துறைசார் தேசிய மற்றும் சர்வதேச மட்ட வலையமைப்புக்களை (Network) தற்காலப் படுத்தல்

- சிங்கப்பூரில் மேரி மாட்டின்ஸ் (Mary Martins) நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் Law Lanka Annual Access வலையமைப்பின் அங்கத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையில் வெளியிடப்படும் சட்டங்கள், சட்டமூலங்கள், சட்ட அறிக்கைகள், புதிய சட்ட அறிக்கைகள் என்பன மூன்று மொழிகளிலும் ஆய்வு செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

- புது டெல்கியில் உள்ள இந்திய சர்வதேச மத்திய நிலையம் (Indian International Centre) மூலம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் DELNET (Development of Library Network) வலையமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளதுடன், இந்த தகவல் வலையமைப்பினுள் நூலக தகவல் துறைக்கு உரிய கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் இந்த வலையமைப்பின் வருடாந்த அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் மற்றும் தரவுத் தளத்திற்குப் பிரவேசிப்பதற்கு வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- தேசிய ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வலையமைப்பாக காணப்படும் Agrinet (விவசாயத் துறை மற்றும் தொடர்புடைய தகவல் வலையமைப்பு) , HeLLIS (சௌக்கிய துறை மற்றும் தொடர்புடைய தகவல் வலையமைப்பு) போன்ற தகவல்

வலையமைப்புக்களுடன் இலங்கைத் தேசிய நூலகம் தொடர்ந்து தொடர்பைக் கொண்டுள்ளது. இந்தத் தகவல் வலையமைப்பின் மூலம் அந்த அந்தத் துறைசார் கற்கைகளை மேற்கொள்பவர்களுக்கு புதிய தகவல்களை இலகுவாகத் தேடிக் கண்டுகொள்ள வசதி வழங்கப்பட்டுள்ளது. HeLLIS தகவல் வலையமைப்பின் வருடாந்த மாநாட்டில் இப்பிரிவின் பிரிவுத் தலைவர் பங்கேற்றிருந்தார்.

தரவுத் தளங்களுக்கான அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

- "Proquest" நிறுவனத்தினால் வெளியிடப்படும் நூலகத் தகவல் விஞ்ஞான வலையமைப்பின் முழுப் படிவம் LISA (Library and Information Science Full Text) வலையமைப்பின் மூலம் தேடுதல் நடத்தக்கூடிய தரவுத் தளமாக இருப்பதுடன் இதன் மூலம் நூலகத் துறையில் வெளியிடப்பட்டுள்ள அனேக கட்டுரைகளின் முழு படிவத்தையும் தேடுவதற்கான வசதிகள் உரித்தாகும். இது நூலக விஞ்ஞானத்தைக் கற்கும் மாணவர்களுக்கு அதிகளவு உதவும் தரவுத் தளமாகும். இத் தரவுத்தளத்தை உபயோகப்படுத்துதல் தொடர்பாக வாசகர் சேவைப் பிரிவில் விதந்துரையைப்பெற்று இங்கு முழுப் படிவங்களையும் பெற்றுகொள்வது பொருத்தமாகும் என விதந்துரைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பருவவெளியீடுகளுக்கான சந்தாவைப் புதுப்பித்தல்

தேசிய பூகோள விஞ்ஞானச் சங்கத்தினால் (National Geographic Society) வெளியிடப்படும் " National Geographic" பருவ வெளியீட்டிற்கான ஆண்டுச் சாந்தாவைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் வெளியிடப்படும் இப்பருவ வெளியீட்டின் பிரதிகள் தேசிய நூலகத்தில் வாசகர்களின் பாவனைக்காக சேகரிக்கப்பட்டுவருகிறது.

மாகாண நூலக சேவைகள் சபைகளிற்கான அங்கத்துவம்

இலங்கையில் தற்போது சப்பரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுடன் இணைந்து மாகாண நூலக சேவைகள் சபைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றினுள் சப்பரகமுவ , மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் நூலக சபைகளுடன் இணைந்து உயர் தரத்திலான மாகாண மத்திய நூலகங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாகாண நூலக சேவைகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மும்முரமாக பங்களிப்புச் செய்வதுடன் சபையின் பணிப்பாளர் நாயகம் சகல பணிப்பாளர் சபைகளையும் பிரதிநித்துவப் படுத்துகிறார். மாகாண நூலக சேவைகள் சபை ஊழியர்களின் பங்களிப்புடன் வருடந்தோறும் நடத்தப்படும் மாநாடு 2019 ஓகஸ்ற் மாதம் 23 ஆம் திகதி மத்திய மாகாண நூலக சேவைகள் சபையில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டின் பிரதம விருந்தினராக மத்திய மாகாணத்தின் ஆளுநர் திரு. கீர்த்தி தென்னகோன் பங்குபற்றினார். கூட்டத்தின் பிரதான விரிவுரை "நவீன இலக்கிய விழிப்புணர்வு மற்றும் இலங்கை பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பின்கீழ் பேராதெனியப் பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியர் கே என் ஓ தர்மதாச உரையாற்றினார். மாகாண நூலக சேவைகள் சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தலைவர்கள், பணிப்பாளர்கள் உள்ளடங்க பல ஊழியர்கள் பங்குபற்றினர். பேராசிரியர் திரு. கே.என்.ஓ. தர்மதாச அவர்களின்

விரிவுரையினூடாக தயாரிக்கப்பட்ட சிறிய நூல் ஒன்றையும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

நூலகத் துறையுடன் தொடர்புடைய தொழிற் சங்கங்களுடனான கூட்டுறவு

இலங்கையில் நூலகத் துறைசார் தொழிற் சங்கங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. விசேடமாக அரச மற்றும் மாகாண நூலக சேவையுடன் தொடர்புடைய அதேபோல பொது மற்றும் பாடசாலை துறையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விதத்தில் தொழிற் சங்கங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இந்த தொழிற் சங்கங்களினால் அந்தந்த துறையுடன் தொடர்புபடுத்தி முன் வைக்கப்படும் கேள்விகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும். இந்த வருடத்திலும் அப்படிப்பட்ட பல கேள்விகள் சபைக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் அக் கேள்விகளுக்கு தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தந்திரோபாய திட்டமிடற் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் சகல பிரிவுகளினதும் செயற்பாடுகளைத் திட்டமிடுதலுக்கு பங்களிப்புச் செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல் என்பன தந்திரோபாய திட்டமிடற் பிரிவினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதற்கும் மேலால் நிருவாகச் செயற்பாடுகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்திச் செல்வதற்குத் தேவையான பங்களிப்புக்களை வழங்குவதும் இப்பிரிவின் கடமையாகும். நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் அபிவிருத்தி அறிக்கைகளின் மூலம் ஆண்டு, அரையாண்டு மற்றும் மாதாந்த அபிவிருத்தி அறிக்கைகள் ஒழுங்கு படுத்தப்படுவதுடன் மாதாந்தம் சிரேட்ட அலுவலர்களின் கூட்டங்கள் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களையும் ஒழுங்கு படுத்துவது இப்பிரிவின் பொறுப்பாகும். இதற்கும் மேலால் வெளி நாடுகளுக்குச் செல்லும் சபை ஊழியர்களுக்குத் தேவையான விமானப் பயணச் சீட்டு, வீசா பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதும் தந்திரோபாய திட்டமிடற் பிரிவினால் நடைபெறுகிறது .

சிரேஷ்ட அலுவலர் குழாத்தின் கூட்டம் மற்றும் பணிப்பாளர் சபையின் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல்

சகல பிரிவுத் தலைவர்களும் பங்குபற்றுவதன் மூலம் அந்தந்தப் பிரிவின் அபிவிருத்தி பற்றி விசாரித்து அறிந்து கொள்வதற்காக மாதம் தோறும் சிரேஷ்ட அலுவலர் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் 12 மாதாந்தக் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

பணிப்பாளர் சபைக் கூட்டமும் மாதாந்தம் ஒழுங்குபடுத்தப்படுவதுடன் 2019 ஆம் ஆண்டில் 12 சபைக் கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

அபிவிருத்தி அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கையைத் தொகுத்தல்

2018ஆம் ஆண்டு நொவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களின் அபிவிருத்தி அறிக்கை உள்ளடங்கலாக 2019 ஆண்டில் சகல பிரிவுகளினதும் அபிவிருத்தியை எடுத்துக்காட்டும் விதமாக

மாதாந்த அபிவிருத்தி அறிக்கைகள் தொகுக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை பிழை திருத்தப்பட்டு அச்சிடுவதற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அச்சிட்டதன் பின்னர் தொடர்புடைய நிறுவனங்களுக்கு பிரதிகளை வழங்குதல் அத்துடன் அதன் 20 பிரதிகள் அமைச்சர் அவைக்குச் சமர்பிக்கும் பொருட்டு அமைச்சரவைப் பத்திரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு 2019.04.25 ஆம் திகதி கல்வி அமைச்சிற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய அமைச்சரவைப் பத்திரங்கள் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு கல்வி அமைச்சில் வழங்குவது மற்றும் ஒவ்வொரு வருடமும் அறிக்கையின் அச்சிடப்பட்ட 45 பிரதிகள், 352 இறுவட்டுக்கள் வீதம் கல்வி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் திட்ட வரைபு தயாரிக்கப்பட்டு பிழை திருத்தப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்காக தயாரிக்கப்பட்டு அதில் 100 பிரதிகள் அச்சிடப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு 20 பிரதிகள் கல்வி அமைச்சில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2016 ஆண்டுக்கான அண்டு அறிக்கை திட்ட வரைபு மீண்டும் திருத்தப்பட்டு அச்சிடப்பட்டதுடன் அமைச்சரவைப் பத்திரம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அமைச்சரவைக்கு அனுப்புவதற்காக அதில் 20 பிரதிகள் கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை தயாரிப்பது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகளில் அலுவலர்களை ஈடுபடுத்தல்

- 2019.08.07 – 12 வரை சீனாவில் நடை பெற்ற எண்மய வெளியீடுகள் மற்றும் எண்மய நூலகங்கள் மாநாட்டிற்கு பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவர் பங்குபற்றுவதற்குத் தேவையான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல். (தடுக்கமுடியாத காரணத்தினால் தலைவர் இதில் பங்குபற்றவில்லை)

- 2019.11.12 – 16 வரை இந்தியாவின் புதுடெல்கி நகரில் ISSN பணிப்பாளர்களின் 44வது அமர்வின் பொருட்டு பணிப்பாளர் திருமதி சேனானி பண்டார பங்குபற்றுவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்தல்கள்.

- இந்திய தேசிய எண்மய நூலகம் மற்றும் புதுடெல்கியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தடன் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட UNESCO International Symposium on Knowledge Enfgineering forvDigital Library Design 2019 மாநாட்டில் உதவிப் பணிப்பாளர் திரு. உதய கப்ரால் பங்குபற்றுவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மாநாடு 2019.12.09- 12 வரை இந்தியாவின் புதுடெல்கி நகரில் நடத்தப்பட்டது.

2020 அம் ஆண்டிற்காக சபையின் செயற்பாட்டு திட்டம் மற்றும் 2019 ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம்.

தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பொருட்டு வருடாந்தம் கிடைக்கும் ஒதுக்கத்தை உபயோகித்து அந்த அந்தப் பிரிவுகளினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் திட்டமிடப்படுகிறது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்குரிய திருத்தியமைக்கப்பட்ட செயற் திட்டம் மற்றும் 2019 ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து நிறுவனம் மற்றும் தனிநபர்களிடம் சமர்பிக்கப்பட்டள்ளது.
2019 ஆம் ஆண்டின் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட செயற் திட்டம் மற்றும் 2020 ஆண்டிற்கான செயற் திட்டத்திற்குரிய ஆரம்ப செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளது.

பிற

நிதி மற்றும் பொதுசனத் தொடர்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தகவல் சட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக உரிய அறிவுரைக் கோவையை தயாரிப்பது தொடர்பாக 2019.01.18 ஆம் திகதி நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் உதவிப் பணிப்பாளர் திரு. விஜய பிரேமதர்ஷன கலந்து கொண்டார்.

நிருவாகப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சகல பரிபாலன செற்பாடுகளும் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் ஊழியர்களை ஆட்சேர்த்தல், ஊழியர் விடுப்பு, சம்பளம், கடன் மற்றும் முற்பணம் வழங்கல், வாகனக் கட்டுப்பாடு, களஞ்சியச் செயற்பாடுகளின் கட்டுப்பாடு, பாதுகாப்புச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை, சுவடிகள்கூட முகாமைத்தவம், (Record Room Management), வருடாந்த இருப்பெடுப்பு ஆகியன நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

ஊழியர்களை ஆட்சேர்த்தல் / பதவி உயர்வு / ஓய்வு பெறல்

இவ்வருடத்தில் நிறுவனத்தின் புதிய ஆட்சேர்ப்பின் கீழ் பணிப்பாளர் (தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம்) 01, உதவிப் பணிப்பாளர் தரம் ii பதவி 01, தகவல் உதவியாளர் தரம் iii பதவி 04, முகாமைத்துவ உதவியாளர் தரம் iii பதவி 03, அலுவலக உதவியாளர் தரம் ii பதவி 03 இன் பொருட்டு அலுவலர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளக ஆட்சேர்த்தலின் கீழ் உதவிப் பணிப்பாளர் தரம் ii பதவி 01, நிருவாக அலுவலர் பதவி ii பதவி 01, தகவல் உதவியாளர் தரம் iii பதவி 03, நூலக உதவியாளர் தரம் ii பதவி 02,க்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. புதவி உயர்வின் கீழ் தகவல் உதவியாளர் தரம் I பதவி 01, முகாமைத்துவ உதவியாளர் தரம் ii பதவி 01, வழங்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் ஓய்வு பெறுவதின் கீழ் இவ்வருடத்தினுள் 03 ஊழியர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதுடன் 10 ஊழியர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

நிறுவனத்தின் வியூகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் - பரீட்சைச் செயற்பாடுகள்.

வருடந்தோறும் நடைபெறும் வினைத்திறன்காண் தடைதாண்டிப் பரீட்சையை நடத்துவதன் கீழ் இவ்வருடத்தில் பல பதவிகளின் பொருட்டு வினைத்திறன்காண் தடைதாண்டிப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

பதவி	வினைத்திறன் தடைதாண்டிப் பரீட்சை	தோற்றியவர்கள் தொகை
நூலக உதவியாளர் i (சிங்களம்)	iii	02
நூலக உதவியாளர் ii (சிங்களம்)	ii	02
முகாமைத்துவ உதவியாளர் i (சிங்களம்)	i	01
தகவல் உதவியாளர் iii (தமிழ் மெழி)	iii	01
தகவல் உதவியாளர் iii (சிங்களம் மற்றும் தமிழ்மொழி)	i	03
பயிற்றுவிக்கும் அலுவலர் ii (சிங்களம்)	i	01
உதவிப் பணிப்பாளர் ii (சிங்களம்)	i	06

வெற்றிடங்களை நிரப்புதல்

சபையில் வெற்றிடமாக இருந்த பதவிகளின் பொருட்டு ஆட் சேர்ப்பதற்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தில் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்பதவிகளாவன நிருவாகச் செயலாளர் (ii), நூலக ஆவணவாக்கல் அலுவலர் (ii) , தகவல் உதவியாளர் (iii), முகாமைத்துவ உதவியாளர் (iii), நூலக உதவியாளர் (ii), மற்றும் அலுவலக உதவியாளர்(ii) இப்பதவிகள் உள்ளடலங்கலாக வெற்றிடமாக இருந்த கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பின் பொருட்டு வெளிக்கள மற்றும் திறந்த முறையில் விண்ணப்பங்களை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அப்பதவிகளாவன பணிப்பாளர் (தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம், உதவிப் பணிப்பாளர் (வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்தி), உதவிப் பணிப்பாளர் (தந்திரோபாயத் திட்டமிடல்), உதவிப் பணிப்பாளர் (நூலீட்டல்), பேணல் அலுவலர் (ii), தொகுதிப் பகுப்பாய்வாளர் (ii) , கணக்கியல் அலுவலர் (ii), தகவல் உதவிளர் (iii), ஆவணம் பேணுபவர் (iii), முகாமைத்துவ உதவியாளர் (iii), மற்றும் நூல் மட்டை கட்டுபவர். போன்ற பதவிகள்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல் வழங்குதல்

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சமர்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களில் இரண்டு தொடர்பாகத் தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபையின் சுற்று நிருபங்களை வெளியிடுதல்

சபையின் அகத் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் சுற்று நிருபங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சபைச் சுற்றுநிருபங்கள் கீழே தரப்பட்டுள்ளன

(1) 1/2019 சபை ஊழியர்கள் சேவையில் இருந்து விலகிச் செல்வதைக் குறைத்தல்

(2) 2/2019 சபை ஊழியர்கள் ஒழுங்கற்ற முறையில் விடுப்பு எடுத்தல்

(3) 3/2019 தொலைபேசி அழைப்புக்களுக்கு பதில் வழங்காமை

(4) 4/2019 பயிற்சிச் செயற்திட்டங்களுக்கு வளவாளர்களை வழங்குதல்

(5) 5/2019 அரச ஊழியர்களின் சீருடை

(6) 6/2019 நிறுவனத்தின் இலத்திரனியல் முகவரியை அலுவலக வேலைக்கு மட்டும் உபயோகப் படுத்துதல்

சாதாரண நிருவாகச் செயற்பாடுகள்

சபையின் சாதாரண நிருவாகச் செயற்பாட்டின் கீழ் தேவையுள்ள ஊழியர்களின் பொருட்டு புகையிரத வாரப் பிரவேசப் பத்திரம் பெற்றுக் கொடுத்தல், பாதுகாப்புச் சேவைகளை மேற்பார்வை செய்தலும் கொண்டு நடத்துதலும், வெளிநாட்டுப் பொதிகளை விடுவித்தல், ஊழியர் நலம்பேணல் தொடர்பாக தேவையான செயற்பாடுகளைத் மேற்கொள்தல், விடுப்பு ஏடுகளை தற்காலப்படுத்திச் செல்தல், சாதாரண / பதிவுத் தபால்களை தபாலிடுதல், இருப்பெடுப்பு, களஞ்சிய நிருவாகம், ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் உட்பட நிறுவனத்தின் சகல நிருவாகச் செயற்பாடுகளையும் சரியாக நடைமுறைப்படுத்திச் செல்ல நடவடிக்கை எடுத்தல்.

பராமரிப்புப் பிரிவு

தேசிய நூலகக் கட்டிடத்தை புதுப்பித்தமைக்கும் வேலை நடைபெற்று வருவதனால் அவ் வேலையை மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புடைய கூட்டங்களைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அலுவலக உபகரணங்கள் தொடர்பாக பராமரிப்பு உடன்படிக்கைகளில் ஒப்பமிடல் மற்றும் திருத்தி அமைக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், பாவனைக்கு உதவாத உபகரணங்களை அகற்றுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல், மற்றும் மோட்டார் வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்தி அமைக்கும் வேலைகள் தேவைக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டன.

தோட்டப் பராமரிப்பை மேற்கொள்ளல் மற்றும் அதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், மற்றும் சபைக் கட்டிடத்துடன் தொடர்புடைய வெளிக்கள நிறுவனத்தினால் நாளாந்தம் தூய்மைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொலைபேசிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், இணையக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வருட இறுதியில் சொத்துக்களைக் காப்பறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

பிரதான கேட்போர்கூடம் திருத்தியமைக்கப்பட்டு வருவதனால் வாடகைக்கு விட முடியாமல் இருப்பதுடன், மாநாட்டு மண்டபத்தை வாடகைக்கு விடுவதன் மூலம் வாடகை வருமானமாக ரூபா.489,500.00 பெறப்பட்டது.

சபையின் இடத்தை விடுவிப்புக் கொடுப்பனவு சான்றிதளின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், உள்ளக நவீனப் படுத்தல் செயற்பாடுகள் நடைபெற்று வருவதால் தேவைக்கேற்ப கட்டிடத்தில் ஏற்படும் பராமரிப்புச் செயற்பாடுகளை நிறைவு செய்தல். கேள்விப் பத்திரங்களை வரவழைத்து ஏலம் விடுதல், புதுப்பத்தமைத்தல் வேலையைச் செய்யும் போது தேவைக்கேற்ப குழுக்களைக் கூட்டுதலும் புதிப்பித்தமைத்தலுக்குத் தேவையான இடங்களில் இருந்து பொருட்களை அகற்றி புதிப்பித்தமைத்தல் வேலைக்கு இட வசதிகளைச் செய்து கொடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதுப்பித்தமைத்தல் தொடர்பாக கலந்துரையாட கூட்டங்களைக் கூட்டவும் அதன் அறிக்கைகளைத் தயாரிக்கவும் நடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபையின் புதிய கட்டிடத்தை தயாரிப்பதற்கான திட்டமிடுதல் மற்றும் விலைப் பட்டியல் தயாரித்தல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் வரைபடத்தைப் பெற்றுக்கொள்ளுதல் புதுப்பித்தமைக்கப்பட்ட பகுதிக்குத் தேவையான மரத் தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விலைப் பட்டியல் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் என்பன இவ் வருடத்தில் விசேடமாகச் செய்த செயற்பாடுகளாகும்.

நிதிப்பிரிவு

இவ்வருடத்தினுள் 2019 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு ஏட்டை கல்வி அமைச்சிற்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மாதாந்தம் தயாரிக்கப்படும் நிதி முன் அறிக்கை, வரவுசெலவு விபரங்களை உள்ளடக்கிய விபரங்கள் அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளதுடன் திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணத்தை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பணக் கொடுக்கல் வாங்கல் விபரங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட நிதி முன் அறிக்கையை கல்வி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் சபையின் கொடுக்கல் வாங்கல், காசுப்புத்தகம் என்பன கணனி மயப்படுத்தப் பட்டுள்ளதுடன் மாதாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கையைத் தயாரிப்பதில் இலகு தன்மையை ஏற்படுத்துவதற்காக பகுப்பாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. திறைசேரியில் இருந்து மீண்டுவரும் செலவினத்திற்காக பெற்றுக்கொண்ட பணம் மற்றும் சபையினால் உழைக்கப்பட்ட பணமும் வரவு செலவுத் திட்டத்திற்கு அமைவாக கொடுப்பனவு செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட துடன், அரசாங்க கணக்காய்வுப் பிரிவில் இருந்து கிடைத்த கணக்காய்வு தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல், சகல வங்கி கணக்குகளுடனும் தொடர்புடைய வரவு செலவுக் கணக்குகள் மற்றும் கணக்குப் புத்தகத்தை மாதாந்தம் தற்காலப் படுத்திக் கொண்டு நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சம்பளம், மேலதிக, பிரயாண மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கான செயற்பாடுகள் குறிப்பிட்ட தினங்களில் மேற்கொள்ளப்பட்டது. மீள்வரும் செலவிற்காக திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம் நேரகாலத்தில் கிடைக்காத சந்தர்ப்பங்களில் சபையினால் உழைக்கப்பட்ட பணம் வரவு செலவு வரையறைகளுக்கு உட்பட்டு கொடுப்பனவுகளின் பொருட்டு உபயோகப் படுத்தப்பட்டுள்ளது.

வரவு செலவு தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய நிதி மதிப்பீட்டு முன்னதான அறிக்கையை ஒழுங்கு செய்து, அமைச்சின் செயலாளரின் ஊடாக அரசாங்க வியாபார திணைக்களத்திற்கு

மாதந் தோறும் சமர்ப்பித்து திறைசேரியில் இருந்து கிடைக்கவேண்டிய பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபைக்குக் கிடைக்கும் ஏனைய வருமானங்களைச் சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், மாதாந்த கணக்கு அறிக்கைகளைச் சரியான முறையில் தயாரித்து குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்ததுடன் கல்வி அமைச்சு அறிந்து கொள்வதற்காகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் வரவு செலவு காசுப் புத்தகம் கணனி மயப்படுத்தப் படுவதுடன் அந்த விபரங்களின் அடிப்படையில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் இற்றைப் படுத்தப்படுகின்றன.
இந்த வருடத்திற்குரிய மாதாந்த சம்பள அறிக்கைகளை தயாரித்தல், ஊழியர் சேம இலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மற்றும் சட்டபூர்வமான குறைத்தலுக்கான தவணைக் கட்டணங்களை செலுத்தும் செயற்பாடுகள், தேய்மான ஏடுகளைத் தயாரித்தல், கடன் ஏடுகளைத் தற்காலப்படுத்துதல், 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்கறிக்கைகளுக்கான பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல், தேவையான சம்பள விபரங்கள், பிணை வைப்பு மற்றும் ஏனைய தகவல்களை வழங்குதல், ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2018 ஆம் அரை ஆண்டிற்கான அறிக்கைகளைத் தயாரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் போன்றன இதன்கீழ் செய்து முடிக்கப்பட்டன. இதற்கும் மேலால் சபையின் தேவைக்கு ஏற்ப எழுது கருவிகளை வழங்குதல், விற்பனைக் கூடத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல், நூல் மட்டைகட்டும் கூடத்திற்கு தேவையான உபகரணங்களையும் இரசாயணப் பொருட்களையும் வழங்குதலுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முற்கொடுத்தல் செயற்பாடுகள்

முற்கொடுத்தற் செயற்பாடுகளின் கீழ் கணனி வலையமைப்புச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 2,365,952.32 ம், தேசிய நூலகத்தின் பொருட்டு மின் பாதுகாப்புத் தொகுதி (கட்டம் 1) பொருட்டு ரூபா. 3,152,114.00 ம், அலுவலக உபகரணக் கொள்வனவின் கீழ் புதிய உணவருந்தும் கூடத்திற்கு கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா.707,836.87 ம், கணனிக் கொள்வனவு மற்றும் கணனியுடன் தொடர்புடைய கணக்கிடற் தொகுதியை கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா.1,300,711.00 ம், ஏனைய அலுவலக உபகரணங்களின் பொருட்டு ரூபா. 1,969,389.38ம் , தேசிய நூலகச் சேகரிப்பின் அபிவிருத்தியின் பொருட்டு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் பருவவெளியீடுகளின் கொள்வனக்காக (உள்நாடு மற்றும் வெளிநாடு) ரூபா.2,054,490.02 ம் நூலக சாதனங்களை எண்மயப் படுத்துவதற்காக ரூபா. 3,918,302.89 ம். kiyawamu.lk செயற்திட்டத்தின் பொருட்டு ரூபா.1,999,400.00 ம் 2018 ஆம் ஆண்டில் செலவுசெய்யப்பட்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபையின் நிதிப்பிரிவினால் நடைமுறைப்படுப்பப்பட்டு வரும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி தொடர்புடைய நாளாந்த வரவு ஏடு, வரவு இடாப்பு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வங்கி வைப்புக்களைப் பரிசீலித்தல், கொடுப்பனவு வவுச்சர் மற்றும் கொடுப்பனவு செய்யும் காசுப் புத்தகம் என்பனவற்றைப் பரிசீலித்தல், முற்பணக் கொடுப்பனவு மற்றும் மீளச் செலுத்துதலைப் பரிசீலித்தல். சம்பள கழிப்புகளின் கீழ் இடர்கடன் கொடுப்பனவு தொடர்பான ஏடுகளைப் பரிசீலித்தல், வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் செம்மையைப் பரிசீலித்தல்,

சபை ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பான கோவைகள் மற்றும் சம்பள கோவை என்பன பரிசீலிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபையின் நிதிப்பிரிவினால் நடைமுறைப் படுத்திச் செல்லப்படும் மக்கள் வங்கி (நகரசபைக் கிளை) மக்கள் வங்கி (ஹயிட்பாக் கிளை) மற்றும் இலங்கை வங்கி (ரொரிங்ரன் சதுக்கக் கிளை) உரிய நாளாந்த வரவு ஏடு, வரவுக் காசுப் புத்தகம், பற்றுச் சீட்டுக்களை பரிசீலித்தல், கொடுக்கவேண்டிய வவுச்சர்கள் மற்றும் கொடுக்கும் காசுப்புத்தகத்தை பரிசீலனை செய்தல் (2019 ஜனவரி முதல் ஜூன் வரை) நடைபெற்றது. முற்பணக் கொடுப்பனவு ஏடு மற்றும் அதன்படி வழங்கப்பட்ட முற்பணக்கொடுப்பனவு மற்றும் அம் முற்பணங்களை மீளச் செலுத்துதலை பரிசீலனை செய்வது (2018 மார்ச் தொடக்கம் டிசம்பர் வரை), இடர் கடன் கொடுப்பனவு தொடர்பாக பரிசீலனை செய்தல் (2018 மற்றும் 2019 மார்ச் வரை), முற்பணக் கொடுப்பனவில் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக பரிசீலனை செய்தால் (2018 மற்றும் 2019 ஆண்டுகளில்) நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதேபோல சபையின் நிருவாகச் செயற்பாடுகளின் கீழ் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் வேலையைவிட்டு நீங்கிய மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அவர்களால் சபைக்குக் கிடைக்க வேண்டியனவற்றைக் கணக்கிட்டமை தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டது. சபையின் ஏனைய பிரிவுகளை பரிசீலிப்பதன் கீழ் எண்மய நூலக ஒன்றியத்தினால் நடைபெறும் தேசிய நூலகச் சேகரிப்பை எண்மயப்படுத்தலை பரிசீலனை செய்தல், நூலீட்டற் பிரிவின் செயற்பாடுகளை பரிசீலனை செய்தல், விரிவாக்கற் சேவைப் பிரிவின் செயற்பாடுகளை பரிசீலனை செய்தல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவின் செயற்பாடுகளை பரிசீலனை செய்தல் , விசேட பரிசோதனையின் கீழ் தேசிய நூலகக் கட்டிட புதுப்பித்தமைத்தல் தொடர்பாக பரிசீலிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டபடி உள்ளகக் கணக்காய்வினால் பரிசோதனை செய்யப்பட்டு 13 உள்ளக கணக்காய்வு விசாரணைகள் 2019 அம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கணக்காய்வு விசாரணைகள் ளுடன் தேவையான கணக்காய்வு விதந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல அரச கணக்காய்வுப் பிரிவினால் 09 கணக்காய்வு விசாரணைகளும் 03 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளும் சமர்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு பதில் அறிக்கை வழங்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் 04 குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதற்கும் மேலால் சபையின் ஒதுக்கம் மற்றும் ஊழியர் அங்கத்துவ முதல் மூலம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும். ஊழியர் நலன் பேணற் சங்கத்தின் 2018 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படாதபடியால் ஊழியர் நலம்பேணற் சங்கத்தின் அந்த ஆண்டுக்கான சகல கொடுக்கல் வாங்கல்களும் பரிசீலனை செய்யப்பட்டு இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் சட்டவாக்கச் சபையாவதுடன் அதன் அடிப்படைப் பொறுப்பானது இலங்கையில் தேசிய நூலகத்தைக் கொண்டு நடத்துவதன் மூலம் இந்நாட்டில் உள்ள நூலகங்களின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தின் பொருட்டு செயற்படுவதுடன் துறைசார் ஏனைய சேவைகளை தொகுப்பதுமாகும். இதன் கீழ் 2019 ஆம் ஆண்டில் பல துறைகளை உள்ளடக்கும் விதத்தில் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் துறையில் சீக்கிர வளர்சியுடன் நூலகத் துறையிலும் அதன் தாக்கம் பாரியளவில் ஏற்பட்டுள்ளது. நூலகங்களில் நூல்கள் காணாமற் போதலைத் தடுப்பதன் பொருட்டு நவீன தொழில்நுட்பங்கள் உபயோகப்படுத்தப்படுவதுடன் அதனால் உலகில் மிகவும் பிரசித்தமான பாவனையில் உள்ள வழிமுறையாக இருப்பது நூலக சாதனங்களின் பொருட்டு RFID (Redio Frequency Identification) முறையை உபயோகிப்பததாகும். இலங்கைத் தேசிய நூலகத்தினாலும் இந்த வருடம் இந்த முறையை அறிமுகப்படுத்த இயலுமாக இருந்தது.

தேசிய நூலகக் கட்டிடத்தில் புதுப்பித்தமைக்கும் வேலை கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டபோதும் இதன் புதுப்பித்தமைக்கும் செயற்பாடு இதுவரை நிறைவு செய்யப்படாத காரணத்தால் தேசிய நூலகத்தின் செயற்பாடுகளை ஒழுங்காக முன்னெடுத்துச் செல்வதற்கு அது தடையாக உள்ளது. எப்படியாயினும் பல்வேறு கஷ்டங்களுக்கும் மத்தியில் வாசகர் சேவையை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் எண்மய நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளின் பொருட்டு இலங்கைத் தேசிய நூலகமும் ஒரு நூலகமாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் அதற்குத் தேவையான கணனி மென்பாண்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்ளுடன் கூடிய எண்மய நூலக வசதியை ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலால் ஸ்தாபிப்பதற்குப் பொருத்தமான சிறுவர் பகுதியின் பொருட்டுத் தேவையான மேசை, கதிரைகள் மற்றும் ரப் (Tab) இயந்திரம்களையும் இச்செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்களுக்கு உடனடியாக தகவல்களை தொடர்பாடும் நோக்கத்துடன் இந்த வருடத்தில் Library News என்னும் பெயரில் செய்திச் சேவை ஒன்று (SMS) ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வழிமுறைகளுள் ஒன்றாக சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பரந்தளவிலான பிரச்சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதும் நோக்கமாகும். **உலகின் ஞாபகத்தைப் பாதுகாத்தல்** செயற்திட்டத்தில் இந்த நாட்டின் அணுகு மத்திய நிலையமாக (Focal Point) இலங்கைத் தேசிய நூலகம் செயலாற்றிவருவதுடன் கௌரவ ஜனாதிபதியின் எண்ணக்கருத்தின் மேல் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த திரிபிடகத்தை உலகின் உரிமையாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு முடிந்தது. அதேபோல இக் காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட **எழிச்சிபெறுநும் பொலந்நறுவை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு** இணையாக பொலந்நறுவை புதிய நகரில் கட்டுப்பட்டுள்ள பழங்காலத் தொழில் நுட்ப அரும்பொருட் காட்சியக நூலகத்துடன் இணைந்த தகவல் மத்திய நிலையம் மற்றும் நூலகத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் சபை அதிவிசேட பங்களிப்பை வழங்கியுள்ளது. வடமத்திய பிரதேசம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள் மற்றும் பழங்கால தொழில் நுட்ப விடயத்துடன் தொடர்புடைய நூல்களில் உள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு இந்நாட்டில் கட்டியெழுப்பப்பட்ட முக்கிய நூலகமாக இந்த நூலகத்தை இனங்காண முடியும்.

நாட்டினுள் பரவி இருக்கும் நூலக ஊழியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாட்டின்போது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை முக்கியமான பொறுப்பை நிறைவேற்றுவதுடன் 2020இன் திடமான நூலக ஆபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் வட மாகாணங்களில் உள்ள நூலக ஊழியர்களை பயிற்றுவிப்பதற்குப் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மக்களிடையே நல்லிணக்கத்தை அபிவிருத்தி செய்வதை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கிடையே இலக்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்காக தெவின்துர முனையில் இருந்து பருத்தித்துறை முனை வரை இலக்கியப் பாலம் என்னும் பெயரில் நூல் மொழிபெயர்ப்புச் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் இதன் கீழ் சிங்கள மொழியில் எழுதப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சிறுகதைகளை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதும் தமிழ் மொழியில் எழுதப்பட்ட சிறுகதைகளை சிங்கள மொழியில் மொழி பெயர்க்கவும் எதிர்பார்க்கப படுகிறது. சபையினால் மிக நீண்ட காலமாக சிறப்பு இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன் இந்த வருடம் புத்சரண நூலின் பதிப்பித்தற் செயற்பாடுகள் நிறைவடைந்து வெளியிடுவதற்கு சாத்தியமாக இருந்தது. அதற்கும் மேலால் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வெளியீட்டுச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் புதிய தொழில் நுட்ப முறைமையின் மூலம் சர்வதேச நியம இலக்கங்கள் (ISBN, ISSN,ISMN) வழங்குவதன் பொருட்டு வழிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திலும் நிறுவனத்தின் சில அலுவலர்கள் ஒய்வுபெற்றதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு மீண்டும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்டிருந்த பல புதிய செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய திட்டமிடற் திணைக்களத்தின் அனுமதி கிடைத்திருந்தபோதும் அதன் பொருட்டு திறைசேரியில் இருந்து குறிப்பிட்ட ஒதுக்கம் கிடைக்கப்பெறாததனால் திட்டமிட்டிருந்த பல முக்கிய செயற் திட்டங்களைச் செயற்படுத்த முடியாமற் போனதையும் குறிப்பிட வேண்டும்.

எனினும் சபையினால் திட்டமிடப்பட்டிருந்த செயற் திட்டங்களை செயற்படுத்தியபோது பணிப்பாளர் சபையில் இருந்து கிடைத்த உதவிக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், கௌரவ கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரிடம் இருந்தும் கிடைத்த உதவிக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பல்வேறு சிக்கல்கள் மற்றும் தடைகள் இருந்தபோதும் நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்டிருந்து செயற்பாடுகளை வினைத்திறனுடன் செய்து முடிப்பதற்கும் அவற்றை உயர்தரத்தில் கொண்டு நடத்துவதற்கும் சிரேஷ்ட அலுவலர்கள் உட்பட சகல அலுவலர்களிடம் இருந்தும் கிடைத்த உதவிக்கு பெரிதும் மதிப்பளிப்பதுடன் இந்த அறிக்கையை ஒழுங்குபடுத்துவதில் உதவிய தந்திரோபாயத் திட்டமிடற் பிரிவின் பிரிவுத் தலைவர் உட்பட அப்பிரிவின் அலுவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிளிவ். சுனில்
பணிப்பாளர் நாயகம்

சோனால குணவர்த்தன
தலைவர்

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
இல.14,
சுதந்திர வழி
கொழும்பு 07

இலங்கைத் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

(கல்வி அமைச்சு சேவைகள்)

நிதி அறிக்கை 2019

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான நிதிநிலை அறிக்கை

	குறிப்பு	31.12.2019 ரூ.	31.12.2018 ரூ.
நடப்புச் சொத்துக்கள்			
சொத்துக்கள்			
காசும் காசுச் சமானங்களும்	1	10,766,828.00	23,170,555.00
பெற்றுக்கொள்ள வேண்டியவை	2	14,442,008.00	13,376,535.00
தொக்குகள்	3	16,624,477.00	13,070,819.00
முற் கொடுப்பனவுகள்	4	854,835.00	810,327.00
வைப்புக்கள்	5	361,942.00	350,579.00
		43,050,090.00	**50,778,815.00**
நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை			
உட்கட்டமைப்பு,இயந்திரங்களும் உபகரணங்களும்	6	54,144,090.00	5,337,414.00
காணியும் கட்டிடமும்	7	108,880,489.00	111,881,818.00
ஏனைய நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை	8	45,274,294.00	41,164,809.00
		208,298,873.00	**208,384,041.00**
மொத்தச் சொத்துக்கள்		**251,348,963.00**	**259,162,856.00**
பரிப்புக்கள்			
நடைமுறைப் பரிப்புக்கள்			
கொடுக்கவேண்டியவை	9	4,724,284.00	5,478,500.00
திரண்ட செலவுகள்	10	9,581,712.00	7,761,354.00
ஊழியர் சலுகைகள்	11	314,942.00	303,579.00
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள்	12	754,612.00	12,958,980.00
		5,375,550.00	**26,502,413.00**
நடைமுறைப் பரிப்புக்கள் அல்லாதவை			
பணிக்காலக் கொடைக்கான ஒதுக்கம்		38,975,663.00	35,285,316.00
மொத்தப் பரிப்புக்கள்		**54,351,213.00**	**61,787,729.00**
தேறிய சொத்துக்கள்		**196,997,750.00**	**197,375,127.00**
தேறிய சொத்துக்கள் / உரிமங்கள்			
மூலதனம் / வேறு வழிகளில் கிடைத்த கொடைகள்	13	7,030.00	7,030.00
ஒதுக்கங்கள்	14	959,147.00	2,881,696.00
திரண்ட வருமானம் / (செலவு)	15	196,031,573.00	194,486,401.00
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமங்கள்		**196,997,750.00**	**197,375,127.00**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியல் நியமங்களின் (SLPSAS) தேவைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதாகும்

.....
நிதிப்பிரிவின் தலைவர்

இந் நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான சகல விடயங்களுக்கும் சபையின் பணிப்பாளர் சபை பொறுப்பாவதுடன் பணிப்பாளர் சபையின் பொருட்டு பின்வருவோர் ஒப்பமிட்டுள்ளனர்.

.....
பணிப்பாளர் நாயகம்
தே.நூ.ஆ.சே.ச.

.....
தலைவர்
தே.நூ.ஆ.சே.ச.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019 டிசம்பர் 31ம் திகதி நிறைவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயற்பாட்டு அறிக்கை

	குறிப்பு	31.12.2019 ரூ.	31.12.2018 ரூ.
வருமானம்			
நூல் விற்பனைக்கூட விற்பனைக் கணக்கு	16	2,755,085.00	1,900,258.00
கேட்போர்க்கூட வாடகை		561,045.00	2,132,800.00
கட்டணங்களும் வாடகைக் கட்டணங்களும்	17	3,006,065.00	2,405,733.00
வட்டி வருமானங்கள்	18	557,543.00	537,871.00
வெளியீடுகளுக்கான சந்தா	19	916,487.00	844,326.00
ஏனைய வருமானங்கள்	20	1,772,227.00	2,159,918.00
அரச கொடைகளும் மீள்வரும் செலவுகளும்		138,700,000.00	141,389,989.00
மீள்வரும் இயற்கை செலவுகளுக்கான மூலதனம்		2,162,277.00	-
மொத்த வருமானம்		**150,430,729.00**	**151,370,895.00**
செலவுகள்			
நூலக சேவைச் செலவுகள்	21	13,286,101.00	15,859,720.00
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	22	184,584,176.00	149,149,194.00
நிதிச் செலவுகள்	23	33,112.00	42,219.00
மொத்தச் செலவுகள்		**161,903,389.00**	**165,051,133.00**
வருடத்திற்கான மேலதிகம் / (குறைவு)		**(11,472,678.00)**	**(13,680,238.00)**

பிற வருமானங்கள்

PPE விற்பனையினால் ஏற்பட்ட நட்டம்/ இலாபம்	14,235.00	(753,062.00)
PPE அகற்றியதால் ஏற்பட்ட இலாபம் / நட்டம்	(6,657.00)	(1,080,644.00)
வருடத்திற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)	**(11,465,100.00)**	**(15,513,944.00)**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019.12.31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

உரிமங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிக்கை

ரூ.'000

	-திரண்ட நிதியம்	மூலதனச் அரச	செவிற்கான கொடை	மூலதனச்செவிற்காக ஏனைய கொடைகள்
2017 டிசம்பர் 31ம் திகதிய மீதி	171,642	23,679		7
முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம்	765	(1,230)		--
2017 டிசம்பர் 31ம் திகதி செம்மையாக்க மீதி	**172,407**	**22,449**		**7**
நடப்பு வருடத்திற்கான செம்மையாக்கம்	-		-	-
தேறிய மேலதிகம் / (குறைவு)	(15,514)	--		-
மூலதனத்திற்கான கொடை	-	18,026		-
மூலதனச் சொத்துக் கொள்வனவு	37,593	(37,593)		-
2018 டிசம்பர் 31 திகதிய மீதி	194,486	2,882		7
முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம்	---	-		-
2018 டிசம்பர்.31 திகதிய செம்மையாக்க மீதி.	**194,486**	**2,882**		**7**
தேறிய மேலதிகம் / (குறைவு)	(11,465)	--		-
மூலதனத்திற்கான கொடை	-	13,250		-

மூலதனனச் சொத்துக் கொள்வனவு	13,010	(13,010)	-
மீள்வரும் இயற்கை செலவுகளுக்கான மூலதனம்	-	(2,162)	-
2019.12.31 திகதிய மீதி	**196,031**	**960**	**7**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019 டிசம்பர் 31ம் திகதி நிறைவடைந்த ஆண்டிற்கான
காசுப் பாய்ச்சல் அறிக்கை

		31.12.2019
		ரூ.
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளாலான காசுப் பாய்ச்சல்		
தேறிய மேலதிகம் / (குறைவு)		(11,465,100.00)
செம்மையாக்கங்கள்		
- தேய்மானம்	12,865,617.00	
- PPE	209,521.00	
- மீள்வரும் இயற்கை செலவுகளுக்கான மூலதனம்	(2,162,278.00	
	10,912,860.00	
சொத்துக்கள் இயந்திம் மற்றும் தொகுதிகளின் இலாபம் /(நட்டம்)	(7,578.00)	
ஓய்வுகால சேவைக்கால கொடுப்பனவுக்கான ஒதுக்கம்	6,830,283.00	
		17,735,565.00
		6,270,465.00
மூலதன மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபங்கள்		
தொக்குகளில் (அதிகரிப்பு) / குறைவு	(3,553,658.00)	
பெறவேண்டியனவற்றில் (அதிகரிப்பு) / குறைவு	(1,065,473.00)	
முற்பணக் கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைவு	(44,508.00)	
வைப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு	(11,363.00)	
கொடுக்கவேண்டியவற்றில் (அதிகரிப்பு)/ குறைவு	(183,475.00)	
திரண்ட செலவுகளில் (அதிகரிப்பு) / குறைவு	612,634.00	
ஊழியர் நலன்களில் (அதிகரிப்பு) /குறைவு	11,363.00	
பிற நடைமுறைப் பரிப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு	(234,760.00)	
		(4,469,240.00)
செயற்பாடுகளினாலான காசுப் பிறப்பாக்கம்		**1,801,225.00**
ஓய்வுகால பணிக்கொடை- செலுத்தப்பட்டது		(3,139,935.00)
செயற்பாட்டு நடவடிக்கைகளால் கிடைத்த தேறிய நிதிப்பாய்ச்சல்		1,338,710.00

<u>முதலீட்டுச் செயற்பாடுகளாலான நிதிப் பாய்ச்சல்</u>		
மூலதனச் செலவினத்திற்கான அரச கொடை	13,250,000.00	
ஆண்டிற்கான முதலீடுகள்	-	
சொத்துக்கள்,இயந்திரங்கள், உபகரணங்கள் ஈட்டல்	(24,342,897.00)	
சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்களை அகற்றுவதனால் கிடைத்த பணம்.	27,880.00	
முதலீட்டுச் செயற்பாட்டினாலான தேறிய நிதிப்பாய்ச்சல்		(11,065,017.00)
<u>நிதியிடற் செயற்பாட்டுகளினாலான நிதிப்பாய்ச்சல்</u>		
நீண்டகாலக் கடன்பாடுகளுக்கான மீள் கொடுப்பனவு	--	
நிதியிடற் செயற்பாட்டுகளினாலான தேறிய நிதிப்பாய்ச்சல்		**---**
காசு மற்றும் காசுச்சமானங்களிலான தேறிய அதிகரிப்பு/ (வீழ்ச்சி)		(12,403,727.00)
ஆண்டுத் தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி மீதி		23,170,555.00
வருட இறுதியில் காசு மற்றும் காசுச்சமானங்கள்		**10,766,828.00**
2019.12.31 ஆம் திகதி அன்று வங்கியில் இருந்த பணம்		10,766,828.00

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இந் நிறுவனமானது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பிரதான நோக்கம் நிறுவனத்தினதும் நூலக சேவை அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்கும் உதவி வழங்குவதும், இலங்கைத் தேசிய நூலகத்தை உருவாக்கி அதைக் கொண்டு நடத்துதலுமாகும், பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களின் உயர்வு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், நூல் அபிவிருத்தி, ஆவணவாக்கல் செயற்பாடுகளில் உதவுதல் போன்றனவாகும்.

இந் நிறுவனம் இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07 என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

01.பொது

01.01. தயாரித்தலின் அடிப்படை

a) நிதி நிலை அறிக்கை, நிதிச் செயற்பாட்டு அறிக்கை, உரிம மாற்றங்கள் பற்றிய அறிக்கை, நிதிப்பாய்ச்சல் அறிக்கை, கணக்கியல் கொள்கைகள் பற்றிய அறிக்கை மற்றும் சபைக் கணக்குகளுக்கான குறிப்புக்கள் என்பன இலங்கைப் பட்டையக்கணக்காளர் நிறுவனத் தினால் விதிக்கப் பட்டுள்ள இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியல் நியமங்களுக்கு (SLPSAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

b) சபையின் நிதி அறிக்கையானது வரலாற்றுக் கிரய பாரம்பரியத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது

c) நிதி அறிக்கையைப் பாதிக்கும் பணவீக்கம் தொடர்பாக எவ்வித செம்மையாக்கல் அறிக்கை களும் தயாரிக்கப்படவில்லை.

d) சபையின் நிதி அறிக்கையானது இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அண்மித்த ரூபாய்களில் தரப்பட்டுள்ளது.

e) சபையின் நிதி அறிக்கையானது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சட்டத்துக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது.

f) சபையின் நிதி அறிக்கையானது தொடர்ந்து இயங்கும் கருத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

01.02 ஒப்பீட்டளவுத் தகவல்கள்

கணக்கியல் கொள்கைகள் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுக்கான கணக்கை நிச்சயப்படுத்தத் தேவையான இடங்களில் முன்னைய ஆண்டுக்கான இலக்கங்களும் சொற் பதங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

01.03 மாற்றம் ஏதுமின்றி சமர்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையானது விடயங்கள் பிரிப்பு மற்றும் சமர்ப்பித்தலில் எவ்வித மாற்றங்களும் இன்றித் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

2019 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

02. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

நிதி நிலைமை அறிக்கையில் நடமாடும் சொத்துக்கள் எனக் குறிப்பிடப்படுவது சாதாரண செயற்பாட்டு முறைமையின் கீழ் ஒரு வருட காலத்தினுள் அல்லது நிதி நிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருடகாலத்தினுள் காசு, காசுக்குச் சமானமானவை என எதிர்பார்க்கப்படுபவையாகும்.

02.01 <u>ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் பெறுமானத் தேய்வு</u>

02.01.01 <u>ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்</u>

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பனவற்றின் பெறுமதி திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியைக் குறிக்கும். ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பெறுமதியானது அவற்றின் கொள்வனவு அல்லது கட்டுமானச் செலவு அத்துடன் அச்சொத்தை தற்போதைய நிலைக்குக் கொண்டுவருவதற்காகச் செய்த சகல செலவுகளையும் உள்ளடக்கும்.

வழங்கப்படும் சேவையின் பரிமாணத்தை அதிகரிக்கும் நோக்குடன் சொத்துக்களைப் பெறுதல், புதுப்பித்தமைத்தல் மற்றும் மேலும் அவை வழங்கும் சேவையின் அளவை அபிவிருத்தி செய்வதற்காகச் செய்யப்படும் செலவுகளும் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

02.01.02 <u>தேய்மானம்</u>

சொத்துக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு குறைந்து வரும் முறையைக் கையாண்டு பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்	02.5 %
மோட்டார் வாகனங்கள்	10 %
அலுவலக உபகரணங்களும் மரத் தளபாடங்களும்	10 %
கணனி மற்றும் கணனி உபகரணங்கள்	10 %
நூலக உபகரணங்கள்	10 %
நூல் மட்டைகட்டும் உபகரணங்கள்	10 %
நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள்	10 %
இயந்திர சாதனங்களும் இயந்திரங்களும்	10 %
நூலிருப்பு - தேசிய நூலகம்	10 %
எண்மய சேகரிப்பு- தேசிய நூலகம்	10 %
Kiyawamu.lk	10 %

01.01.2014 இலிருந்து நிலையான சொத்துக்களில் அவற்றின் எஞ்சியுள்ள பாவனைக் காலத்திற்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ளதுடன் கொள்ளவனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக் கொண்ட வருடத்தில் அவற்றிற்குப் பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படவில்லை. 01.01.2014 ஆம் ஆண்டின் பின்னர் நூலிருப்புத் தவிர்ந்த கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட / ஈட்டப்பட்ட திகதியில் இருந்தே பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ளது. தேசிய நூலக நூலிருப்பில் 01.01.2014 ஆம் ஆண்டின் பின்னர் தேசிய நூலகம் கொள்வனவு செய்த நூல்களுக்கு அவை கொள்வனவு செய்யப்பட்ட / ஈட்டப்பட்ட திகதியில் இருந்தே பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ளது..

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
2019 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

02.02 காணி கட்டிடப் பெறுமதி மதிப்பீடு

தேசிய நூலகம் அமைந்துள்ள காணியும் கட்டிடமும் தனியாார் மதிப்பீட்டாளராக சொக்மன் அன்ட் சமரவிக்கிரம கம்பனியினால் 1995 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 16ஆம் திகதி கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ளவாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

காணி 318 பேர்ச் ஒரு பேர்ச் ரூபா 8,00,000.00 வீதம்	ரூ. 254,400,000.00
கட்டிடம் (பிரதான கட்டிடம்) கராஜ், பாதுகாப்பு அறை, நீர்தாங்கி,	
நீர் இறைக்கும் அறை, குளிரூட்டி மற்றும் மின்சாரக் கட்டிடம்)	ரூ. 84,807,400.00
மொத்தம்	**ரூ. 339,207,400.00**

02.03 தொக்குகள்

தொக்குகள் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

02.04 பெறவேண்டியவை

பெறவேண்டியவற்றில் தேறும் என மதிப்பிடப்பட்ட தொகையே பெறவேண்டியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

02.05. நிலையான சொத்துக்களின் உறுதிப்படுத்தல்

2014.12.31 ஆம் திகதி நிலையான சொத்துக்களைக் கணக்கிடும்போது அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், நூலக உபகரணங்கள், நூல் மட்டை கட்டும் உபகரணங்கள், நாட்டார் இலக்கிய மத்திய நிலைய உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றின் 31.12.2011 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்க அமைவாக அவற்றின் கொள்வனவுப் பெறுமதி கழிக்கப்பட்டு அவை அகற்றப்படும் போது உள்ள பெறுமதியைக் கூட்டுவதன் மூலம் கணிக்கப்பட்டுள்ளது.

ரூபா. 1,134,958.07 பெறுமதியாகவும் பௌதீகச் சொத்துக்களான அலுவலக தளபாடங்கள் மற்றும் உகனரணங்கள் மற்றும் ரூபா. 96,512,.16 பெறுமதியான நூலக உபகரணங்கள் போன்றன 2019.12.31 அன்று பௌதீக ரீதியில் இனங்காணப்படாத சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளன. அவை பௌதீக ரீதியில் காணப்படாமையால் அவற்றிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படவில்லை.

02.06 மூலதனக் கொடைகளை செலவு செய்யமுடியாத நிலையில் மீள்செலுத்துதல்

நடப்பு ஆண்டில் பிரயோசனப் படுத்தப்படாத மொத்த மூலதனக் கொடைகளும் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

02.07 நிலையான சொத்துக்களை அகற்றல்

நடப்பு வருடத்தில் அகற்றப்படவேண்டும் என இனங்காணப்பட்ட ரூபா 253,088/- பெறுமதியான நிலையான சொத்துக்கள் நடப்பாண்டில் அகற்றப்பட்டன.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
2019 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

03. பரிப்புக்களும் ஏற்பாடுகளும்

3.01 நிதிநிலை அறிக்கைகளில் நடைமுறை பரிப்புக்கள் என குறிப்பிடப்பட்டுள்ள பரிப்புக்கள் நிதிநிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் கேட்கும் போது பெற்றுக்கொள்ளப்படும் நிலை சார்ந்தவையாகும்.

நடைமுறையற்ற பரிப்புக்களாவன நிதிநிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுக்கப்படவேண்டிய கொடுப்பனவுகளைக் குறிக்கும்.

நிதி அறிக்கைகளைத் தயரிக்கும் தினத்தில் காணப்பட்ட சகல பரிப்புக்களும் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

3.02 இளைப்பாறல் பயன்கள்

சபையின் சகல ஊழியர்களும் சேவையாற்றத் தொடங்கி ஆண்டொன்று பூர்த்தியானதும் ஓய்வு காலப் பணிக் கொடுப்பனவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டள்ளது. எனினும் 1983 ஆம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்காலக் கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர் ஒருவர் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவையாற்றியதன் பின்னரே அவரின் பரிப்பு ஆரம்பிக்கிறது. இப் பரிப்பிற்கு வெளியில் இருந்து நிதி வழங்கப்படவில்லை.

3-03 ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பொருட்டு இனங்காணப்பட்ட ஊழியர் பங்களிப்புத் திட்டம்

சபையின் சகல ஊழியர்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பைச் செலுத்துவதற்கு தகைமை பெற்றுள்ளனர். சபை ஊழியர்களின் பொருட்டு முறையே 12% மற்றும் 3 % தை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்துகிறது.

3-04 செயல்பாட்டுக் குத்தகைக்கு வாகனத்தை வாடகைக்கு எடுத்தல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை ஒரு மோட்டார் வேன் மற்றும் ஒரு இரட்டை வண்டி வாகனத்தையும் செயல்பாட்டு குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தது. இந்த ஒப்பந்தம் 2018 செப்ரம்பர் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது 60 மாத காலத்திற்குள் நிறைவடையும். சபையினால் முறையே ரூ. 169,369/= + வரி மற்றும் ரூ. 164,300/= + வரி தொகை மாதந்தோறும் செலுத்தப்படுகின்றது.

04. நிதிச் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை

04.01 வருமானம்

a) சபையின் வருமானத்தின் கீழ் நூல் விற்பனைக்கூட வருமானம், கேட்போர் கூடங்களின் வாடகை வருமானங்கள், வட்டி வருமானங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

b) சகல வருமானங்களும் திரள் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

c) 2019 ஆம் ஆண்டில் (மீள் வரும் செலவாக ரூபா. 138,700,000/= வும் மூலதனக் கொடையாக ரூபா 13,250,000/= வும்) மீள்வரும் மற்றும் மூலதனச் செலவிற்காக அரசிடம் இருந்து கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

04.02 <u>வருமானங்களை இனங்காணல்</u>

a) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் திரள்நிதி அடிப்படையில் அமைந்துள்ள துடன் தொடர்புள்ள செலவினங்களுடன் இவை ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

b) வட்டி வருமானம் கால அடிப்படையில் ஒன்று திரட்டப்பட்டுள்ளது

04.03 <u>செலவினம்</u>

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் செயற்பாடுகள் மற்றும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறனுடன் பேணுவதற்காக சகல செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் வருமானமானத்திற்கு எதிராக செம்மையாக்கம் செய்யப்பட்டு ஆண்டின் குறைவாக / மேலதிகமாகக் காட்டப்பட்டுள்ளது.

05 <u>அரச கொடைகள்</u>

வருடத்தில் கிடைக்கப்பெற்ற அரச கொடைகள் ஒழுங்கான அடிப்படையில் தொடர்புடைய கிரயங்களுடன் ஒத்துப்பார்க்கப்பட்டு வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது.

06. நிதிப்பாய்ச்சல் அறிக்கை

இலங்கைப் பொதுத்துறை கணக்கியல் நியமம் - 02 நிதிப் பாய்ச்சல் அறிக்கையைப் பின்பற்றி மறைமுகமான முறைமையின் மூலம் நிதிப்பாய்ச்சல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

07. நிதிநிலை அறிக்கைத் திகதியின் பின் நடைபெறும் நிகழ்வுகள்

நிதி நிலை அறிக்கையின் பின்னர் நடைபெற்ற சகல விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு தேவையான இடத்து செம்மையாக்கம் செய்யப்பட்டு வெளிக்காட்டப்பட்டுள்ளன.

08. வங்கிக் கணக்கு

மக்கள் வங்கியின் இல.100113398963 நடைமுறைக் கணக்கானது திறைசேரியில் இருந்தும் ஏனைய நிறுவனங்களில் இருந்தும் கிடைக்கும் மூலதன கொடுக்கல்வாங்கல்களுடன் ஈடுபடுவதுடன் ஏனைய இரு வங்கிக் கணக்குகளும் ஏனைய கொடுக்கல்வாங்கல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

09. மேலதிக குறிப்பு

தேசிய நூலகத்தின் கட்டிடம் கடந்த வருடம் முதல் புதுப்பிக்கப்பட்டு வருகிறது மற்றும் மதிப்பிடப்பட்ட செலவீனம் ரூ. 211 மில்லியன் மற்றும் வரி ஆகும்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

	31.12.2019	31.12.2018
	ரூ.	ரூ.
குறிப்பு 1: காசும் காசுச் சமானங்களும்		
கணக்கு இலக்கம் 2323283 - இலங்கை வங்கி	3,385,131.00	4,009,444.00
கணக்கு இலக்கம்- 100113398963- மக்கள் வங்கி	3,641,271.00	16,458,960.00
கணக்கு இலக்கம் -100163170315- மக்கள் வங்கி	3,520,663.00	2,485,638.00
நூல் பரிமாற்றச்சேவைக்காக தே.சே.வங்கியில் வைப்பு	219,763.00	216,513.00
	10,766,828.00	**23,170,555.00**
குறிப்பு 2 : பெற்றுக்கொள்ள வேண்டியவை		
விழாக்கால முற்பணம்		71,750.00
65,500.00		
இடர் கடன்	14,034,822.00	13,061,388.00
விசேடமுற்பணக் கொடுப்பனவு	4,000.00	4,800.00
சில்லறைக் காசுக்கணக்கு முற்பணம்	4,714.00	4,713.00
நானாவித முற்பணக் கொடுப்பனவுகள்	286,722.00	220,134.00
பெறப்பட வேண்டியவை- அலுவலர்	40,000.00	20,000.00
	14,442,008.00	**13,376,535.00**

குறிப்பு 3: தொக்குகள்

நூலிருப்பு - சர்வதேச நூல் பரிமாற்றச் சேவை	106,435.00	106,435.00
நூலிருப்பு - விற்பனையும் பிரித்தளித்தலும்	4,625,048.00	4,581,263.00
நூலிருப்பு – பாரம்பரிய நூல்கள்	4,606,132.00	2,683,459.00
எழுதுகருவிகள் இருப்பு – நூலகம்	1,271,600.00	826,682.00
எழுதுகருவிகள் இருப்பு – அலுவலகம்	1,476,952.00	1,553,656.00
விற்பனைக் கூடத்தில் இருப்பு	4,367,633.00	2,774,993.00
நடைபெற்றுவரும் வேலை – புத்சரண	-	544,331.0
நடைபெற்றுவரும் வேலை- பன்சீய பனஸ் ஜாதக IV	170,677.00	-
	16,624,477.00	**13,070,819.00**

குறிப்பு 04- முற்பணக் கொடுப்பனவுகள்

திருத்தல் மற்றும் பேணல்- அலுவலக உபகரணம்	387,309.00	455,454.00
புகையிரத அனுமதிச்சீட்டு	77,503.00	93,860.00
காப்புறுதி, அனுமதிப்பத்திரம்- மோட்டார் வாகனம்	72,822.00	86,347.00
காப்புறுதி – சொத்துக்கள்	104,600.00	110,105.00
முற்பணக் கொடுப்பனவுகள் - ஏனைய	212,601.00	64,561.00
	854,835.00	**810,327.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

		31.12.2019	**31.12.2018**
	குறிப்பு	ரூ.	ரூ.
குறிப்பு 05 – வைப்புக்கள்			
எரிபொருளுக்கான வைப்பு		50,000.00	50,000.00
ஊழியர் பாதுகாப்பு வைப்புக்கள்- (தே.சே.வ.)		311,942.00	300,579.00
		361,942.00	**350,579.00**
குறிப்பு 06- உட்கட்டமைப்பு, இயந்திரங்களும் உபகரணங்களும்			
நூலக உபகரணங்கள்	6.1	26,206.00	26,206.00
நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள்	6.11	3,603.00	4 ,003.00
நூல் மட்டைகட்டும் உபகரணங்கள்	6.111	5,365,013.00	5,468,421.00
அலுவலக மரத்தளபாடங்களும் உபகரணங்களும்	6.IV	19,450,056.00	17,936,620.00
கணனியும் கணனி உபகரணங்களும்	6.V	9,774,154.00	10,207,655.00
தொகுதிகளும் இயந்திரங்களும்	6.VI	2,647,759.00	2,941,955.00
மோட்டார் வாகனங்கள்	6.VII	16,877,299.00	18,752,554.00
		54,144,090.00	**55,337,414.00**

குறிப்பு 07- காணியும் கட்டிடமும்

தேசிய நூலகக் கட்டிடம்	7.1	108,442,968.00	111,433,078.00
ிரதான களஞ்சியக் கட்டிடம்	7.11	437,521.00	448,740.00
		108,880,489.00	**111,881,818.00**

குறிப்பு 08 – ஏனைய நடைமுறையற்ற சொத்துக்கள்

நூலிருப்பு – தேசிய நூலகம்	8.I	33,892,847.00	34,007,394.00
தேசிய நூலகம் -எண்மய சேகரிப்பு	8.II	8,852,375.00	6,166,937.00
kiyawamu.lk	8.III	2,529,072.00	990,478.00
		45,274,294.00	**41,164,809.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

		31.12.2019	**31.12.2018**
	குறிப்பு	ரூ.	ரூ.
குறிப்பு 09 - செலுத்தவேண்டியவை			
மீள்செலுத்தவேண்டிய கேள்விப் பத்திர வைப்பு		378,000.00	393,000.00
பிடித்துவைக்கப்பட்ட பணம்		3,582,977.00	3,251,118.00
செலுத்தவேண்டிய முத்திரைக் கட்டணக்		-	11,125.00
செலுத்தவேண்டிய வரி		87,551.00	87,551.00
VAT செலுத்தவேண்டியது		249,056.00	1,028,739.00
WHT செலுத்தவேண்டியது		426,700.00	326,500.00
வியாபாரக் கடன்கள்		--	135,988.00
செலுத்தப்படவேண்டிய பணிக்கொடை		--	208,479.00
		4,724,284.00	**5,478,500.00**

குறிப்பு 10- திரண்ட செலவினம்

மேலதிக நேரம் & விடுமுறைக் கொடுப்பனவுகள்	250,052.00	147,690.00
கட்போர்கூட கொடுப்பனவு	5,600.00	3,600.00
விருந்தோம்பற் செலவுகள்	42,750.00	28,655.00
பிரயாணம் - ஊழியர்- உள்நாடு	8,470.00	27,070.00
நலன்புரிச் செலவுகள்	123,347.00	--
அலுவலக எழுது கருவிகள்	-	33,700.00
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள்	49,760.00	10,372.00
துப்புரவாக்கற் செலவுகள்	271,205.00	222,606.00
தொலைபேசி	87,016.00	285,988.00
மின்சாரம்	1,179,206.00	1,270,680.00
தண்ணீர்	46,909.00	55,952.00

தகவல் தொழில்நுட்பம்- இணையச் செலவுகள்	18,024.00	18,877.00
பாதுகாப்புச் செலவுகள்	324,772.00	309,901.00
திருத்தியமைத்தலும் பராமரிப்பும் - அலுவலக உபகரணம்	143,570.00	9,000.00
சபை வளாக பராமரிப்பு	6,000.00	--
நூலக ஆலோசனைச் சேவை மற்றும் விரிவாக்கற்சேவை	-	5,000.00
தேசிய வாசிப்புமாதச் செலவுகள்	2,040.00	71,500.00
நூல் அபிவிருத்திச் செயற்திட்ட செலவுகள்	--	1,443,913.00
புதிய வெளியீடுகளின் கொள்வனவு	16,112.00	--
பேணல் மற்றும் திருத்தியமைத்தல் செலவுகள்	--	14,357.00
கிராம நூலக அபிவிருத்தி	527,755.00	--
நூலிருப்பு – தேசிய நூலகம்	1,207,724.00	--
நூலக எழுதுகருவிகள் இருப்பு	796,950.00	--
ஏனைய திரண்ட செலவுகள்	14,000.00	317,043.00
கணக்காய்வுக் கட்டணம்	4,460,450.	3,485,450.00
	9,581,712.00	**7,761,354.00**

தசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்
குறிப்பு 6, 7, 8

குறிப்பு	விபரம்	தேய்மான வீதம்	2019.ஜனவரி 01ஆம் சேர்த்தல் திகதிய பெறுமதி	சேர்த்தல்	அகற்றுதல்	மொத்த பெறுமதி	2019ஜனவரி.01.திகதி ஜனவரியில் திரண்ட தேய்மானம்	கூட்டல் ∴ கழித்தல்	2019ஆம் ஆண்டிற்கான தேய்மானம்	மொத்தத் தேய்மானம்	தேறிய பெறுமதி
6.I	நூலக உபகரணங்கள்	10%	96,512.16	-	-	**96,512.16**	70,305.92	-	-	**70,305.92**	**26,206.24**
6.II	நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள்	10%	46,874.00	-	-	**46,874.00**	42,871.11	-	400.29	**43,271.40**	**3,602.60**
6.III	நூல் மட்டைகட்டும் உபகரணங்கள்	10%	8,639,007.00	483,000.00	-	**9,122,007.00**	3,170,586.07	-	586,408.40	**3,756,994.47**	**5,365,012.53**
6.IV	அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	10%	36,327,118.80	3,357,014.50	(253,808.70)	**39,430,324.60**	18,390,499.04	(233,507.15)	1,823,277.47	**19,980,269.36**	**19,450,055.24**
6.V	கணனி மற்றும் கணனி உபகரணங்கள் .	10%	17,912,692.68	618,400.00	-	**18,531,092.68**	7,705,038.28	-	1,051,900.24	**8,756,938.52**	**9,774,154.16**
6.VI	இயந்திரத் தொகுதியும் இயந்திரங்களும்	10%	7,120,653.72	-	-	**7,120,653.72**	4,178,699.26	-	294,195.45	**4,472,894.71**	**2,647,759.01**
6.VII	மோட்டார் வாகனங்கள்	10%	32,270,761.74	-	-	**32,270,761.74**	13,518,207.80	-	1,875,255.39	**15,393,463.19**	**16,877,298.55**
7.I	தேசிய நூலகக் கட்டிடம்	2.5%	144,647,434.78	-	(209,521.22)	**144,437,913.56**	33,214,356.61	-	2,780,588.92	**35,994,945.53**	**108,442,968.03**
7.II	பிரதான களஞ்சியக் கட்டிடம்	2.5%	803,320.09	-	-	**803,320.09**	354,580.08	-	11,218.50	**365,798.58**	**437,521.51**
8.I	நூலிருப்பு - தேசிய நூலகம்	10%	108,431,271.41	3,484,786.00	-	**111,916,057.41**	74,423,876.87	-	3,599,332.81	**78,023,209.68**	**33,892,847.73**
8.II	தேசிய நூலகம் எண்மயச் சேகரிப்பு	10%	7,036,661.30	3,339,950.35	-	**10,376,611.65**	869,724.03	-	654,512.62	**1,524,236.65**	**8,852,375.00**
8.III	**kiyawamu.lk**	10%	998,880.00	1,727,121.60	-	**2,726,001.60**	8,401.53	-	188,528.03	**196,929.56**	**2,529,072.04**
	மொத்தம்		**364,331,187.68**	**13,010,272.45**	**(463,329.92)**	**376,878,130.21**	**155,947,146.60**	**(233,507.15)**	**12,865,618.12**	**168,579,257.57**	**208,298,872.64**

6.I நூலக உபகரணங்களின் பெறுமதி தொடர்பான சொத்துக்கள் உண்மை நிலையை கண்டுகொள்ள முடியாதபடியால் அவற்றிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படவில்லை

குறிப்பு 11 - ஊழியர் நலன்

ஊழியர் ஆரம்ப பாதுகாப்பு வைப்புக்கள்	175,253.00	175,253.00
ஊழியர் பாதுகாப்பு வைப்பு வட்டி	139,689.00	128,326.00
	314,942.00	**303,579.00**

குறிப்பு 12 – ஏனைய நடைமுறைப் பரிப்புக்கள்

பிற நிறுவனங்களிடமிருந்து திருப்பி செலுத்தக்கூடிய செலவு	(234,760.00)	--
பொது கடன் வழங்குநர்	989,372.00	12,958,980.00
	754,612.00	**12,958,980.00**

குறிப்பு 13 – மூலதனம் / ஏனைய நிறுவனங்கள் வழங்கிய கொடைகள்

கொடை மற்றும் அன்பளிப்புக் கணக்கு முற்கொண்டுவந்த மீதி	7,030.00	7,030.00
கூட்டு: பிற மூலங்களில் இருந்து பெற்ற மூலதனம்	--	--
	7,030.00	7,030.00
வருடத்திற்கான செம்மையாக்கம்	--	--
	7,030.00	**7,030.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

		31.12.2019	31.12.2018
	குறிப்பு	ரூ.	ரூ.

குறிப்பு 14 - ஒதுக்கங்கள்

மூலதனச் செலவுகளுக்கான அரச கொடை

மீதி முன்கொண்டுவந்தது	2,881,696.00	23,678,741.00
செம்மையாக்கம்	--	(1,229,954.00
	2,881,696.00	22,448,787.00
கூட்டு- திறைசேரியில் இருந்து பெற்றுக்கொண்டது	13,250,000.00	18,025,511.00
	16,131,696.00	40,474,298.00
கழி : மூலதனச் சொத்துக்களின் கொள்வளவு	(13,010,272.00)	(37,592,602.00)
மீள்வரும் செலவுகளுக்கான மூலதனம்	(2,162,277.00)	--
	959,147.00	**2,881,696.00**

குறிப்பு 15 – திரண்ட நிதியம்

முற்கொண்டுவந்த மீதி	194,486,401.00	171,642,467.00
ஆண்டிற்கான செம்மையாக்கம்	765,276.00	
	194,486,401.00	**172,407,743.00**

கூட்டுதல் / கழித்தல்

செலவுக்கு மேலான மொத்த வருமானம்	(11,465,100.00)	(15,513,944.00)
மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு	13,010,272.00	37,592,602.00
	196,031,573.00	**194,486,401.00**

குறிப்பு 16 – நூல் விற்பனைக்கூட விற்பனைக் கணக்கு

நூலக எழுதுகருவிகள் விற்பனை	1,315,345.00	--
நூல் மட்டைக் கட்டும் பொருட்கள் விற்பனை	98,690.00	--
நூல் அபிவிருத்தி செயற்திட்ட நூல் விற்பனை	(399,215.00)	--
தும்மல எண்ணெய்	12,500.00	--
எழுதுகருவிகள் விற்பனை	135,125.00	--
நூல் விற்பனைக்கூட விற்பனைக் கணக்கு	1,592,640.00	1,900,258.00
	2,755,085.00	**1,900,258.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

		31.12.2019	**31.12.2018**
	குறிப்பு	ரூ.	ரூ.
குறிப்பு 17 – கட்டணங்களும் வாடகைக் கட்டணங்களும்			
கையெழுத்துப்பிரதிகள்- வாசிப்பதற்கான கட்டணம்		156,172.00	85,929.00
சகர் பதிவினால் கிடைத்த கட்டணம்		366,592.00	599,950.00
ISBN செயற்திட்டக் கட்டணம்		1,295,868.00	1,075,050.00
நூலக சேவைகள் கட்டணம்		1,187,433.00	644,804.00
		3,006,065.00	**2,405,733.0**
குறிப்பு : 18- வட்டி வருமானம்			
துயர் கடன்		548,156.00	531,667.00
விசேட முற்பணம்		6,137.00	2,730.00
ஏனைய வட்டிகள்		3,250.00	3,474.00
		557,543.00	**537,871.00**
குறிப்பு 19 – வெளியீடுகளுக்கான சந்தா			
தேசிய நூற்பட்டியல் விற்பனை		361,491.00	95,255.00
சபை வெளியீடுகள் விற்பனை		554,996.00	749,071.00
		916,487.00	**844,326.00**
குறிப்பு 20 – ஏனைய வருமானங்கள்			
போட்டோப் பிரதிக் கட்டணம்		392,683.00	188,516.00
கேள்விப் பத்திர விற்பனை		24,500.00	60,000.0
நூல் அபிவிருத்தித் திட்ட விண்ணப்பப்படிவ விற்பனை		51,750.00	149,352,.00
நூலக தரநிர்ணயம் செய்வதற்கான கட்டணம்		123,000.00	221,500.00
பிற கொடை		50,000.00	--
நாநாவித வருமானம்		1,349,813.00	1,836,434.00
		1,772,227.00	**2,159,918.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

	குறிப்பு	31.12.2019 ரூ.	31.12.2018 ரூ.
குறிப்பு 21 - நூலக சேவைச் செலவுகள்			
அங்கத்துவக் கட்டணம்: சர்வதேச நூலகங்கள்		180,342.00	319,473.00
சர்வதேச பரிமாற்றச் சேவை		27,461.00	--
நூலீட்டற் செலவுகள்		35,712.00	38,727.00
வாசகர் கல்வி மற்றும் விளம்பரச் செலவுகள்		425,400.00	1,023,920.00
நூலக ஆய்வுச் செலவுகள்		612,019.00	449,935.00
தேசிய நூற்பட்டியல் வெளியீடு		540,453.00	228,309.00
சமூக விஞ்ஞான ஆவணவாக்கல் செலவு		--	30,705.00
நூலக ஆலோசனை மற்றும் விரிவாக்கற் சேவை		183,489.00	301,796.00
நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்கள்		2,023,052.00	3,697,965.00
தேசிய வாசிப்பு மாத செலவுகள்		1,437,659.00	1,098,275.00
கிராம நூலக அபிவிருத்தி		37,165.00	2,880,905.00
நூலக விசேட தினங்களைக் கொண்டாடுதல்		297,409.00	145,985.00
தகவல் தொழில்நுட்பச் செலவுகள்		70,426.00	58,308.00
இணையத்தினாலான செலவுகள்		234,276.00	244,843.00
நூலகக் கல்வி மாநாடுகள்		924,370.00	421,153.00
மாநாடுகள், விரிவுரைகள் & பயிற்சி நெறிகள்		279,843.00	437,510.00
விசேட பாடநெறிக் கட்டணம்		215,758.00	456,993.00
கையெழுத்துப்பிரதி மதிப்பாய்வுக் கட்டணம்		312,281.00	755,008.00
பாரம்பரிய நூல்களை பதிப்பித்தல் மற்றும் வெளியீடல்		689,627.00	255,074.00
நூலக இலக்கியங்கள் மற்றும் வெளியீட்டுச் செலவுகள்		474,293.00	588,479.00
சர்வதேச நியம நூல் இலக்கம்		382,183.00	374,122.00
நூல் பேணல் மற்றும் திருத்தியமைத்தல்		1,572,441.00	2,011,285.00
நூலகக் கூட்டுறவுச் செலவுகள்		162,165.00	20,950.00
டிஜிடல் நூலக செலவுகள்		6,000.00	--
ஊழியர்களின் திறன் விருத்தி		450,700.00	--
கிராம நூலக அபிவிருத்தி		1,711,577.00	--
		13,286,101.00	**15,859,720.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

	குறிப்பு	31.12.2019 ரூ.	31.12.2018 ரூ.
குறிப்பு 22- நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்			
சம்பளம், கூலி மற்றும் ஊழியர் கொடுப்பனவு	22.1	96,985,444.00	101,823,574.00
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	22.2	32,762,865.00	31,484,755.00
மூலதனச் சொத்துத் திருத்தல் மற்றும் பேணல்	22.3	4,885,568.00	3,898,184.00
தேய்மானம் அல்லது தேய்மானக் கிரயம்	22.4	12,865,617.00	10,945,013.00
ஏனைய செலவுகள்	22.5	1,084,682.00	997,668.00
		148,584,176.00	**149,149,194.00**

குறிப்பு 23 – நிதிக் கிரயம்

வங்கிக் கட்டணம்	33,112.00	42,219.00
– –	**33,112.00**	**42,219.00**

குறிப்பு – 22.1- சம்பளம் மற்றும் ஊழியர் கொடைகள்

சம்பளம் மற்றும் கூலி	73,976,599.00	78,505,936.00
ஊழியர் சேமலாப நிதியம்	8,316,789.00	8,231,604.00
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	2,079,197.00	2,058,514.00
மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	2,348,969.00	1,898,690.00
பணிக்கொடை	6,830,283.00	7,011,403.00
சபை அங்கத்தவர் ஊதியம்	1,182,400.00	883,800.00
குழு அங்கத்தவர் ஊதியம்	246,100.00	349,600.00
கேட்போர் கூடக் கொடுப்பனவு	45,100.00	157,900.00
பிரயாணச் செலவுகள்	297,424.00	389,937.00
வெளிநாட்டுப்பிரயாணங்கள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள்	292,211.00	623,385.00
ஊழியர் சீருடை	45,750.00	34,311.00
வைத்தியப் பரிசோதனைச் செலவுகள்	24,500.00	21,250.00
நலம்பேணற் செலவுகள்	380,099.00	831,392.00
விருந்தோம்பற் செலவுகள்	207,240.00	203,224.00
புகையிரத அநுசரணைப் பத்திரங்கள்	610,477.00	505,860.00
போட்டிப் பரீட்சைக் கட்டணம்	102,306.00	116,768.00
	96,985,444.00	**101,823,574.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

		31.12.2019	31.12.2018
	குறிப்பு	ரூ.	ரூ.
குறிப்பு 22.2- வழங்கல்களும் நுகர் பொருட் செலவுகளும்			
அலுவலக எழுது கருவிகள்		2,202,174.00	1,902,269.00
சபைச் சொத்துக்களுக்கான காப்புறுதி		144,972.00	146,506.00
மோட்டார் வாகனக் காப்புறுதி		498,095.00	469,503.00
ரிபொருட் செலவு		1,305,695.00	1,417,335.00
தொலைபேசிச் செலவுகள்		1,829,803.00	1,919,383.00
மின்சாரச் செலவுகள்		11,658,894.00	15,622,419.00
நீர்க் கட்டணச் செலவுகள்		527,895.00	553,848.00
பாதுகாப்புச் செலவுகள்		4,161,542.00	3,229,485.00
தூய்மைப்படுத்தும் செலவுகள்		3,078,825.00	3,104,890.00
செயல்பாட்டு குத்தபை வாடகை		4,896,942.00	1,534,880.00
அச்சிடல் செலவுகள்		40,044.00	257,721.00
புதினத்தாள்கள் மற்றும் வெளியீடுகள்		196,060.00	181,320.00
விளம்பரச் செலவுகள்		1,259,834.00	604,181.00
தபால்செலவு		476,873.00	491,535.00
பற்றுச் சீட்டுகளின் முத்திரை கட்டணம்		1,650.00	--
திட்டமிடல் செலவுகள் / மொழிபெயர்ப்புக் கட்டணம்		423,567.00	49,480.00
		32,762,865.00	**31,484,755.00**

குறிப்பு 22-.3 மூலதனச் சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பு

கட்டிடப் பராமரிப்பு	680,836.00	179,227.00
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு	2,412,761.00	1,773,126.0
சபைக் காணிப் பராமரிப்பு	350,851.00	232,496.00
மோட்டார் வாகனங்கள் பராமரிப்பு	1,441,120.00	1,713,335.00
	4,885,568.00	**3,898,184.00**

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

	குறிப்பு	31.12.2019 ரூ.	31.12.2018 ரூ.
குறிப்பு 22.4 தேய்மானம் மற்றும் தேய்மானப்படுத்தப்பட்ட செலவு			
தேய்மானம்		12,865,617.00	10,945,013.00
		12,865,617.00	**10,945,013.00**
குறிப்பு 22.5 ஏனைய செலவுகள்			
கணக்காய்வுக் கட்டணம்		975,000.00	975,000.00சட்டச்
செலவுகள்		92,940.00	7,276.00
நானாவித செலவுகள்		16,742.00	15,392.00
		1,084,682.00	**997,668.00**

2019 செம்பர் 31ம் திகதி முடியடைந்த ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கம் மற்றும் உண்மையான செலவினம் தொடர்பான அறிக்கை

விபரம்	அனுமதிக்கப்பட்ட மீள்பாதீடு	உண்மையான செலவு	வித்தியாசம்	காரணம்
மீள்வரும் செலவினம்				
தனிநபர் கொடுப்பனவு	107,434,000.00	96,350,000.00	11,084,000.00	உண்மையான முற்பணம் தனிநபர் கொடுப்பனவிற்கான உண்மையான செலவில் பெறப்பட்டது.
பிரயாணச் செலவுகள்	800,000.00	589,000.00	211,000.00	தேசிய நூலகத்தின் செயற்பாடுகளுக்கான தேவையான உள்நாட்டுப் பயணம்.
வழங்கல்களும் நுகர்வுகளும்	5,429,000.00	3,554,000.00	1,875,000.00	அரசாங்க அறிவுறுத்தல்களின் படி தேவையற்ற பாவனையை கட்டுபடுத்தியமை
பேணற் செலவுகள்	5,215,000.00	4,886,000.00	329,000.00	பொருட்களில் வித்தியாசம் இன்மை. (வித்தியாசம் 7% க்கும் குறைவாக உள்ளது.)
ஏனைய சேவைகள்	41,073,200.00	30,373,000.00	10,700,200.00	திறைசேரியில் இருந்து குறைந்தளவு பணம் கிடைத்ததும், பாவனைக் கட்டுப்பாடும்
நூலக சேவைகள்	16,548,800.00	13,286,000.00	3,262,800.00	திறைசேரியில் இருந்து குறைந்தளவு பணம் கிடைத்ததும், இவ்வருடம் எதிர்பாராத சூழ்நிலையால் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதமும்.
	176,500,000.00	**149,038,000.00**	**27,462,000.00**	
மூலதனம்				
நிலையான சொத்துக்கள் கொள்வனவு	6,750,000.00	4,458,000.00	2,292,000.00	ஒரு மூலதன வேலை மட்டும் முடிக்கப்படாமை
நூலக வளக் கொள்வனவு	9,500,000.00	8,552,000.00	948,000.00	கொள்முதல் திட்டத்தின் படி மூலதன வேலைகள் 90% க்கும் மேல் செய்யப்பட்டுள்ளன.
	16,250,000.00	**13,010,000.00**	**3,240,000.00**	

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, சபையின் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் தேசிய புத்தகக் காப்பகத்தை நிறுவுதல், பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல் முக்கிய பணிகளில் ஒன்றாக இருந்தது. அதன்படி, சபையின் வழக்கமான வைப்புத்தொகை, நன்கொடைகள், கொள்வனவுகள், பறிமாற்றல் சேவைகள் போன்றவாறு சபைக்கு கிடைத்திருந்த போதிலும், ரூபா 111,916,057 கூட்டுத்தொகையான கொள்வனவுப் பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களின் புத்தக இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், நிறுவனத்தின் பிரதான நோக்கங்களின் பிரகாரம், புத்தகங்களை வகைப்படுத்தல், புத்தகங்களின் பெறுமதிகளை இனங்காணல் அல்லது பெறுமதியை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படாத புத்தகங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை மற்றும் தேசிய மரபுரிமையொன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ள புத்தகங்கள் தொடர்பில் கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2018 செப்தம்பர் 05 ஆந் திகதி முதல் 60 மாதங்களினுள் செலுத்தி தீர்ப்பனவு செய்யும் அடிப்படையில் செயற்பாட்டு குத்தகை முறையில் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த இரு வாகனங்களுக்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டிய ரூபா 14,681,436 கூட்டுத்தொகையான வரி நீங்கலாக ஆகக் குறைந்த குத்தகைப் பெறுமதி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் 43(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 296,643 கூட்டுத்தொகையான நேரடி செலவு வைத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக களஞ்சிய இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் களஞ்சியத்தின் பௌதீக புத்தக இருப்பின் மற்றும் உன்னதமான நூல்களை மீள அச்சிடும் செயற்திட்டத்தின் கீழ் பௌதீக புத்தக இருப்பின் முறையே ரூபா 187,686 மற்றும் ரூபா 1,922,912 ஆன பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த பற்றாக்குறையை இறுதி இருப்பிற்கு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 2,110,598 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சபையின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 111,916,057 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பயன்பாட்டு பதிவேட்டின் அடிப்படையில் இந்த புத்தக இருப்பின் கிரயம் ரூபா 45,524,068 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 66,391,989 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், இந்த வேறுபாட்டினை இனங்கண்டு உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை

ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்கு அத்தியாவசியமானது என கருதப்படும் அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெற்றதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகள் அதிகாரச்சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்காலாக முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு		**விபரம்**
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	
	நிதிப்பிரமாணம் 756, 757	2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 111,916,057 இற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள புத்தக இருப்பு மற்றும் தேசிய புத்தகசாலையில் பாதுகாக்கப்பட்ட புத்தக இருப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)	2018 ஆம் ஆண்டு முதல் Quick Book கணினி மென்பொருளின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான

	ஆம் பிரிவு	பேரேட்டுப் பதிவுகள் தொடர்ச்சியாகவும், கால அடிப்படையில் பதிவு செய்யப்படுவதில்லை என்பதுடன், 2022 யூலை 20 ஆந் திகதி வரையிலும் 2020 சனவரி மாதத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணினி மென்பொருளினுள் உள்ளடக்கப்படுகின்றமை கணக்காய்வுக்கு அவதானிக்கப்பட்டது.
(இ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம்	நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 738 நாள் தாமதத்தின் பின்னர் 2022 மார்ச் 08 ஆந் திகதியே கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
(ஈ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான் ரூபா 376,878,130 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.
(உ)	2012 மே 22 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானம்	சபையின் முன்னாள் பணிப்பாளரின் 2010 ஆம் ஆண்டின் போது சட்டரீதியற்ற விதத்தில் சம்பளமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 247,500 தொகை மீள அறவிடப்பட்ட பொது முயற்சிகள் குழுவிற்கு அறிக்கையிடுமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2022 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அந்த கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

அதிகாரங்கள், பணிப்பொறுப்புகள் மற்றும் பணிகள்		அவதானிப்புகள்
1998 இன் 51 ஆம் இலக்க தேசிய வாசிகசாலை மற்றும் ஆவணமாக்கல் சேவை சபை அதிகாரச்சட்டம்		
(அ)	12(2)(அ), (ஆ), (உ) ஆம் பிரிவு	வாசிகசாலை மற்றும் ஆவணமாக்கல் வளங்கள் தொடர்பான தேசிய காப்பகமொன்றை வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருள் காப்பகமொன்றை நிறுவுதல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் சபைக்கு சாட்டப்பட்டுள்ள பணிப்பொறுப்புகள், நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் தொடர்பிலான தீர்மானங்கள் சபையின் பாதுகாப்பு மற்றும் மீள்நிறுவல், கையகப்படுத்துதல் மற்றும் நூலியல் கட்டுப்பாடு பற்றிய மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், அந்த துறைகளில் போதியளவான பணிப்பொறுப்பொன்று கையில் காணப்பட்டது. 2022 யூன் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக கையகப்படுத்துதல் மற்றும் நூலியல் கட்டுப்பாடு துறைகளில் முறையே 2018 ஆம் ஆண்டு முதல் கையிருப்பில் காணப்படுகின்ற புத்தகங்கள் மற்றும் 5,288 வெளியீட்டு அலகுகள் மற்றும் 1,880 பாதுகாப்பு மற்றும் மீளுருவாக்கல் பிரிவில் மதிப்பிடப்பட்ட தரவுகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட சிறிய, நடுத்தர மற்றும் முழுமையான திருத்தங்கள் தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் 33,353 வெளியீட்டு அலகுகளாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாக கையிருப்பில் காணப்படுவதாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.
(ஆ)	12(2)(ஆ) பிரிவு	தேசிய புத்தகசாலை கட்டிடத்தின் நவீனமயப்படுத்தும் பணிகள் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட காரணத்தால் 2018 ஆகஸ்ட் மாதம் முதல் பாதுகாப்பு

மற்றும் மீளுருவாக்கல் பிரிவின் கீழ் காணப்பட்ட ரூபா 3,660,547 கிரயமான உபகரணங்களுடன் இரசாயன ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், இடத்திலிருந்து அகற்றப்பட்டமையால் அதன் பணிகள் 2022 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் நிறுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலுமான 04 வருட காலம் இரசாயன ஆய்வுகூடத்தில் நிறைவேற்றப்படும் சிதைவடைந்துள்ள புத்தகங்களின் மீளமைத்தவ் (tissue) பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராமை, தேசிய வாசிகசாலையின் புத்தக இருப்பின் பாதுகாப்பு எண்ணக்கரு போதியளவில் நிறைவேறியிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

2.3 ஏனைய விடயங்கள்

சபையினால் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அச்சிடப்பட்டிருந்த ரூபா 2,084,167 பெறுமதியான 8,053 சபையின் வெளியீடுகளின் இருப்பு 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.